# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ்பத்திரிகை

மாத இதழ் 510 | 2001 ஆகஸ்ட் | ரூபா 10.00


SEP 2001 ... OF JAFFNA

## உள்ளே


- அரசாங்கம் இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுக்கும் ஒரு குற்றச்சாட்டுக்கும் முகம் கொடுக்கின்றது......2
- சட்ட மா அதிபர் தமிழ் கைதிகளுக்கான பிணை மனுவை ஒத்திவைத்துள்ளார்......3
- ஜனாதிபதி நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பைத் தவிர்க்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளார்......4
- சமசமாஜக் கட்சி ஜனாதிபதியின் சர்வாதிகார நடவடிக்கைகளுக்கு பரிந்துரையாளராக தொழிற்படுகின்றது......5
- இந்திய மாநிலத் தேர்தல் ஆளும் பீ.ஜே.பி. மீதான வெறுப்பை அம்பலப்படுத்தியுள்ளது......8
- அமெரிக்க அரசியல் நெருக்கடியின் உலக வரலாற்றுத் தாக்கங்கள்......9
- கூட்டரசாங்க முக்கிய பங்காளி விலகியதால் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சிறுபான்மையாகியுள்ளது......13
- யாழ்ப்பான நூலகம் தீ மூட்டப்பட்டு இரண்டு தசாப்தங்கள்......14
- ச.நா.நி. இலங்கையில் பாரதூரமான சந்தை சீர்திருத்தங்களை செய்யும்படி வலியுறுத்துகின்றது......15


**திகிலூட்டும் அரச குடும்பப் படுகொலைகள் நேபாளத்தை அரசியல் குழப்பத்துள் மூழ்கடித்துள்ளது**

**10 – 11 பக்கம்**

# சோசலிச சமத்துவக் கட்சி அதிகாரக் குவிப்பு ஆட்சியை எதிர்க்கின்றது

பின்வரும் பேச்சு எதிர்வரும் இலங்கை கருத்துக் கணிப்பை முன்னிட்டு சோசலிச சமத்துவக் கட்சி அரசியல் குழு உறுப்பினரும் உலக சோசலிச வலைத் தள ஆசிரியர் குழு அங்கத்தவருமான கே.ரத்னாயக்கவினால் அரசுடமை தொலைக் காட்சியில் ஜூலை 30ம் திகதி நிகழ்த்தப்பட்டதாகும். சோசலிச சமத்துவக் கட்சிக்கு மேலும் இரண்டு 15 நிமிட உரைகளை நிகழ்த்த அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒன்று தமிழாகும்.

ஜூலை மாத தொடக்கத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருத்துக் கணிப்பை நடாத்துவது பற்றி அறிவித்ததோடு அவளின் சிறுபான்மை அரசாங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் எதிர்ப்புக்கு முகம் கொடுப்பதை தவிர்க்கும் பொருட்டு பாராளுமன்ற கூட்டத் தொடரையும் ஒத்தி வைத்தார். அரசியலமைப்புச் சட்டத்திலான திருத்தங்கள் என்ன என்பது பற்றி திட்டவட்டமாக எதுவும் குறிப்பிடப்படாது இந்தக் கருத்துக் கணிப்பு அரசியலமைப்புக்கு வாக்காளர் ஆதரவா என்ற கேள்விய்ய மட்டுமே எழுப்புகின்றது.

சோசலிச சமத்துவக் கட்சியின் இப்பேச்சு அரசாங்கத்தின் தணிக்கை விதிகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் ஒலிபரப்பு தொடர்பான கண்டிப்பான விதிமுறைகளுக்கும் அமைவானது. எந்த ஒரு தனி நபரதோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினதோ பெயர் குறிப்பிடப்படலாகாது என்பதும் இதில் அடங்கும். தொலைக் காட்சி நிலைய முகாமைத்துவம் எந்த ஒரு பேச்சையும் நிராகரிக்கும் அல்லது வெட்டும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது. பேச்சில் இடம்பெறும் விடயம் "பொதுஜன நலனை கொண்டதாக விளங்க வேண்டும்." "உள்ளன்புக்கு அல்லது நாகரீகத்துக்கு தீங்கு விளைவிப்பதாக அல்லது குற்றங்களில் ஈடுபடத் தூண்டுவதாக அல்லது குழப்பத்துக்கு இட்டுச் செல்வதாக அல்லது எந்த ஒரு இன, மத போக்குகளையும் அல்லது பொதுஜன உணர்வுகளையும் தூண்டிவிடுவதாக" விளங்காததாக இருக்க வேண்டும் என்கிறது.

பேச்சில் குறிப்பிடப்பட்ட கட்சிகள் எவை என்பதை காட்ட குறிப்புக்கள் அடியில் தரப்பட்டுள்ளன.

எதிர்வரும் கருத்துக் கணிப்பில் இந்நாட்டு உழைக்கும் மக்களின் எதிரில் திட்டவட்டமான முறையில் தலையெடுத்துள்ள பிரச்சினைகள் பின்வருபவைதான்:

ஜனாதிபதி இந்தக் கருத்துக் கணிப்புக்கு அழைப்பு விடுத்துள்ளது ஏன்? ஆட்சியில் உள்ள அரசாங்கம் தயாராகுவது எந்த வகையான ஆட்சி முறைக்கு? இந்நிலைமையினுள் தொழிலாளர் வர்க்கத்துக்குள்ள பதிலீடு என்ன?

கருத்துக் கணிப்புக்காக முன்வைக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு: "தேசிய முக்கியத்துவமும் அவசியமும் கொண்ட புதிய அரசியலமைப்புச் சட்டம் நாட்டுக்கு அவசியமா?."

பிரச்சினை சாதாரணமான ஒன்றாகத் தோன்றுகின்றது. எனினும் கடந்த சில வாரங்களாக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் கருத்துக் கணிப்பின் பின்னணியில் ஆளும் வர்க்கம் எந்த விதத்திலான ஆட்சி முறைக்கு தயாராகின்றது என்பதைச் சுட்டிக் காட்டிக் கொண்டுள்ளன. அவசரகால சட்டத்தை நிறைவேற்ற முடியாது போனதும் பயங்கரவாத தடைச் சட்டம், அத்தியாவசிய சேவைகள் சட்டம் உள்ளடங்கலான பொதுஜன பாதுகாப்புச் சட்டம் விதிக்கப்பட்டது. அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுப்பதைத் தவிர்க்கும் பொருட்டு பாராளுமன்றம் இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. கருத்துக் கணிப்பின் பேரால் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் தடை செய்யப்பட்டன. தமது தேவைகளின் பேரில் எதிர்க் கட்சி ஊர்வலத் தடையை மீறிச் சென்ற வேளையில் ஊர்வலத்துக்கு எதிராக பொலிசாரைப் பாவித்து கண்ணீர் புகை பாவித்ததோடு துப்பாக்கிச் சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர். பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகள் விமானத் தளத்துக்கும் விமானப் படை முகாமுக்கும் தாக்குதல் தொடுத்ததைத் தொடர்ந்து தெற்கை 'நிலைகுலையச்' செய்யக் கூடாது எனவும் அவசரகாலச் சட்ட ஆட்சி அவசியம் எனவும் கூறும் பிரச்சாரம் ஆரம்பமாகியுள்ளது.

கருத்துக் கணிப்புக்கு அழைப்பு விடுத்ததோடு சமீபத்தில் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்திய ஜனாதிபதி நாட்டுக்கு "உறுதியான அரசாங்கம்" அவசியம் என வலியுறுத்தினார். பெரும் வர்த்தகர்களுக்கும் அரசாங்கத்துக்கும் உறுதியான அரசாங்கம் அவசியப்படுவது மேற்கத்தைய வல்லரசுகளும் சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் பெரும் வர்த்தகர்களும் உத்தரவிட்டுள்ள அரசியல்- பொருளாதார நிகழ்ச்சி நிரலை நடைமுறைக்கு இடுவதற்கே தவிர வேறொன்றுக்காகவும் அல்ல.

வெளிநாட்டுச் செலாவணி நெருக்கடியை தவிர்த்துக் கொள்ளத் துடிக்கும் அரசாங்கத்துக்கு கடன் பெறுவதற்காக உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தி, ஒத்திவைக்க முடியாது இருந்த கடன்களின் நிபந்தனைகளில் அரச துறையை இழுத்து மூடுவது, தனியார்மயமாக்கம், தொழில் வெட்டு, சமுர்தி (சுபீட்சம்) போன்ற அற்பசொற்ப நலன்புரி உதவிகளுக்கு முடிவு கட்டுதல், இலவசக்

16ம் பக்கம் பார்க்க

# பொதுத் தேர்தல் பிரித்தானிய அரசியலில் பிரமாண்டமான மாற்றத்துக்கு முன்னெச்சரிக்கை செய்கிறது

பிரித்தானிய சோசலிச சமத்துவக் கட்சியின் அறிக்கை ஜூன் 14, 2001

தொழிற் கட்சி அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருந்து கொண்டுள்ளது போல் தோன்றினாலும் தொழிற் கட்சி இரண்டாவது ஆட்சிக் காலத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டமை பிரித்தானியாவிலான அரசியல் உறவுகளில் ஒரு பெரும் மாற்றத்தை உண்டுபண்ணுவதற்கான மணியை இசைத்துக் கொண்டுள்ளது. பிரதமர் ரோனி பிளேயரும் வர்த்தக சமூகத்தின் விருப்புக்குரிய கட்சியான புதிய தொழிற் கட்சியும் (New Labour) ஒரு மக்கள் ஆணையில்லாமல் ஆட்சியில் அமர்த்தப்பட்டுள்ளது. இது நலன்புரி அரசையும் பொதுச் சேவைகளையும் ஒழித்துத் தள்ள வாக்குறுதி அளித்துள்ளது.

பிரித்தானிய தேர்தல் முறையானது தேசத்தின் அரசியல் அரசைப் பற்றிய ஒரு திரிக்கப்பட்ட சித்திரத்தை எப்போதும் தருகின்றது. ஒரு கட்சியினால் வெற்றி கொள்ளப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கை பெருமளவுக்கு மத்தியதர வர்க்கத்தின் ஒரு குறுகிய தட்டினரிடையேயான பெயர்ச்சிகள் மூலமே இடம்பெறுகின்றது. குறிப்பாக முக்கிய எல்லைத் தொகுதிகளில் இது இவ்வண்ணம் நடைபெறுகின்றது. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற தேர்தலில் இது சிறப்பாக இங்ஙனம் விளங்கியது. தொழிற் கட்சியின் 42 சதவீத வாக்குகள் அதற்கு வெஸ்ட்மினிஸ்டரில் 64 சதவீதமான ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்தது. இதே சமயம் டோரிகளுக்கு (கன்சர்வேடிவ் கட்சி) கிடைத்த 33 சதவீதம் அதற்கு 26 சதவீத ஆசனங்களையும் லிபரல் ஜனநாயகவாதிகள் 19 சதவீத வாக்குகள்ளப் பெற்று ஆசனங்களில் 8 சதவீதத்தையும் தட்டிக் கொண்டனர்.

இந்த தேர்தலுக்கு முன்னதாக பிளேயர் தொழிற் கட்சியை அவர்களின் ஒரு இயற்கையான இல்லமாக ஆதரிக்கச் செய்யும் விதத்தில் "ஒரு தேசம் பழமைவாதிகள்" (One Nation Conservatives) என்பதற்கான தனது வேண்டுகோளை மீண்டும் வலியுறுத்திக் கொண்டு இருந்தார். இதுவே தொழிற் கட்சிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது. கட்சி மத்தியதர வர்க்கத்தின் செல்வாக்கு வாய்ந்த தட்டினரிடையே ஆதரவைத் திரட்டிக் கொண்டதால் இது இடம் பெற்றது. தொடர்பு சாதனங்களைப் பொறுத்தமட்டில் தொழிற் கட்சி தேசிய தினசரி பத்திரிகைகளில் 91 சதவீதத்துக்கும் அதிகமானோரின் ஆதரவை சுருட்டிக் கொண்டது. வெளியீட்டு எண்ணிக்கையிலும் ஆதரவிலும் இக்கொனோமிஸ்ட் (Economist), பினான்சியல் டைம்ஸ் (The Financial Times), டைம்ஸ் (Times) போன்ற மாஜி.முன்னணி டோரிகளின் ஆதரவு தொழிற்கட்சிக்கு கிடைத்தது.

இந்த தேர்தலின் முக்கிய அம்சம் என்னவெனில் பெருமளவிலானோர்



டோனி பிளேயர்

வாக்களிப்பில் இருந்து விலகிக் கொண்டு இருந்ததேயாகும். வாக்காளர் எண்ணிக்கையில் சுமார் 59 சதவீதத்தினர் வாக்களித்தனர். 1997ல் இது 71 சதவீதமாக விளங்கியது. இம்முறை தொழிற் கட்சி

19ம் பக்கம் பார்க்க

**இனவாத யுத்தம் வேண்டாம் !**

**சிங்கள – தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம் !**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க

துணை ஆசிரியர்: எஸ்.இராசேந்திரன்

பதிப்பாளர்: தீபால் ஜயசேகர

சோசலிச சமத்துவக் கட்சியின்
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்

அலுவலகம்:

தபால் பெட்டி இலக்கம்: 1270
கொழும்பு.
தொலைபேசி: 553831

மின்னஞ்சல்: kmawatha@lanka.ccom.lk

ஒரு அரசியல் சதுப்பு நிலம்

# அரசாங்கம் இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுக்கும் ஒரு அரசியல் குற்றச்சாட்டுக்கும் முகம் கொடுக்கின்றது

கே.ரத்னாயக்க
20 ஜூன் 2001

இலங்கையின் ஆளும் பொதுஜன முன்னணி (PA) அரசாங்கம் கடந்த அக்டோபரில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று ஒரு வருடம் பூர்த்தியாவதற்கு முன்னரே ஒரு முடிவை எட்டும் அரசியல் நெருக்கடிக்குள் மூழ்கியுள்ளது. அடுத்துவரும் வாரங்களில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் இரண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணைகளுக்கு முகம் கொடுக்கும் அதே வேளை உயர் நீதிமன்ற நீதிபதிக்கு எதிரான எதிர்க் கட்சியினரின் நகர்வுகள் நாட்டை ஒரு அரசியல் யாப்பு நெருக்கடிக்குள் மூழ்கடிக்கும் நிலைமைகளைக் கொண்டுள்ளது.

குமாரதுங்கவைப் போலவே ஆளும் கூட்டரசாங்கத்தின் பிரதான கட்சியான அவரது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் (SLFP). அரசியல் ஆதரவைத் திரட்டும் பெரும் முயற்சியில் கரணம் அடித்துவரும் ஒரு நிலைமையில். கூட்டணி தானாகவே பல பகுதிகளாக கிழிந்து போவதற்கான அபாயம் வளர்ச்சி கண்டுள்ளது. அரசியல் திட்டங்கள் அடிக்கடி சிக்கலானதும் சில சந்தர்ப்பங்களில் ஆச்சரியமானவையாக இருந்த போதிலும், இன்றைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் இலாயக்கற்றதாக இருப்பதே இந்த நெருக்கடிகளுக்கான தோற்றமாகும் -நீண்டுகொண்டுள்ள உள்நாட்டு யுத்தம், அதன் பொருளாதார வெட்டுக்களும் மக்களின் சமூக நிலைமைகளின் சீர்கேடும்.

எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி (UNP) தனது சொந்த அபிவிருத்திக்காக அரசியல் நிலைமைகளை வெடிக்கச் செய்வதில் தெளிவான எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. ஆனால் அது அரசியல் ஐக்கியத்துக்கான மாதிரி அல்ல. எவ்வாறு முன்செல்வது என்பது தொடர்பாக வித்தியாசமான .யூ.என்.பி. கோஷ்டிகளுக்கிடையில் சிறிய ஒப்பந்தத்தைக் காணலாம். அரசாங்கத்தை கவிழ்ப்பது சில யூ.என்.பி. தலைவர்களின் தேவையாகும்; ஏனையவர்கள் ஸ்ரீ.ல.சு.க.வுடன் கூட்டணி சேரும் முன்நோக்கால் ஈர்க்கப்பட்டுள்ளார்கள். நெருக்குவாரங்களைக் கொணரும் யுத்தத்துடனோ அல்லது நாட்டின் பொருளாதார சமூகப் பிரச்சினைகளுடனோ செயலாற்றுவது எப்படி என்பது தொடர்பாக அரசாங்கத்தைப் போல் எதிர்க் கட்சியிடம் ஒப்பந்தங்கள் கிடையாது.

அரசியல் உரமிடுவதன் அடுத்த கட்டம் அடுத்த சில நாட்களில் தலைக்கு மேல் வருவதாக தோன்றுகிறது.

* யூ.என்.பி. நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைப்பதன் மூலம், அரசாங்கத்தின் எதிர்காலம் தொடர்பான ஒரு பாராளுமன்ற விவாதத்தை துரிதப்படுத்துகின்றது. பிரேரணையின் நிபந்தனைகள் இன்னமும் தெரியவராத நிலைமையில், யூ.என்.பி. பேச்சாளரான கே.கொடித்துவக்கு கடந்த வியாழக்கிழமை தொடர்புச் சாதனங்களுக்கு தெரிவிக்கையில் அது அரசாங்கத்தின் "பொருளாதார நிர்வாக முறைகேட்டை" அடிப்படையாகக் கொண்டிருக்கும் எனத் தெரிவித்தார். பிரேரணையின் வெற்றிக்காக, யு.என்.பி. ஏனைய எதிர்க் கட்சிகளின் ஆதரவையும் கோரிவருகின்றது -சிங்கள சோவினிச மக்கள் விடுதலை முன்னணி (JVP) தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) -ஆளும் கூட்டணியின் சில உறுப்பினர்களிடமும் கூட.

* அதை கணக்கில் கொண்டு, அரசாங்க அமைச்சரான மகிபால ஹேரத்துக்கு எதிரான மேலும் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை யூ.என்.பி. ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது. இவரது மெய்காவலர்களும் ஆதரவாளர்களும் கடந்த ஏப்ரல் மாதத்தில் மாவனல்லை நகரில் இடம்பெற்ற முஸ்லீம்களுக்கு எதிரான இனவாதத் தாக்குதலை தூண்டிவிடுவதில் நேரடியாக ஈடுபட்டிருந்தனர். ஒருவர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்தும், 150 கடைகள் நாசம் செய்யப்பட்டதோடு, முஸ்லீம் சிறுபான்மையினரின் பரந்த எதிர்ப்பையும் தூண்டிவிட்டது.

யூ.என்.பி. ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரசின் (SLMC) ஆதரவை வெற்றிகொள்வதற்காக -பொதுஜன முன்னணியின் முக்கியமான பங்காளி- மே மாதம் ஹேரத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை தந்திரமாக நகர்த்தியது. கடந்த வாரம் குமாரதுங்கவுடனான ஒரு கலந்துரையாடலில் ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தனது கட்சி அமைச்சருக்கு எதிரான எதிர்க் கட்சியின் பிரேரணையை ஆதரிப்பதாக எச்சரிக்கை விடுத்ததாகவும் "எப்படியும் ஸ்ரீ.ல.மு.கா.வின் ஆதரவு கிடைத்துவிடும் என நினைக்கவேண்டாம்" எனவும் சுட்டிக் காட்டியிருந்தார். அக்டோபரில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் பொதுஜன முன்னணியுடன் தாமதித்து இணைந்த ஸ்ரீ.ல.மு.கா. அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு இதைக் காரணம் காட்டும் என யூ.என்.பி. தெளிவாக கணக்கிட்டுக் கொண்டுள்ளது.

* 1999ல் குமாரதுங்கவால் நியமிக்கப்பட்ட அவரது நம்பிக்கைக்குரியவராக கூறப்படும் உயர் நீதிமன்ற நீதிபதி சரத் என். சில்வாவை குற்றம் சாட்டுவதற்காக கடந்த ஜூன் 6ம் திகதி பாராளுமன்ற சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை எதிர்க் கட்சியின் மூன்றாவது தாக்குதலாகும். யூ.என்.பி.யின் பிரேரணை முறைகேடான தொடர்புக்காக வேறு ஒரு பெண்ணுடன் வாழ்வதற்கு தனது மனைவியை கைவிட்டதாகவும், பாரபட்ஷமான தீர்ப்புகளை வழங்கும் அதே வேளை தகாத முறையில் நீதிபதிகளை வெளியேற்றுவதாகவும் உயர் நீதிமன்ற நீதிபதியை குற்றம் சாட்டுகிறது. யூ.என்.பி. இந்த பிரேரணைக்கான ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை ஏற்கனவே தன்வசம் கொண்டுள்ளதோடு ஏனையோரின் ஆதரவைத் திரட்டி வருகின்றது.

எவ்வாறெனினும் பொதுஜன முன்னணியும் உயர் நீதிமன்றமும் புறந்தள்ளப்பட்டுள்ளன. ஜூன் 6ம் திகதி பொதுஜன முன்னணியுடன் சேர்ந்து முன்னணி சட்டத்தரணிகள் தாக்கல் செய்த வழக்கில், குற்றப்பிரேரணை தொடர்பாக பாராளுமன்ற சபாநாயகர் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்வதில் இருந்து தவிர்க்கும் பொருட்டு மூன்று நீதிபதிகள் அடங்கிய நீதிமன்றம் ஒரு தடை உத்தரவை பிறப்பித்தது. நீதிமன்றத்தின் தீர்ப்பு ஒரு அரசியல் யாப்பு நெருக்கடியைத் தோற்றுவிப்பதாக அச்சுறுத்தியது: தடை உத்தரவின் ஆதரவாளர்கள் பாராளுமன்றம் நீதிமன்றத்துக்குரிய அதிகாரங்களை அபகரிப்பதாக குற்றம் சாட்டினர்; அதன் எதிரிகள் உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்தின் மேலதிகாரத்தை பலவீனப்படுத்துவதாக குறிப்பிட்டனர்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்ப்பதன் பேரில், தடை உத்தரவு மீதான விவாதம் பொதுஜன முன்னணியின் அரசாங்கமட்டத்திலான பொதுஜன முன்னணி பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்ன உட்பட மகிந்த ராஜபக்ஷ மற்றும் தினேஷ் குணவர்தன போன்ற அமைச்சர்கள் மத்தியில் பல பிரிவுகளை தோற்றுவித்தது. யூ.என்.பி. உறுப்பினரும் குமாரதுங்கவின் உடன் பிறந்த சகோதரருமான, சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க இன்று நீதிமன்ற தீர்ப்பை ஏற்றுக்கொள்வதற்கு எதிரான முடிவை வழங்குவதாக உள்ளது. ஆனால் அரசியல் நிலைமையின் ஏனைய ஒவ்வொரு நிகழ்வும், பண்டாரநாயக்க எதைச் செய்யவுள்ளார் என்பதை குறிப்பிட்டுச் சொல்லும்.

மிகக் குறைந்த தொகையான நான்கு ஆசனங்களில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள, எட்டு கட்சிகளால் ஆக்கப்பட்டுள்ள ஆளும் கூட்டணி, இந்த எல்லாப் பிரச்சினைகளிலும் ஒரு நிச்சயமில்லாத நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. 225 பாராளுமன்ற ஆசனங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 94 ஆசனங்களை மட்டுமே கொண்டுள்ளது. அடுத்த பெரும் பங்காளியான ஸ்ரீ.ல.மு.கா, அதனது முன்னணி அமைப்பான தேசிய ஐக்கிய முன்னணியுடன் (NUA) சேர்த்து 11 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் (CWC). ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி (EPDP). மக்கள் ஐக்கிய முன்னணி (MEP). லங்கா சமசமாஜக் கட்சி (LSSP). மற்றும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (CPSL) ஆகியவையே ஏனைய பங்காளிக் கட்சிகளாகும்.

## அரசியல் குழறுபடிகள்

ஸ்ரீ.ல.மு.கா. பொதுஜன முன்னணியின் மிகவும் பலவீனமான பகுதியாக காணப்படுகின்றது. இந்த கூட்டணியைக் பாதுகாக்கும் ஏலத்தில், அரசாங்கம் கடந்த வாரம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்ம்யாக வாழும் கல்முனைக்கு மாநகர சபை அதிகாரத்தை வழங்கியது. கல்முனைக்கு ஒரு தனியான நிர்வாக மாவட்டத்துக்கான ஸ்ரீ.ல.மு.கா.வின் கோரிக்கை பொய்த்துப் போன ஒரு சந்தர்ப்பத்தில், இது தொடர்ந்தும் ஸ்ரீ.ல.மு.கா.வை அரசாங்கத்துக்குள் வைத்திருக்க உதவும் என குமாரதுங்க எண்ணினார். வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்தது கடந்த வெள்ளிக் கிழமையேயாகும் -ஸ்ரீ.ல.மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமை குமாரதுங்க சந்தித்த அதே நாள்.

எவ்வாறெனினும், அதே நேரம், அரசாங்கம் ஹக்கீமுக்கு எதிராக, ஸ்ரீ.ல.மு.கா.வின் உள்ளே முன்னாள் ஸ்ரீ.ல.மு.கா.வின் தலைவரின் மனைவியான பேரியல் அஷ்ரப் தலைமையிலான ஒரு குழுவுடன் திரைமறைவில் செயற்பட்டது. இந்தத் தலையீடு பற்றி ஹக்கீம் குமாரதுங்கவிடம் முறையிட்டிருந்தார். கடந்த வெள்ளிக் கிழமையும் சனிக்கிழமையும் மட்டக்களப்பு கிழக்கிலிருந்து வந்த அஷ்ரப்பின் ஆதரவாளர்கள் கொழும்பில் ஸ்ரீ.ல.மு.கா. தலைமையகத்தையும் ஹக்கீமின் இல்லத்தையும் சுற்றிவளைத்திருந்தனர்.

அரசாங்கத்துக்கு ஹக்கீம் வழங்கிவரும் தொடர்ச்சியான ஆதரவு நிலையானதல்ல. சனிக்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தமது கட்சி சபாநாயகருக்கு தடைவிதிக்கும் உயர் நீதிமன்றத்தின் நடவடிக்கையை எதிர்ப்பதாகவும் ஆனால் அதே வேளை உயர் நீதிமன்ற நீதிபதிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு ஆதரவளிக்காது எனக் கூறினார். மஹிபால ஹேரத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கும். அதே வேளை, ஹக்கீம் குமாரதுங்கவின் அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் மிகவும் சிக்கலான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக அவரை தொடர்ந்தும் சந்தேகத்திலேயே வைத்துள்ளார். தான் "யூ.என்.பி.யாலோ அல்லது பொதுஜன முன்னணியாலோ அறிவுறுத்தப்பட முடியும்" என அவர் ஜாடை காட்டியுள்ளார்.

இந்த நிறந்தீட்டல்களுக்கு வெளியில், நாட்டின் உள்நாட்டு யுத்தத்தின் ஆரம்பமாக கருதப்படும் தமிழர்களுக்கு எதிரான 1983

18ம் பக்கம் பார்க்க

தொழிலாளர் பாதையில் வெளிவரும் கட்டுரைகள் அனைத்தும் உலக சோசலிச வலைத் தளத்தின் (WSWS) ஆங்கில பக்கத்தில் வெளியாகிய கட்டுரைகளின் தமிழாக்கமாகும். இக்கட்டுரைகளை வலைத் தளத்தின் தமிழ் பக்கத்திலும் காணலாம்.

உலக சோசலிச வலைத் தளம் (WSWS) (நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வெளியீடு) தொடர்பை பெறவேண்டிய முகவரி http://www.wsws.org

*இன்றைய சிறப்பு
*செய்திகளும் ஆய்வுகளும்
*தொழிலாளர் போராட்டங்கள்
*கலை விமர்சனம்
*வரலாறு
*கலந்துரையாடல்
*கடிதத் தொடர்புகள்
*சுவடிகள்
*WSWS பற்றி
*வலைத் தளத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய நூல்கள்
*அனைத்துலகக்குழுவைப்பற்றி

ஆங்கிலம் தவிர்ந்த வேறு மொழிகள்
*ஜேர்மன்
*பிரான்ஸ்
*ஸ்பானியா
*ருஷ்யா
*சேர்போ -குரோஷியன்
*இந்தோனேசியா
*சிங்களம்
*தமிழ்

அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்

World Socialist Web Site
http://www.wsws.org
அமெரிக்கா:
http://www.socialequality.com
அவுஸ்திரேலியா:
http://www.workersnews.flex.com.au
பிரித்தானியா:
http://www.socialequality.org.uk
கனடா:
http://www.egalitesociale.com
ஜேர்மன்:
http://gleichheit.de

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட மா அதிபர் தமிழ் கைதிகளுக்கான பிணை மனுவை ஒத்திவைத்துள்ளார்

விலானி பீரிஸ்
ஜூன் 2, 2001

இலங்கை சட்ட மா அதிபர் திணைக்களம் நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் மூன்று வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறு தமிழ் தொழிலாளர்களின் பிணை மனுவை ஏற்றுக்கொள்ள இன்னமும் மறுத்து வருகின்றது. இந்த அறுவரும் எந்த ஒரு சட்டவிரோத நடவடிக்கையின் பேரிலும் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டவர்கள் அல்ல. அவர்களது விசாரணை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடைசியாக கடந்த பெப்பிரவரி மாதத்தில், இது 2002 ஜனவரி 16ம் திகதி வரை மேலும் 11 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஏப்பிரல் 25ம் திகதி, எதிரி தரப்பு சட்டத்தரணிகளான மெவன் பலல்லவும் எச்.எம்.மொகமட் பாயிசும் ஆறு தனித் தனியான பிணை மனுக்களை சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அரச வழக்கறிஞர் தபுல லிவேராவிடம் கையளித்தனர். இந்த ஆறுவருக்கும் எதிராக தொடரப்பட்டிருக்கும் நான்கு வழக்குகளில் ஒரே ஒரு வழக்கை மட்டுமே உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளதையும் அதுவும் கூட இழுபட்டுச் செல்வதையும் ஆவணங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. தடுத்து வைக்கப்பட்டு இருந்த போது பெற்றுக் கொள்ளப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் மாத்திரமே இக்கைதிகளுக்கு எதிரான சாட்சியங்களாகும்.

சட்ட மா அதிபர் திணைக்களம் ஒரு மாதத்தின் பின்னர் -மே 22ம் திகதி பதிலளிக்கையில் பிணை வழங்க மறுத்தது. வழக்கு விசாரணை செய்யப்பட்டு வரும் மேல் நீதி மன்றத்துக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான கைதிகளை விடுதலை செய்வதற்கான அதிகாரம் கிடையாது என அது கோரியது. அந்த வாதத்தை நிராகரித்த சட்டத்தரணி பாயிஸ் அதே நாளன்று சட்ட மா அதிபர் கே.சி.கமலசபேசனைச் சந்தித்தார்.

அந்த சந்திப்பின் போது, வழக்கின் பிரதான சட்சி -ஒப்புதல் வாக்குமூலங்களை மொழிபெயர்த்த பொலிஸ் உப அத்தியட்சகரான முகாதீஸ்- நீதிமன்றத்திலிருந்து தலைமறைவாகி, பொலிஸ் சேவையை விட்டு விலகியதோடு, இலங்கையில் இருந்தும் வெளியேறி விட்டதை பாயீஸ் சுட்டிக் காட்டினார். இந்த நிலைமைகளின் கீழ் வழக்குத் தொடுநர் தரப்பினர் வழக்கை முடிவின்றி தாமதிக்கச் செய்யக்கூடும். இதன் பெறுபேறாக -பெரிதும் அவர்களது அடிப்படை உரிமை மறுப்பாக- ஆறு கைதிகளும் முடிவின்றி சிறைவாசம் அனுபவிக்க வேண்டி வரும். விடயங்களை கவனத்தில் கொள்வதாக சட்ட மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

சுப்பு உதயகுமார், பிச்சமுத்து சந்திரன், அருணாசலம் லோகேஸ்வரன், சோலமலை லோகநாதன், பொன்னையா சரவணக்குமார் சாமிமுத்து பெனடிக்ட் ஆகிய இந்த அறுவரும் இலங்கையின் மத்திய பிரதேசத்தின் அட்டனுக்கு அருகாமையில் உள்ள தேயிலைத் தோட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் முதலில் 1998 மே மாதம் ஷனன் தேயிலை பக்டரியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு. சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

குற்றச்சாட்டுகளின்றி ஒரு வருடம் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர் 1999 ஜூன் மாதம் இந்த ஆறு பேருக்கும் எதிராக, பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் (LTTE) உறுப்பினர்களாக இருந்தமை, பெற்றோல் தாங்கிகளுக்கு குண்டு வைத்து தகர்த்தமை, மின் மாற்றிகளை நாசம் செய்தது என்பவை உட்பட நான்கு புதிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. பொலிஸ், முதலில் சுமத்தப்பட்ட ஷெனன் தேயிலை பக்டரி தொடர்பான குற்றச்சாட்டை எந்தவித விளக்கமும் இன்றி விலக்கிக் கொண்டது.

இப்போது வழக்கு அரச தரப்பினராலோ ஒன்று வழக்கின் மூலமாகவோ அல்லது நீதிபதி சமூகமளிக்காத காரணத்தாலோ ஏழுமுறை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அடுத்த வழக்குத் தினமான ஜனவரி வரை இந்த கைதிகள் சிறையில் வாடத் தள்ளப்படுவார்களேயானால், அவர்கள் சிறையிலடைக்கப்பட்டு மூன்றரை வருடங்கள் பூர்த்தியாகும். மேலும், சட்ட நடவடிக்கைகள் மீண்டும் தாமதப்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

சோசலிச சமத்துவக் கட்சி (SEP) அட்டன் அறுவருக்கும் எதிரான போலிக் குற்றச்சாட்டுக்களை அகற்றவும் அவர்களின் நிபந்தனையற்ற உடனடி விடுதலைக்காகவும் தொடர்ச்சியான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றது. பிரச்சாரம் தொடர்பான *உலக சோசலிச வலைத் தளத்தின் (WSWS)* கட்டுரைகள் *யாஹூவில் (Yahoo)* வெளியாகியுள்ள அதே வேளை, *தமிழ் கனேடியன் செய்தி வலைத் தளத்தில்* மீள வெளிப்பட்டுள்ளன.

மே மாத முதற்பகுதியில் இலங்கையின் முன்னணி தமிழ் நாளிதழான *வீரகேசரி* "இலங்கையின் தமிழ் கைதிகள் தமது விடுதலைக்கு கரம் நீட்டுமாறு கோருகின்றனர்" எனும் தலைப்பிலான உலக சோசலிச வலைத் தளத்தின் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது. கைதிகள், கட்சி வழங்கிவரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தும் தோட்டத் தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள் உட்பட்ட அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் காட்டும் பாகுபாட்டை சுட்டிக் காட்டியும் சோ.ச.க.வுக்கு அனுப்பி வைத்திருந்த கடிதத்தின் சில பகுதிகளை பத்திரிகை சேர்த்துக் கொண்டிருந்தது.

சோ.ச.க.வின் பிரச்சாரத்துக்கு பெருகிவரும் ஆதரவும் கட்டுரையும் பலரின் உணர்வுகளை தூண்டிவிட்டுள்ளதாக கட்டுரை குறிப்பிட்டது. மூன்று வருடங்களாக அட்டன் அறுவர் தொடர்பாகவும் எந்தவித நடவடிக்கையும் எடுக்க மறுத்த தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவம் செய்யும் தொழிற் சங்கத் தலைமைகளும் ஏனைய அமைப்புகளும் இப்போது சில நடவடிக்கைகளை எடுக்க அழைப்பு விடுத்து சட்ட மா அதிபருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் (CWC) தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஏப்பிரல் 25ம் திகதி சொற்களை மிகக் கவனமாக பயன்படுத்தி எழுதியதாவது: "தோட்டப்புற இளைஞர்களை விடுதலை செய்வதற்காக உடனடியானதும் உறுதியானதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கோருகின்றேன்." கைதுசெய்த பின் தொண்டமானை தொடர்பு கொண்டபோது அவர் எதையுமே செய்யவில்லை என, பல கைதிகளின் பெற்றோர்கள் சோ.ச.க.விடம் குறிப்பிட்டனர். அவர் குற்றச்சாட்டுக்கள் உண்மையானதா இல்லையா எனக் கூறுவதற்கு வழியில்லை என அவர்களில் ஒருவரிடம் குறிப்பிட்டுள்ளார்.

மலையக தேசிய கூட்டணியின் தலைவர் பீ.ஏ.காதர் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் "இவர்களுக்கு எதிராக ஏதாவது குற்றச்சாட்டுக்கள் இருக்குமானால் அவர்களது வழக்கை துரிதப்படுத்துமாறும் அல்லது உடனடியாக விடுதலை செய்யுமாறும்" கௌரவத்துடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடந்த வருடம் பல வாக்குறுதிகளை வழங்கிய பின்னர் உண்ணாவிரத போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர அழைப்பு விடுத்த மலையக மக்கள் முன்னணியின் (UPF) தலைவர் பி.சந்திரசேகரன். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாராளுமன்ற உறுப்பினரான சந்திரசேகரனுக்கு அவரது செயலின்மையின் மீதான தமது வெறுப்பை வெளிப்படுத்தி மே 4ம் திகதி எழுதிய கடிதத்தில் கைதிகள் விளக்கியதாவது: "நாங்கள் உடல் ரீதியிலும் உளவியல் ரீதியிலும் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளோம். எங்களது குடும்பங்கள் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கின்றன." அவஸ்தை நிலையின் ஒரு நடவடிக்கையாக, அவர்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு நீதிமன்றத்திடம் அனுமதி கோரவுள்ளதாக அச்சுறுத்தியிருந்தனர்.

பொலிசாராலும் சிறைச்சாலை அதிகாரிகளாலும் விதிக்கப்பட்டுள்ள தடைகளால், கைதிகளைப் பார்வையிடுவது கூட உறவினர்களுக்கு மிகவும் சிரமமானதாகும். உள்ளூர் பொலிசில் பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதிக் கடிதமொன்று அவசியமாகும். ஆனால் அதைப் பெற்றுக் கொள்வது பெரிதும் சங்கடமானது.

லோகேஸ்வரனின் தந்தையான முனியாண்டி அருணாச்சலம், அத்தகைய ஒரு கடிதத்தை பெற்றுக் கொள்ள ஒரு மாதமாகியது. ஏப்பிரல் 21ம் திகதி வழங்கப்பட்ட அவரது முதலாவது விண்ணப்பத்தை, தனக்கு அதிகாரம் இல்லை எனக் கூறி, அட்டன் பொலிஸ் அதிகாரி திருப்பி அனுப்பி விட்டார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலையீட்டைத் தொடர்ந்து, ஏப்பிரல் 24ம் திகதியும் அவர் அதை நிராகரித்தார். அவரது உயர் அதிகாரியினால் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டதன் பின்னரும், மீண்டும் அவர் விண்ணப்பத்தை இடையூறு செய்தார். சோ.ச.க.வின் விண்ணப்பத்தின் பேரில், மனித உரிமை ஆணைக்குழு பொலிஸ் அதிகாரிக்கு எழுதிய கடிதத்தின் பின்னர் மே 23ம் திகதியே கடிதம் ஒன்று வழங்கப்பட்டது.

அண்மையில் லோகநாதனின் சகோதரரான சங்கர் சோ.ச.க. பிரதிநிதியுடன் சேர்ந்து சிறைச்சாலைக்கு விஜயம் செய்ய முற்படுகையில், பொலிஸ் கடிதம் புதுப்பிக்கப்படவில்லை என சிறைச்சாலை அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டனர். அவர் அடுத்த நாள் திரும்பிச் செல்லத் தள்ளப்பட்டார். போக்குவரத்துகள் வழங்கப்படாத நிலையில், ஒவ்வொரு முறையும் கடைசி நான்கு கிலோ மீட்டர்கள் சோதனைச் சாவடிகளூடாகச் செல்ல வேண்டும். சோதனைச் சாவடிகளில் உள்ள இராணுவத்தினர் மிகவும் இனவாத முறையில் கைதிகளின் உறவினர்களை தூற்றுவார்கள்.

## சோ.ச.க. பிரச்சாரத்துக்கான ஆதரவு

சட்ட மா அதிபருக்கு எழுதியதன் மூலம் தொழிலாளர்களும், புத்திஜீவிகளும் மற்றும் சில அமைப்புகளும் இந்தக் கைதிகளை விடுதலை செய்வதற்கான சோ.ச.க.வின் பிரச்சாரத்துக்கு ஆதரவளித்தனர்.

தமிழ் கவிஞரான சு.வில்வரத்னம் - 1980களின் கடைப் பகுதியில் இவரது இல்லம் இனவாதக் கலகத்தின் மூலம் தீ மூட்டப்பட்டது- திருகோணமலையில் இருந்து எழுதியதாவது: "கடந்த 30 ஆண்டுகளாக நான் தமிழ் கவிதை எழுதி வருகின்றேன். நானும் ஒரு மனிதாபிமானி. எனது இளமைப் பருவத்தில் இருந்து எனக்கு சோ.ச.க.வைத் தெரியும்... அவர்கள் எப்போதும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக போராடி வந்துள்ளார்கள். அவர்கள் பயங்கரவாதத்தையும் பயங்கரவாத அரசியலையும் எதிர்த்து வந்துள்ளார்கள்... கைது செய்யப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் இளைஞர்கள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும். வழக்கு மேலும் ஒரு வருடத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது எங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது."

சோ.ச.க. பிரச்சாரத்துக்கு ஆதரவளித்த கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்ட பீட வெளிக்கள விரிவுரையாளரான ஆர்.ஜே.ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டதாவது: "அரசாங்கம் எத்தனையோ மனித உரிமைகள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. வைத்திய அறிக்கைகளின்படி. இந்த இளைஞர்கள் பொலிஸ் காவலில் கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வைத்திய மற்றும் சுகாதார வசதிகள் மறுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் கைது செய்யப்பட்டுள்ள சகல தமிழ் இளைஞர்களும் இதே தலைவிதிக்கு முகம் கொடுக்கின்றனர்."

கொழும்பு பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞான பீடத்தின் விரிவுரையாளரான, கே.எஸ்.கீர்த்தி ஆரியதாச எழுதியதாவது: "சோ.ச.க.வின் ஆதரவாளரான உதயகுமார் உட்பட்ட ஆறு தமிழ் தோட்டப்புற இளைஞர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தெளிவான வழக்குகள் எதுவும் இன்றி தடுத்து வைக்கப்படுவது அடிப்படை ஜனநாயக உரிமையையும் மனித உரிமையையும் மீறும் மோசமான வன்முறையாகும்."

ஒரு இளம் பட்டதாரியான, சம்பத்

18ம் பக்கம் பார்க்க

"பொதுவில் உள்நாட்டு யுத்தத்தின் இயல்பு மற்றும் விசேஷமாக இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இனவாத இயல்பு, விசேஷமாக தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களினதும், மனித உரிமைகள் பெரிதும் மீறப்படும் பிரச்சினையை எழுப்பும். இலங்கை தொழிலாளர் உரிமைகள் மீதான அடி, உலக ரீதியில் தொழிலாளர்களின் நிலைமைகளையும் உரிமைகளையும் மூழ்கடிக்க உதவும். இந்த அறுவரது கைதும் தொடர்ச்சியான தடுத்து வைப்பும் உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

### உலக சோசலிச வலைத் தளத்தின் பிரச்சாரத்துக்கு கிடைத்த வெற்றி

4 இளைஞர்களை விடுதலை செய்யுமாறு ஹட்டன் மாவட்ட நீதிமன்றத்துக்கு உத்தரவு

சோசலிச சமத்துவக் கட்சியும் உலக சோசலிச வலைத் தளமும் முன்னெடுத்து வரும் அனைத்துலக பிரச்சாரத்துக்கு மத்தியில் ஜூலை 3ம் திகதி கண்டி உயர் நீதிமன்றம் ஆறு தோட்டப்புற இளைஞர்களில் 4 பேரை -சுப்பு உதயகுமார், பிச்சமுத்து சந்திரன், சோலமலை லோகநாதன், சாமிமுத்து பெனடிக்ட்- விடுதலை செய்வதற்காக ஹட்டன் மாவட்ட நீதவானுக்கு உத்தரவு பிறப்பித்த அதே வேளை பொன்னையா சரவனக்குமார், அருனாச்சலம் லோகேஸ்வரன் ஆகிய மற்ற இருவரின் வழக்கு விசாரணையும் ஆகஸ்ட் 29ம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த 4 தோட்டப்புற இளைஞர்களதும் விடுதலை உலக சோசலிச வலைத் தளமும் சோ.ச.க.வும் முன்னெடுத்துள்ள பிரச்சாரத்துக்கு கிடைத்துள்ள முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியாகும். அவர்களை மாவட்ட நீதிமன்றத்தில் விடுதலை செய்துகொள்வதற்கான சட்டரீதியான ஒழுங்குகளை செய்வதில் சோ.ச.க. எதிர்வரும் காலத்தில் ஈடுபடும். அனைவருக்கும் ஒரே குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும் ஒரு சாட்சியே முன்வைக்கப்பட்டது. இருவருக்கு மாத்திரம் வழக்கைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதன் மூலம் மேலும் இந்த ஒடுக்கப்படும் தமிழ் இளைஞர்களின் ஜனநாயக உரிமைகளை துவம்சம் செய்வதற்காக சட்டமா அதிபர் காரியாலயம் தொழிற்படுவது தெளிவாகின்றது. அந்த இருவரையும் உடனடியாகவும் நிபந்தனையின்றியும் விடுதலை செய்யுமாறு சட்டமா அதிபருக்கு கண்டனக் கடிதங்களை அனுப்பிவைக்குமாறு வேண்டுவோம்.

அடுத்தத் தொழிலாளர் பாதை இதழில் முழுமையான அறிக்கை வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பைத் தவிர்க்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளார்

கே.ரத்னாயக்க
ஜூலை 14, 2001

ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தனது சிறுபான்மை அரசாங்கம் தோல்வி கண்டு போவதை தடுத்து நிறுத்தும் ஒரு துணிச்சலான நடவடிக்கையாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பாவித்து பாராளுமன்றத்தை 60 நாட்களுக்கு ஒத்திவைக்கவும் ஒரு புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக மக்களுடன் "ஆலோசிக்க" ஆகஸ்ட் 21ம் திகதி ஒரு கருத்துக் கணிப்பை நடாத்தவும் போவதாக அறிவித்துள்ளார்.

இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) அரசாங்கத் தரப்பில் இருந்து எதிர்க் கட்சிக்கு மாறிச் சென்றதை தொடர்ந்து ஜூன் 22ம் திகதி ஆளும் பொதுஜன முன்னணி அரசாங்கம் பாராளுமன்றப் பெரும்பான்மையை இழந்தது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு மேலதிகமாக அரசாங்கம் ஏப்பிரல் கடைப் பகுதியில் அமைச்சர் மஹிபால ஹேரத் மாவெனெல்லையில் முஸ்லீம்களுக்கு எதிராக நடாத்திய இனவாத தாக்குதல், ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு பெரிதும் பாத்திரமானவரான பிரதம நீதியரசருக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை என்பவற்றுக்கும் முகம் கொடுத்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் குமாரதுங்க கடந்த சில வாரங்களாக "பாராளுமன்றத்தில் இருந்து வரும் ஸ்திரமற்ற நிலையை" சுட்டிக் காட்டி தனது தீர்மானத்தை நியாயப்படுத்த முயன்றுள்ளார். அவர் பாராளுமன்ற கூட்டத் தொடரை இடைநிறுத்தியதற்கு இரண்டு காரணங்களை வழங்கினார். முதலாவது, "சம்பந்தப்பட்ட அரசியல் கட்சிகள் தமது வேறுபாடுகளுக்கு ஒரு தீர்வு காண" உதவுவது. இரண்டாவது, ஏனைய விடயங்களோடு ஒரு உறுதியான அரசாங்கத்தை அமைப்பதற்கு உதவும் விதத்தில் தேர்தல் முறையை மாற்றும் ஒரு புதிய அரசியலமைப்பு முறையை கொணர்வது.

பொதுஜன முன்னணி அரசியல்வாதிகள் இன்றைய தேர்தல் முறை சிறிய அரசியல் கட்சிகளுக்கு அளவுக்கதிகமான முக்கியத்துவம் கொடுப்பதற்காக அதை இடைவிடாது விமர்சனம் செய்து வந்துள்ளனர். எவ்வாறெனினும் அந்த அரசியலமைப்பு எந்த விதத்தில் மாற்றப்பட வேண்டும் என்ற விடயம் அடியோடு மூடுமந்திரமாகவே உள்ளது. கருத்துக் கணிப்பில் கேட்கப்பட வேண்டிய விடயம் திட்டவட்டமான அரசியல் அமைப்பு மாற்றங்களை பிரேரிப்பதற்கு பதிலாக சும்மா பின்வரும் விதத்தில் குறிப்பிட்டுக் கொண்டுள்ளது. "ஒரு தேசிய ரீதியில் முக்கியத்துவமானதும் அத்தியாவசியமானதுமான தேவையாகியுள்ள ஒரு புதிய அரசியலமைப்பு நாட்டுக்கு அவசியமாகியுள்ளது என்ற பிரேரணையுடன் நீங்கள் இணக்கம் காண்கிறீர்களா?"

எதிர்க் கட்சிகளும் அரச சார்பு தொடர்புசாதனங்களை தவிர்ந்த ஏனைய சகல தொடர்பு சாதனங்களும் இந்த தீர்மானத்தை "சர்வாதிகாரமானதும்" "ஜனநாயக விரோதமானதும்" என பெயர் சூட்டின. பெரிய எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி(UNP) தான் ஒரு பரந்த அளவிலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை பாராளுமன்ற ஒத்தி வைப்புக்கு எதிராக நடாத்தப் போவதாக அறிவித்தது. பிரதான எதிர்க் கட்சி கொறடாவான டபிள்யூ.ஜே.எம்.லொகுபண்டார குமாரதுங்கவின் முடிவை எதிர்த்து நிற்பதற்கான விதிமுறைகளை கலந்துரையாடுவதற்கு எதிர்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். மிகவும் சிக்கலான அரசியலமைப்பு சட்ட நெருக்கடியை தோற்றுவிக்கும் விதத்தில் எதிர்க் கட்சி, பாராளுமன்ற சபாநாயகரை ஜனாதிபதியை புறக்கணிக்கும்படியும், பாராளுமன்றத்தை மீளக் கூட்டும் படியும் அழைப்பு விடுத்துள்ளது.

பொதுஜன முன்னணியின் கூட்டினுள்ளேயும் கருத்து வேறுபாடுகள் இருந்து கொண்டுள்ளன. ஜீ.எல்.பீரிஸ் மகிந்த இராஜபக்ச, மகிந்த விஜேசேகர உள்ளடங்கலான சிரேஷ்ட அமைச்சர்கள் பாராளுமன்றத்தை ஒத்தி வைக்கும் விடயத்தை அறிவிக்கத் தவறியதற்காகவும் அதையிட்டு கலந்தாலோசிக்க தவறியமைக்காகவும் குமாரதுங்கவை விமர்சனம் செய்துள்ளனர். அரசாங்கப் பேச்சாளர்கள் மறுத்த போதிலும் தனிப்பட்ட தொடர்பு சாதனங்களும் மின்னியல் தொடர்பு சாதனங்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் எஸ்.பி.திசாநாயக்க புதன்கிழமை இடம்பெற்ற அவசர அமைச்சரவை கூட்டத்தில் இருந்து ஆட்சேபம் தெரிவித்து வெளிநடப்பு செய்ததாக தெரிவித்தன.

குமாரதுங்கவின் இந்த தீர்மானம் முதலாவதாக பாராளுமன்றத்தில் கடந்த இரண்டு வாரங்களாக பொதுஜன முன்னணியின் பல்வேறு நிலைப்பாடுகளுக்கும் முண்டு கொடுக்கும் முயற்சிகள் தோல்வி கண்டு போனதை தொடர்ந்தே எடுக்கப்பட்டது.

10 எம்.பீ.க்களை கொண்டுள்ள சிங்கள தீவிரவாதிகளான ஜே.வி.பி.க்கு அரசாங்கம் ஒரு திட்டவட்டமான அழைப்பு விடுத்தது. பெரிதும் மென்மையான முறையில் பிளவுபட்டுப் போயுள்ள பாராளுமன்றத்தில் இந்த எண்ணிக்கை தீர்க்கமானதாகியுள்ளது. சில அமைச்சர்கள் ஜே.வி.பி.யை அதன் "கொள்கைப்பிடிப்பான தன்மை"க்காக பாராட்டியுள்ளனர். யூ.என்.பி. முன்னர் ஜே.வி.பி.யை தடை செய்ததையும் அவர்கள் ஜே.வி.பி. தலைவர்களுக்கு நினைவூட்டினர்.

யூன் 30ம் திகதி பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளின் தளங்கள் மீது ஒரு கணிசமான அளவு விமானத் தாக்குதல்களை நடாத்த எடுத்த முடிவு ஜே.வி.பி. உட்பட்ட சோவினிச கும்பல்களின் ஆதரவுகளை தம்பக்கம் திரட்டிக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு எடுக்கப்பட்ட ஒரு முடிவாகும் என்பதில் எதுவித சந்தேகமும் கிடையாது. இக்கட்சிகள் நீண்டுவரும் உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவு கட்டும் பொருட்டு குமாரதுங்க அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதையிட்டு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தன.

அதே சமயம் ஆளும் கூட்டரசாங்கத்தில் முக்கிய பங்காளியான ஸ்ரீ.ல.சு.க.(SLFP) ஒரு தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைக்க யூ.என்.பி.யுடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. இதன் மூலம் சிறிய கட்சிகளின்- சிங்கள தீவிரவாதிகளதும்(JVP)- பல்வேறு தமிழ் கட்சிகளதும் எண்ணிக்கையை குறைப்பதற்கான ஒரு வழிவகையாகவே இது கையாளப்பட்டது. எவ்வாறெனினும் இந்த இரு பெரும் கட்சிகளுள் இருப்பவர்களில் கணிசமான தொகையினர் இத்தகைய ஒரு மாபெரும் கூட்டரசாங்கத்துக்கு எதிர்ப்புக் காட்டுகின்றனர்.

## அவசரகால அதிகாரங்கள்

ஜூலை 6ம் திகதி நாட்டின் அவசர காலச் சட்ட விதிகளை புதுப்பிப்பதற்கு ஆதரவாகத் தாம் வாக்களிக்கப் போவதில்லை என எதிர்க்கட்சிகள் அறிவித்ததைத் தொடர்ந்து அரசாங்கத்தின் அம்மணக் கோலம் அம்பலமாகியது. யூ.என்.பி.யும் சரி ஏனைய கட்சிகளும் கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைமுறையில் இருந்து வந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கொள்கை அடிப்படையில் எதிர்த்ததே கிடையாது. மாத மாதம் அவை அவசரகால நிலைக்கு வழக்காறான முறையில் முத்திரை குத்தி வந்தன. இத்தடவை யூ.என்.பி. பாராளுமன்றத்தில் அதன் எண்ணிக்கையை பரீட்சிக்கவும் அரசாங்கத்தின் நெருக்கடியை ஆழமாக்கவும் முயற்சிக்கின்றது.

பொதுஜன முன்னணி பேரினவாத அர்த்தத்தில் யூ.என்.பி.யையும் ஜே.வி.பி.யையும் திட்டித் தீர்ப்பதன் மூலம் இதற்கு பதிலளித்தது. அவசரகாலச் சட்டத்தின் முடிவு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு(LTTE) எதிரான தடையை நீக்குவதற்கு இட்டுச் செல்லும் என எச்சரிக்கை செய்தது. யூ.என்.பி.யும் ஜே.வி.பி.யும் இதற்கு அன்புடன் பதிலளிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்குவதை நாம் ஆதரிக்கவில்லை எனவும் ஜனாதிபதி தமிழ் பிரிவினைவாதிகளை தடை செய்வதற்கு வேறு சட்ட விதிமுறைகளை கொண்டுள்ளதாகவும் வலியுறுத்தியது.

குமாரதுங்க யூலை 4ம் திகதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும்(PTA) பொதுஜன பாதுகாப்பு சட்டத்தையும்(PSO) தாங்கிப் பிடிக்க பாராளுமன்றத்தில் குறுக்குவழியைக் கண்டுபிடித்தார். அவள் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தையும் நாட்டில் உள்ள 25 மாவட்டங்களிலும் திணித்ததோடு தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பாவித்தாள். மறுநாள் ஜனாதிபதி கொழும்பு நகரத்தை ஒரு "பெரிதும் பாதுகாப்பு பிராந்தியம்" ஆகப் பிரகடனம் செய்தாள்.

இந்நடவடிக்கைகள் குறிப்பாக தொழிலாளர்களுக்கு எதிராக திருப்பப்பட்டுள்ளன. பொலிசாருக்கும் இராணுவத்துக்கும் நீதிமன்றங்களுக்கும் வேலைநிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் தடை செய்யும் கணிசமான அளவு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த பொதுஜன பாதிகாப்பு சட்டத்தின் கீழ்(PSO) மின்சாரம், நீர் விநியோகங்கள் உணவு, போக்குவரத்து, தபால், தந்தி, ஒலிபரப்புடன் தொடர்புபட்ட சகல சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

இந்த வாரத்தின் தொடக்கத்தில் குமாரதுங்கவின் மாற்றுத் திட்டங்கள் காய்ந்து போயின. ஜே.வி.பி.யுடனும் யூ.என்.பி. தலைவர்களுடனும் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது திட்டவட்டமான எதுவும் தலைநீட்டவில்லை. மேலும் எதிர்க் கட்சிகள் தாம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்னெடுக்கப் போவதாக அறிவித்தன. அரசாங்கத்தை இராஜினாமாச் செய்யக் கோரி யூ.என்.பி.யும் மற்றும் எதிர்க் கட்சிகளும் பொதுக் கூட்டங்களை நடாத்தி வருகின்றன. பொதுஜன முன்னணி "அரசாங்கத்ததை வீழ்த்த விடுதலைப் புலிகளுடன் யூ.என்.பி. சதி" என்ற தலைப்பில் கூட்டங்கள் நடாத்தியது.

ஜூலை 6ம் திகதி அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை இழந்ததைத் தொடர்ந்து யூ.என்.பி. எதிர்க்கட்சிக்கு சார்பாக பாராளுமன்ற கமிட்டிகளை மாற்றி அமைக்கும்படி கோரியது. பொதுஜன முன்னணி தலைதப்பியதற்கு காரணம், பாராளுமன்ற சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க பிரேரணை ஒழுங்கற்றது எனக் கூறி பாராளுமன்றத்தை யூலை 16ம் திகதி வரை ஒத்தி வைத்ததேயாகும். குமாரதுங்கவின் உறவு அறுத்த தம்பியான பண்டாரநாயக்க யூ.என்.பி. தலைவர்களில் ஒருவராவார். இவர் ஸ்ரீ.ல.சு.க- யூ.என்.பி. கூட்டரசாங்கத்துக்காக இடைவிடாது வக்காலத்து வாங்கிவந்துள்ளார்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆகஸ்ட் 7க்கு ஒத்திவைக்க தீர்மானித்ததைத் தொடர்ந்து அரசியல் மோதுதல் உச்சக் கட்டத்தை அடைந்தது. அரசாங்கத்துக்கும் ஜே.வி.பி.க்கும் இடையேயன பேச்சுவார்த்தைக்கு இடமளிக்கும் விதத்திலேயே இங்ஙனம் செய்யப்பட்டது. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை தாமதப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் தேர்தலை முன்கூட்டியே நடாத்த அழைப்பு விடுக்கும் வாய்ப்பை உண்டுபண்ணியது. கடந்த தேசிய பொதுத் தேர்தல் அக்டோபரில் இடம்பெற்றது. அத்தோடு அதில் இருந்து ஒரு ஆண்டு கடந்து செல்லாத வரையில் அரசியலமைப்பு சட்டத்தின்படி ஒரு புதிய தேர்தலை நடாத்த முடியாது. பொதுஜன முன்னணி விரகியாளர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆகஸ்டு மாதம் வரை தடுத்து வைத்திருந்தால் குமாரதுங்க பாராளுமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு நீடிக்க முடியும் எனவும் பின்னர் தேர்தல்களை நடாத்த முடியும் எனவும் கணித்துக் கொண்டுள்ளனர்.

யூ.என்.பி.யும் எதிர்க் கட்சிகளும் உடனடியாக சபாநாயகரை நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதத்துக்கு யூலை 18ஐ நாள் குறிக்கும்படி கோரியதன் மூலம் இதற்கு குழிபறித்தனர். அந்த திகதியில் விவாதம் இடம்பெறுவதை ஊர்ஜிதம் செய்யும்படி கோரி சகல 115 எதிர்க் கட்சி எம்.பீ.க்களும் -பாராளுமன்றப் பெரும்பான்மையினர்- ஒரு மகஜரை கையளித்தனர். சபாநாயகரால் உண்மை அறிவிக்கப்பட்ட ஒரு நிலையில் குமாரதுங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.



சந்திரிகா குமாரதுங்க

## பெரும் வர்த்தகர்கள் நெருக்குவாரம்

இலங்கையில் நீண்டுவரும் அரசியல் பாரிசவாதத்தின் பின்னணியில் நாட்டின் நீண்ட உள்நாட்டு யுத்தமும் ஆழமான பொருளாதார நோய்களும் முக்கியமாக பிரமாண்டமான இராணுவச் செலவீனங்களும் இருந்து கொண்டுள்ளன. பெரும் வர்த்தக நிறுவனங்களின் கணிசமான பகுதியினர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும் சர்வதேச நாணய நிதியம் வேண்டிக் கொண்டுள்ள பொருளாதார மறுசீரமைப்புக்களை அமுல் செய்யுமாறும் அரசாங்கத்தை நெருக்கி வருகின்றனர். ஆளும் பிரமுகர்களிடையே உள்ளவர்களில் பொருளாதார முன்னேற்ற குறைபாட்டினாலும் இன்றைய அரசியல் ஸ்தம்பித நிலையாலும் மனவிரக்தி அடைந்து போனவர்கள் பெரிதும் எதேச்சதிகாரமான ஆட்சி முறைகளை ஏற்படுத்துவதன் அவசியத்தையிட்டு கலந்துரையாடல்கள் நடாத்துவார்கள் என்பதில் சந்தேகம் கிடையாது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் நெருக்கடி ஒன்றின் மேல் ஒன்றாக தொடர்ந்து இடம்பெறுவதால் ஆளும் வட்டாரங்களிலான மனோபாவம் பெரிதும் எரிச்சலூட்டுவதாக உள்ளது. கடந்த வார இறுதியில் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் வெளியான ஆசிரியத் தலையங்கம் கூறியதாவது: "அதிகார சமன்பாடுகள் அந்தளவுக்கு திரவமாக உள்ளன. அந்தளவுக்கு ஆட்டம் கண்டதாய் உள்ளது. நாடு சகல விதத்திலும் அரசியல் அராஜக நிலைமைக்குள் சென்று கொண்டுள்ளது தெரிகின்றது. குறைந்த பட்சம் நாடு ஆட்சி செய்ய முடியாத ஒன்றாக வேகமாக மாறி வருகின்றது. சகல அரசியல் முகாம்களிலும் பதட்ட நிலை சுவிச்சுக்கள் அழுத்தப்படுகின்றன. நாடு இரு பெரும் கோஷ்டிகளுக்கு இடையேயான ஒரு அரசியல் குமுறல் நிலையின் விளிம்பில் இருந்து கொண்டுள்ளது தெரிகின்றது. மறுவார்த்தையில் சொன்னால் ஏற்கனவே தேசிய அரசியல் அரங்கில் ஏற்கனவே தீர்க்கப்படாத சகல நகரங்களும் இழகத் திறந்துவிடப்படப் போகின்றன.

"அரசியல் பிரச்சாரங்கள் ஏற்கனவே ஒன்றில் நேரடியாகவோ அல்லது மோசடியாகவோ பதுங்கி ஒதுங்கியோ தொடுக்கப்பட்டுள்ளன. மதரீதியான நிந்தனை அரசியல் முறையானது சமூக திரையை கிழித்து எறிந்து கொண்டுள்ளது. அதிகாரத்துக்கான அடங்காத ஆசையும் அதன் பலனாக அதிகாரத்திலும் சலுகைகளிலும் ஒட்டிக் கொள்ளும் முயற்சியும் பேய்பிடித்த வழியில் இட்டுச் சென்றுள்ளது. இதில் அரசியல் தலைவர்கள் அதிகாரத்தை சுருட்டிக் கொள்ளவும் அதிகாரத்தை தொடர்ந்து தக்கவைக்கவும் முயற்சிக்கிறார்களே தவிர வேறொன்றும்

17ம்பக்கம்பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமசமாஜக் கட்சி ஜனாதிபதியின் சர்வாதிகார நடவடிக்கைகளுக்கு பரிந்துரையாளராக தொழிற்படுகின்றது

நந்த விக்கிரமசிங்க
ஜுலை 20, 2001

இலங்கையின் இன்றைய அரசியல் நெருக்கடியில் 1940பதுகளிலும் 1950பதுகளிலும் ட்ரொட்ஸ்கிச முன்நோக்குக்காகப் போராடிய லங்கா சமசமாஜக் கட்சி(LSSP) ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்ததையும் அவளின் ஏனைய ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளையும் ஆதரித்துப் பேசியுள்ளது. இங்ஙனம் செய்வதன் மூலம் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள் தமது நிலைப்பாட்டை அப்பட்டமான சோவினிச பாஷையில் நியாயப்படுத்திக் கொண்டுள்ளனர். பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் காரணமாக அத்தகைய நடவடிக்கை அவசியமாகியுள்ளதாக அவர்கள் வலியுறுத்திக் கொண்டுள்ளனர்.

1964ல் லங்கா சமசமாஜக் கட்சி குமாரதுங்கவின் தாயாரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவினதும் அவளது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் (SLFP) தலைமையிலான ஒரு முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தில் சேர்ந்து கொண்டதன் மூலம் சோசலிச அனைத்துலகவாத கொள்கைகளை வெளிவெளியாக கைவிட்டது. லங்கா சமசமாஜக் கட்சி இன்று ஒரு பாராளுமன்றவாத எச்சமேயன்றி வேறொன்றும் அல்ல. அது ஸ்ரீ.ல.சு.க. தலைமையிலான பொதுஜன முன்னணி அரசாங்கத்தை தூக்கிப் பிடிப்பதற்காக தனக்கு தொழிலாளர் வர்க்கத்தினுள்ளே எஞ்சியுள்ள ஆதரவையும் அதனது சோசலிச கடந்த காலத்தையும் சிடுமூஞ்சித் தனமாக சுரண்டிக் கொள்கின்றது. சமீபகால அரசியல் நிகழ்வுகள் சமசமாஜக் கட்சித் தலைவர்கள் எந்த ஒரு நிலைப்பாட்டையும் தாண்டிச் செல்ல தயாராக உள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

ஜுலை 10ம் திகதி அரசாங்கத்தின் பாராளுமன்ற பெரும்பான்மை இல்லாது போன நிலைமைக்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஒரு நம்பிக்கையில்லா பிரேரணையை முன்வைப்பது ஊர்ஜிதமான ஒரு நிலைமைக்கும் முகம் கொடுத்த நிலையில் குமாரதுங்க பாராளுமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைப்பதாகவும் வரையறுத்துக் கூறப்படாத அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு அங்கீகாரம் பெறவும் ஒரு கருத்துக் கணிப்பை நடாத்தப் போவதாகவும் அறிவித்தார். அவள் தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பாவித்து நாட்டின் நீண்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் (PTA) பொதுஜன பாதுகாப்புச் சட்டத்தையும் (PSO) கணிசமான அளவு தூக்கிப்பிடிக்க நடவடிக்கை எடுத்த ஒரு சில நாட்களின் பின்னரே பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

நீதியமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவருமான பற்றி வீரக்கோன் இந்த சர்வாதிகார நடவடிக்கைகளை எதிர்க்க எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் குமாரதுங்கவின் முக்கிய அரசியல் பரிந்துரையாளராக மாறியுள்ளார். குமாரதுங்க வீரக்கோனை உண்மையில் ஒரு நம்பிக்கைக்கு பாத்திரமான தளபதியாக காண்கிறார். அரசாங்கத்தின் நிலைப்பாட்டை முன்னெடுக்க ஸ்தாபிதம் செய்யப்பட்ட ஐந்து முன்னணி அமைச்சர்களைக் கொண்ட குழுவுக்கு அவரையும் நியமனம் செய்துள்ளார்.

குமாரதுங்கவின் ஜுலை 13ம் திகதி அரசுடமை ரூபவாஹினி தொலைக் காட்சி சேவையில் அமைச்சர் தோன்றினார். பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டமை உண்மையிலேயே ஒரு ஜனநாயக ரீதியான முன்னோடிப் பாய்ச்சல் என வீரக்கோன் வாதிட்டார். கருத்துக் கணிப்பு ஒரு "நிஜமான ஜனநாயக அரசியலமைப்பை" சிருஷ்டிப்பதற்கும் "ஒரு பாராளுமன்ற அமைப்பு நிறைவேற்று ஜனாதிபதியின் சர்வாதிகார அம்சங்களை சிருஷ்டிக்கவும்" செய்யும் எனவும் அவர் வாதிட்டார்.

இந்த அறிக்கைகளை வெளியிடும் போது வீரக்கோன் பாராளுமன்றத்தை ஒத்தி வைக்கும் குமாரதுங்கவின் தீர்மானம் "நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையின் சர்வாதிகார அம்சத்தை" நேரடியாகப் பிரயோகிப்பதாகும் என்ற உண்மையை ஒதுக்கித் தள்ளிவிட்டார். மேலும் உத்தேசிக்கப்பட்டுள்ளபடி கருத்துக் கணிப்பு எந்தவிதமான அரசியலமைப்பு மாற்றங்களையும் திட்டவட்டமாகப் பிரேரிக்கவில்லை. வெறுமனே ஒரு புதிய அரசியலமைப்பு அவசியம் என்பதை பொதுமக்கள் பொதுவில் ஒத்துக்கொள்கிறார்களா என மட்டுமே கேட்கிறது. ஒரு ஜனநாயகப் பாய்ச்சலுக்கான ஒரு முன்னோடியாக அமையாமல் குமாரதுங்கவின் நடவடிக்கை ஒரு பெரிதும் எதேச்சையான ஆட்சி முறையை நோக்கிச் செல்வதற்கான நடவடிக்கையாகும்.

"இன்றைய தேர்தல் முறை பொதுஜனங்களின் அபிப்பிராயத்தை சரியான முறையில் பிரதிபலிக்காததால்" வீரக்கோன் பெரிதும் வஞ்சனையான முறையில் நாட்டின் தேர்தல் சட்டங்களுக்கு மாற்றங்கள் அவசியம் எனவும் கூட வாதிட்டார். பொதுஜன முன்னணியின் சிரேஷ்ட தலைவர்கள் இன்றைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை தமிழ் முஸ்லீம் சிறுபான்மையினக் கட்சிகள் உள்ளடங்களாலான சிறிய கட்சிகளுக்கு கூடுதலான எடைய கொடுத்து விடுவதாகவும் இது மாற்றப்பட வேண்டும் எனவும் வாதிட்டுள்ளனர்.

ஜுலை 13ம் திகதி குமாரதுங்கவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு திரட்ட பொதுஜன முன்னணி ஆதரவு தொழிற்சங்கங்களால் கொழும்பில் கூட்டப்பட்ட ஒரு பொதுக் கூட்டத்துக்கு வீரக்கோன் தலைமை தாங்கினார். அவர் பழமைவாத யூ.என்.பி.யை வலதுசாரி கோணத்தில் இருந்து தாக்கினார். அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து லஞ்சம் பெற்று வருவதாகவும் குற்றம் சாட்டினார். "(எதிர்க் கட்சித் தலைவர்) ரணில் (விக்கிரமசிங்க) தனது துரும்புச் சுட்டின் மூலம் ஜனாதிபதியை ஆட்டிப்படைக்க முடியாது என்பதை இப்போது உணர்ந்து கொண்டுள்ளார். அதை அங்ஙனம் செய்ய அவர் மாற்றுவழிகளைத் தேடுகின்றார். அவர்கள் எம்.பீ.க்களை விலை கொடுத்து வாங்க முயற்சிக்கிறார்கள். இந்த நோக்கில் அவர்கள் விடுதலைப் புலிகளிடம் இருந்து நிதி பெற்று வருகின்றார்கள்."

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த பொதுஜன முன்னணி யூ.என்.பி. அரசாங்கங்கள் 18 ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு காட்டுமிராண்டி யுத்தத்தை நடாத்திக் கொண்டுள்ளன. இந்த இலட்சணத்தில் வீரக்கோனின் வார்த்தைகள் -யுத்த முயற்சிகளை யூ.என்.பி. காட்டிக் கொடுப்பதாக குற்றம் சாட்டுவதன் மூலம் பேரினவாத உணர்வுகளைத் தட்டி எழுப்ப மட்டுமே துணை போகின்றது. வீரக்கோனின் குறிப்புக்கள் ஒரு கிழமைக்கு முன்னர் நாட்டின் அவசரகால நிலைமையை நீடிக்க ஆதரவு வழங்கத் தவறியமைக்காக அவர் எதிர்கட்சிகளுக்கு எதிராகத் தொடுத்த கர்ண கடூரமான தாக்குதல்களுடன் பூரணமாக ஒத்துப் போகின்றது.

## அவசரகால நிலை

யுத்தத்தின் பெரும் பகுதியில் நடைமுறையில் இருந்த பரந்த அளவிலான அவசரகால அதிகாரங்கள் மாதாமாதம் பாராளுமன்றத்தில் புதுப்பிக்கப்பட வேண்டியவையாக விளங்கியது. பெரும்பாலான கட்சிகள் வழக்காறான முறையில் இதற்கு முத்திரை குத்தி வந்தன. ஆனால் ஜுன் மாதத்தில் இரண்டு சிங்கள தீவிரவாத அமைப்புக்களான ஜே.வி.பி.யும் சிஹல ல உறுமயவும் (SU) அவசரகாலச் சட்ட பிரேரணையை எதிர்த்து வாக்களித்தன. அந்தச் சட்டங்கள் வடக்கிலும் கிழக்கிலும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை நடாத்த அவசியமாக இருந்த போதும் தெற்கில் அரசாங்கத்தின் எதிர்ப்பாளர்களை துன்புறுத்தவே பயன்படுத்தப்பட்டு வருவதாக அவை வாதிட்டன. இந்த விடயம் ஜுலை 6ம் திகதி வாக்கெடுப்புக்கு வந்த போது யூ.என்.பி. இதையே தானும் செய்யப்போவதாக அச்சுறுத்தியது.

லங்கா சமசமாஜக் கட்சி பத்திரிகையான 'சமசமாஜய'வில் ஜுன் 14ல் வெளியான ஒரு ஆசிரியத் தலையங்கம் -யுத்தத்தை உக்கிரமாக்க வக்காலத்து வாங்கி வரும்- சிஹல ல உறுமயவும் (SU) ஜே.வி.பி.யும் (JVP) இராணுவ நடவடிக்கைகளை அச்சுறுத்துவதாக கடிந்து கொண்டது. "அவசரகாலச் சட்டம் இல்லாது போனால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையும் கூட பலனற்றுப் போய்விடும்... ஜே.வி.பி. பாராளுமன்றத்தில் அளித்த வாக்கு அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து; யுத்தத்தைத் தொடர்வதையும் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தொடர்ச்சியான தடை இரண்டையும் எதிர்ப்பதாக விளங்கியது. சிஹல ல உறுமய கட்சியின் நிலைப்பாடு இடைவிடாது யுத்தத்தை தொடர வேண்டும்; விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க வேண்டும் என்பதாக இருப்பின் சிஹல ல உறுமய அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக பாராளுமன்றத்தில் வாக்களிப்பதை எப்படி அது நியாயப்படுத்த முடியும்" என்றது.

ஏனைய கட்சிகள் அவசரகாலச் சட்ட பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் பயமுறுத்தலைத் தொடர்ந்து தேசிய தொலைக் காட்சியில் தோன்றி எதிர்க்கட்சிக்கு எதிரான பிரச்சார இயக்கத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்பதை வகுத்துக் கூறினார். அவசரகால நிலைக்கு எதிராக வாக்களிப்பதானது "தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்குவதற்கு திட்டவட்டமாக இட்டுச் சென்றிருக்கும்" என்றார். சோவினிச பரிபாசையில் எதிரிக்கு கைகொடுப்பதில் குற்றவாளிகளாகியிருக்கும் எனவும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் ல.ச.ச.க. இலங்கை மீதான ஏகாதிபத்திய சக்திகளின் செல்வாக்கை எதிர்த்து வந்துள்ளது. ஆனால் ஜுன் 25ம் திகதி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் (CPSL) சேர்ந்து வெளியிட்ட ஒரு கூட்டறிக்கையில் ல.ச.ச.க. அதற்கு எதிர்மாறாக வாதிட்டது. ஏகாதிபத்திய சக்திகளின் பக்கத்தில் தொடர்ந்து நின்று வருவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடையை கட்டிக் காப்பது அவசியம் என்றது. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள்(LTTE) தடை செய்யப்பட்டு அல்லது நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டுள்ள ஒரு நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை இலங்கை அரசாங்கம் நீக்குவதற்கு வாய்ப்பு இல்லை" என இவை குறிப்பிட்டன.

குமாரதுங்க ஜுலை 3ம் திகதி பாராளுமன்றத்தை ஒத்திவைத்துவிட்டு இன்றுள்ள அடக்குமுறைச் சட்டங்களைப் பலப்படுத்த தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தினார். அவற்றை தீவு பூராவும் திணிக்கவும் தமிழீழ விடுதலைப் புலிகளை தடை செய்யவும் நடவடிக்கை எடுத்தார். லங்கா சமசமாஜக் கட்சி(LSSP) "யூ.என்.பி.யின் சதியை" தோற்கடிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தமைக்காக அவரைப் பாராட்டியது.

இதே நாளன்று லங்கா சமசமாஜக் கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் பொதுஜன முன்னணிக்கும் யூ.என்.பி.க்கும் இடையே ஒரு தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைக்கும்படி பெரும் வர்த்தக நிறுவனங்களில் ஒரு பகுதியினரால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு பதிலிறுக்கும் வகையில் ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டது. இதற்கு முன்னர் லங்கா சமசமாஜக் கட்சி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சகல கட்சிகளும் ஒரு பொது நிலைப்பாட்டை வகிக்க வேண்டும் என அழைப்பு விடுத்தது. சமீபத்தில் -ஜுன் 25 அளவில்- இக்கட்சி "விடுதலைப் புலிகள் தனது நிலைப்பாட்டை இளக்கிக் கொள்ளும் விதத்தில் மேலும் நெருக்குவாரத்தை உருவாக்கும் பொருட்டும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு வரவும் பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் ஒரு பொதுவான இணக்கப்பாட்டு அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும்" என அழைப்பு விடுத்தது.

ஆனால் சமசமாஜக் கட்சி தேசிய அரசாங்கத்துக்கான பிரேரணைக்கு ஒரு புதுவிதமான நடுக்கத்தை காட்டிக் கொண்டது. "ஒரு யுத்தம் போன்ற ஒரு தேசிய அவசரகால நிலையில் அரசாங்கமும் எதிர்க் கட்சியும் ஒன்றாகச் செயற்படத் தீர்மானம் செய்தால்" மட்டுமே அது சாத்தியம் என அது கூறிக்கொண்டது. அந்த அறிக்கை மேலும் கூறியதாவது: "இந்நாட்டில் உள்ள யுத்த நிலைமை ஒரு தேசிய அரசாங்கத்தை ஸ்தாபிதம் செய்வதற்கான தருணமானால் யூ.என்.பி. பொதுஜன முன்னணியின் -சிறப்பாக ஸ்ரீ.லசு.க.வின் பகுதியினருடன் யுத்தம், ஒரு சமாதானத் தீர்வை எட்டுதல் சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக இணங்கிப் போகின்றதா என்பதை அறிய மக்கள் உரித்துடையவர்கள்."

உண்மையில் லங்கா சமசமாஜக் கட்சி தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைக்க முன்நிற்கும் ஆளும் வர்க்கத்தில் உள்ளவர்களின் அரசியல் தர்க்கத்தை புரிந்து கொண்டுள்ளது. இரு பெரும் கட்சிகளுக்கு இடையேயான ஒரு கூட்டு இல்லாமல் அரசியல் பாரிசவாதம் தொடரும். ஒரு புறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தச் செய்யும் எந்த ஒரு முயற்சியும் ஜேவி.பி., சிஹல ல உறுமய போன்ற சிங்கள பேரினவாத அமைப்புக்களிடமிருந்து எதிர்ப்பைத் தூண்டிவிடும். மறுபுறத்தில் யுத்தத்தை உக்கிரமாக்குவது தமிழ் அரசியல் கட்சிகளின் எதிர்ப்புக்கு இட்டுச் செல்லும். இதே சமயம் பெரும் வர்த்தக நிறுவனங்கள் முதலீட்டை அதிகரிப்பதற்கும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை தடுப்பதற்கான வழியாக சர்வதேச நாணய நிதியத்தின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை அமுல் செய்யும்படி அரசாங்கத்தை கோரி வருகின்றன.

பல தசாப்த காலங்களாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஒரு விசுவாசமான பங்காளராக இருந்துவிட்டு முதலாளி வர்க்கத்தின் உத்தரவுகளை அமுல் செய்யாமல் இருப்பது என்பது லங்கா சமசமாஜக் கட்சியின் மனச் சாட்சிக்கு ஒத்துப் போகாததாக உள்ளது. ஆனால் யூ.என்.பி.யுடன் நேரடியாக ஒரு கூட்டரசாங்கத்துள் நுழைந்து கொள்வதை நியாயப்படுத்த லங்கா சமசமாஜக் கட்சி கூறிவந்த சந்தர்ப்பவாத அடிப்படைக் காரணங்களை -இலங்கை ஆளும் வர்க்கத்தின் பாரம்பரியக் கட்சியான யூ.என்.பி.யுடன் ஒப்பிடும் போது ஸ்ரீ.ல.சு.க.(SLFP) "குறைந்த கெடுதியை" கொண்டுள்ளது- பாதிப்பதாக உள்ளது.

ஜுலை 3ம் திகதி ல.ச.ச.க.வும் இ.க.க.வும் வெளியிட்ட தமது அறிக்கையில் யூ.என்.பி.யுடனான எந்த ஒரு கூட்டரசாங்கத்தையும் எதிர்த்துள்ளனர். அது "பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மத்திய -இடது கால குணாம்சத்தை தீவிரமாக மாற்றமடையச் செய்து விடும்" என்றுள்ளார். ஆதலால் இவ்விரு கட்சிகளும் யூ.என்.பி. அதனது இரத்தம் தோய்ந்த கரங்களுடன் எந்த ஒரு அரசாங்கத்திலும் ஒரு பாகமாக இருக்கும் எண்ணத்தை நிராகரிக்கின்றன."

இதே வேளையில் ல.ச.ச.க. இ.க.க. கட்சிகளின் தலைவர்கள் யூ.என்.பி.யுடன் கூட்டாக இருப்பது என்பது தமது சொந்த சந்தர்ப்பவாத அவசியங்களை வெளிவெளியாக அம்பலப்படுத்தி விடும் என்பதையிட்டும் பெரிதும் கவலை கொண்டுள்ளனர். அவர்களது எதிர்ப்பு கூடவே ஆளும் வர்க்கத்துக்கு ஒரு பெரிதும் அடிப்படையான விடயத்தைக் கோடிட்டுக் காட்டுகின்றது. ல.ச.ச.க.வும் இ.க.க.வும் முதலாளித்துவக் கட்சிகளின் ஒரு மாபெரும் கூட்டரசாங்கத்தில் சேர்ந்து கொள்ளும் போது அத்தகைய அரசாங்கத்துக்கு எதிராக தவர்க்க முடியாத விதத்தில் பொதுஜன வெறுப்பு ஒரு புரட்சிகரப் பாதையில் பயணம் செய்யும் போது அதைத் தடுப்பதற்கான இடிமின்னல் பிரம்பு தடியாகச் செய்ற்படுவது யார்?

எந்தளவுக்கு ல.ச.ச.க. நாற்றம் கண்டு போயிற்று என்பதை அதனது இன்றைய நடவடிக்கைகளை நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் அது எடுத்த நிலைப்பாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துப் புரிந்துகொள்ள முடியும். 1958ல் இக்கட்சி அன்றைய பிரதமரும் குமாரதுங்கவின் தந்தையுமான சொலமன் டயஸ் பண்டாரநாயக்கவின் அவசரகாலச் சட்டத்தை திணிக்க வாய்ப்பளிக்கும் பொருட்டு பொதுசன பாதுகாப்பு சட்டத்தை திருத்தும் முடிவை எதிர்த்து தீவு பூராவும் தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தது. இத்திருத்தங்கள் சிங்கள தீவிரவாதிகளுக்கு எதிரானவை என்ற பண்டாரநாயக்கவின் நியாயப்படுத்தல்களை ல.ச.ச.க. தலைவர்கள் நிராகரித்தனர்.

இன்று மோசமான அரசியல் நெருக்கடி நிலைமையின் கீழ் ல.ச.ச.க. தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராகத் தவிர்க்க முடியாத விதத்தில் பயன்படுத்தப்படும் ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளை திணிப்பதை ஆதரிப்பதன் மூலம் முதலாளித்துவ அரசின் விசுவாசமான காவலனாக செயற்படுகின்றது. ல.ச.ச.க.வின் ஒரே பாராளுமன்ற உறுப்பினரான பற்றி வீரக்கோன் தனது ஆசனத்தை தொழிலாளர்களிடம் இருந்து கிடைத்த வாக்குகளின் மூலம் அல்லாது குமாரதுங்கவின் நல்லெண்ணம் மூலமே பெற்றுக் கொண்டார். ல.ச.ச.க.வின் ஆதரவு தொழிலாளர் மத்தியில் பெரும் அளவில் வீழ்ச்சி கண்டு விட்டதை இது எடுத்துக் கட்டுகின்றது. கடந்த பொதுத் தேர்தலில் வீரக்கோன் தேசியப் பட்டியலின் மூலம் பொதுஜன முன்னணியின் ஒரு அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவர் இதற்கான தமது கோழைத்தனமான ஆதரவை குமாரதுங்கவுக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அதன் கொள்கைகளுக்கும் ஆதரவு வழங்குவதன் மூலம் காட்டிக் கொண்டார்.

ல.ச.ச.க. தலைவர்கள் 1964ல் தமது சோசலிச கொள்கைகளை அப்பட்டமாகக் கைகழுவிவிட்டதோடு இலங்கை முதலாளி வர்க்கத்தின் சகல அவசியங்களுக்கும் எதிரில் அரசியல் ரீதியில் விலைமகளாக தொழிற்பட்டு வந்துள்ளனர். இன்றைய அரசியல் குழப்ப நிலைமையில் இருந்து தலையெடுக்கும் சர்வாதிகார வடிவிலான அரசாங்கத்துக்கு பரிந்துரையாளர்களாக ல.ச.ச.க. தலைவர்கள் இன்று தமது சேவைகளை வழங்கி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திகிலூட்டும் அரச குடும்ப படுகொலைகள் நேபாளத்தை அரசியல் குழப்பத்துள் மூழ்கடித்துள்ளது

பீட்டர் சைமண்ட்ஸ்
ஜூன் 6, 2001

கடந்த வெள்ளிக்கிழமை மன்னரும் ராணியும் அரச குடும்பத்தின் கணிசமான எண்ணிக்கையினருடன் சேர்த்து படுகொலை செய்யப்பட்டமை வறிய இமாலய இராசதானியான நேபாளத்தை அரசியல் குழப்ப நிலைமைக்குள் தள்ளியுள்ளது. படுகொலை சந்தேக நபரான இளவரசர் திபேந்திரா தலைநகர் கத்மண்டுவில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் உயிருக்கு ஊசலாடிக் கொண்டு இருக்கும் வேளையில்- சனிக்கிழமை- மன்னராக முடிசூட்டப்பட்டார். நான்கு நாட்களுள் -மூத்த சகோதரர்- ஒரு மூன்றாவது மன்னர் சிங்காசனம் ஏற வழிவிட்டு திங்கட்கிழமை காலை அவர் மரணமானார்.

நடைபெற்ற சம்பவங்களுக்கு பூரண விளக்கம் கேட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிகளில் இறங்கியதைத் தொடர்ந்து அரசாங்கம் நேற்று ஊரடங்கு சட்டத்தை இரண்டாவது தடவையாக அமுல் செய்தது. துப்பாக்கி தற்செயலாக வெடித்ததால் இம்மரணங்கள் இடம்பெற்றன என்ற நம்ப முடியாத அதிகாரபூர்வமான அறிக்கையை எவரும் நம்பவில்லை. புதிய மன்னர் கயனேந்திராவும் அவரது செல்வாக்கிழந்த மகன் பராசும் சம்பந்தப்பட்ட ஒரு அரச குடும்ப சதி பற்றிய வதந்திகள் பெரும் அளவில் பரவின. திங்கட்கிழமை பொலிசார் நடாத்திய அதிரடி தாக்குதலில் குறைந்த பட்சம் இருவர் கொல்லப்பட்டதோடு 19 பேர் காயமடைந்தனர்.

இந்த முழு விவகாரங்களும் நேபாளத்தில் மட்டுமன்றி அனைத்துலக ஆளும் வட்டாரங்களிலும் ஒரு விநோதமான பதட்ட நிலையை தூண்டி விட்டது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே அமைந்துள்ளதும் ஏற்கனவே அரசியல் ரீதியில் சிதறுண்டு போன நாடுமான நேபாளத்தில் இது மேலும் பதட்ட நிலையை உருவாக்கும் என அரசாங்கங்கள் கணித்துக் கொண்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை மத்திய கத்மண்டுவில் உள்ள அரச மாளிகையில் என்ன நடைபெற்றது என்பது பற்றி போதுமான விளக்கங்கள் இன்னமும் தலைநீட்டுவதாக இல்லை. இந்தச் சம்பவம் பற்றிய முதல் செய்திகள், நேபாளத்தில் அன்றி மறுநாள் அனைத்துலக தகவல் சாதனங்கள் ஊடாகவே வெளிவந்தன. அச்செய்திகள் உள்ளூர் செய்தி வட்டாரங்களில் இருந்து பெறப்பட்டதாகவும் பின்னர் ஏனைய தகவல் துறைகளால் வெளியிடப்பட்டதாகவும் உள்ளது.

இந்த அறிக்கையின் படி அரச குடும்பம் இரவு உணவுக்கான அரச மாளிகையில் விருந்துபசார மண்டபத்தில் கூடியுள்ளது. முடிக்குரிய இளவரசர் 29 வயதான திபேந்திரா ஒரு பிரபுத்துவ ராண குடும்ப உறுப்பினரும் ஒரு முன்னாள் அமைச்சரின் மகளுமான தேவ்யானி ரணாவை திருமணம் செய்து கொள்வதை தனது பெற்றோர் -குறிப்பாக தனது தாயார்- எதிர்த்ததையிட்டு ஆத்திரமடைந்து இருந்ததாக தெரிகிறது. ராணியின் எதிர்ப்புக்கான காரணங்கள் வேறுபட்ட போதிலும் எதிர்கால மணப்பெண்ணின் இந்திய தொடர்புகளையிட்டு அவர் ஆத்திரம் கொண்டிருந்ததே முக்கியமாக சுட்டிக் காட்டப்படுகின்றது. மணப்பெண்ணின் தாயார் இந்திய தொடர்புகள் கொண்டிருந்ததோடு அவள் பல இந்திய முன்னணி அரசியல்வாதிகளுடன் குடும்ப உறவுகளும் வைத்திருந்தார்.

ஒன்று அல்லது இரண்டு தன்னியக்க துப்பாக்கிகளுடன் சற்று மது போதையில் அறையில் இருந்து வெளியேறிய முடிக்குரிய இளவரசர் மண்டபத்துக்கு திரும்பியதோடு கதவை சாத்திக் கொண்டு குடும்பத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். சில விளக்கங்களின்படி அவர் கைத்துப்பாக்கியால் அவர்களின் தலையில் சுடுதைன் மூலம் தனது பெற்றோரின் மரணத்தை நிச்சயப்படுத்திக் கொண்டார். துப்பாக்கிப் பிரயோகத்தின் போது அரச குடும்ப ஊழியர்களும் காவலர்களும் அரச மாளிகை ஆசாரங்களைக் கடைப்பிடித்ததோடு "குடும்ப விவகாரங்களில்" தலையிடவில்லை. இந்த வெறியாட்டம் இறுதியில் திபேந்திரா எதிர்கொள்ளப்பட்ட போதே ஒரு முடிவுக்கு வந்தது. திபேந்திரா தன்னை தானே சுட்டுக் கொண்டதைத் தொடர்ந்து உணர்விழந்த நிலையில் ஒரு இராணுவ ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இறந்தவர்களுள் மன்னர் பிரேந்திரா பேர் பேர்க்கிரம் ஷா டேவ் (55 வயது) ராணி ஐஸ்வர்யா அவர்களின் இரண்டு பிள்ளைகளான இளவரசர் நிராஷன் (22 வயது) இளவரசி சுருதி (24 வயது) எல்லோரும் அடங்குவர். மன்னரின் இரண்டு சகோதரிகளான இளவரசி சாந்தி, இளவரசி சாரதா ஷாவும் இவரின் கணவர் கட்கா பேர்க்ரம் ஷா, காலம் சென்ற மன்னரின் ஒரு மைத்துனரான ஜயந்தி ஷாவும் இதில் அடங்குவர். குறைந்த பட்சம் மேலும் மூவர் காயமடைந்தனர். இதில் ஒருவரான பிரேந்திராவின் சகோதரர் டிரேந்திரா ஷா அவரின் காயங்கள் காரணமாக திங்கட்கிழமை காலமானார்.

துப்பாக்கிச் சூட்டு சத்தங்கள் மன்னர் மாளிகைக்கு வெளியே கேட்டதோடு சம்பவம் பற்றிய செய்திகள் அனைத்துலக செய்தி ஊடகங்களிலும் பரவியது. சனிக்கிழமை மாலை 1 மணிவரை -15 மணித்தியாலங்கள் வரை- எந்த ஒரு உத்தியோகபூர்வமான அறிக்கையும் வெளியிடப்படவில்லை. மன்னரின் ஆலோசனைச் சபையாக விளங்கிய அரச சபையின் (State Council) தலைவரான கெஷார் யுங் ராஜிமாஹி அரச தொலைக் காட்சியிலும் வானொலியிலும் மன்னர் இறந்து விட்டதாகவும் "முடிக்குரிய வாரிசு சம்பந்தமாக வழக்கில் உள்ள சட்டம் மரபுகளுக்கு இணங்க" முடிக்குரிய இளவரசரால் வெற்றிடம் பதிலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவித்தார்.

தலைவர் தனது பிரகடனத்தில் மேலும் கூறியதாவது: "புதிய மன்னர் தமது கடமைகளை நிறைவேற்ற உடல் ரீதியில் முடியாதவராக இருப்பதாகவும் கத்மண்டு இராணுவ ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவரின் சிறிய தந்தையான இளவரசர் கயனேந்திரா முடிக்குரியவராக பிரகடனம் செய்யப்பட்டுள்ளதாக" அறிவித்தார். மரணங்கள் ஒரு கொலை அல்லவெனவும் மகிழ்ச்சிகரமான குடும்ப ஒன்றுகூடலில் ஒரு "தன்னியக்க ஆயுதம் திடீரென வெடித்ததால்" ஏற்பட்ட விளைவு எனவும் காட்டும் நம்ப முடியாத பணியை இட்டு நிரப்பும் வேலை கயனேந்திராவுக்கு வழங்கப்பட்டது.


இந்த விளக்கம் கணிசமான அளவு ஆத்திரத்தை தூண்டி விட்டது. ஏனெனில் இது அந்தளவுக்கு விநோதமானதாக விளங்கியது. அத்தோடு கயனேந்திராவோ அல்லது அவரது மகன் இளவரசர் பராருசோ செல்வாக்கு இழந்தவர்களாகவும் விளங்கினர். 1990ல் மன்னர் பிரேந்திராவின் வரையறுக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்ட முடியாட்சியை ஏற்படுத்தும் தீர்மானத்தை எதிர்த்த பதில் ஆளுனர் (Regent) கொடுங்கோலனாக பிரபல்யம் அடைந்து போயிருந்தார். மூன்று தசாப்த காலங்களில் ஒரு தேசிய தேர்தலை நடாத்தும் அனுமதி வழங்கப்பட்டது. 27 வயதான பராஸ் ஒரு தந்திரப் பேர்வழியாகவும் குறைந்த பட்சம் இரண்டு வாகன விபத்து கொலைகளில் சம்பந்தப்பட்டவராகவும் பேர்போனவர். சமீபத்தில் -ஆகஸ்டில்- ஒரு பிரபல நேபாள பாடகரை வாகனத்தினால் மோதிக் கொன்றார். 5 இலட்சம் மக்களின் கையொப்பங்களுடன் கூடிய ஒரு பெட்டிசம் சட்ட நடவடிக்கை எடுக்கும்படி கையளிக்கப்பட்ட போதும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எந்த ஒரு தெளிவான உத்தியோகபூர்வ விளக்கமும் இல்லாத நிலையில் மாளிகை சூழ்ச்சியை பற்றிய வதந்திகள் கத்மண்டுவில் பரவின. கயனேந்திரா தொடக்கம் நேபாள காங்கிரஸ் கட்சித் தலைவரும் பிரதமருமான கிரிஜா பிரஷாத் கொயிராளை வரை சகலரும் இக்கொலைக்குப் பொறுப்பாளிகளாக குற்றம் சாட்டப்பட்டனர். கொயிராளவும் ஒரு செல்வாக்கிழந்த பேர்வழி. 1996ல் இருந்து பொலிசையும் இராணுவத்தையும் எதிர்த்து போராடி வரும் மாஓ வாத கெரில்லா குழுவின் ஒரு இரகசிய அங்கத்தவராக முடிக்குரிய இளவரசரின் பெயரும் பேசிக் கொள்ளப்பட்டது.

இந்தக் கதைகளில் ஏதேனும் உண்மையின் மூலகங்கள் உண்டா என இக்கட்டத்தில் தீர்மானம் செய்வது கஷ்டம். புதிய தகவல்கள் எதுவும் வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக இல்லை. குறிப்பாக அரச மண்டபத்தில் அச்சமயத்தில் இருந்தவர்கள் பகிரங்க அறிக்கை வடிவில் வெளியிட்ட எதுவும் வெளிச்சம் பாய்ச்சுவதாக இல்லை. இந்த வதந்திகள் சில ஊகங்களை அடிப்படையாகக் கொண்டு இருந்தன. உதாரணமாக அவர் இந்த சோகமயமான இராப்போசன விருந்தில் இருந்து நழுவிக்கொண்டிருந்தமை கயனேந்திராவின் "குற்றத்துக்கு" பலம் சேர்க்கிறது. மாஓவாத கெரில்லா குழு இதில் சம்பந்தப்பட்டுள்ளது என்பது உத்தியோகபூர்வமான முறையில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை பிரதமர் கொயிரால விடுத்த அறிவித்தலில் இச்சம்பவங்கள் பற்றி ஒரு உத்தியோகபூர்வமான விசாரணை நடாத்தப்படும் என தெரிவித்தார். ஆனால் அத்தகைய ஒரு விசாரணை தோற்றுவிக்கக் கூடிய அரசியலமைப்புப் பிரச்சினைகள் காரணமாக அது ஒரு துணிச்சலான சிபார்சாக கணிக்கப்படுகின்றது. இந்நாடு ஒரு அரசியலமைப்புச் சட்ட முடியாட்சியாக -பிரித்தானியாவைப் போன்ற- வருணிக்கப்படுவது வழக்கம். ஆனால் மன்னராட்சி முறையானது சட்டத்துக்கு மேலாக மன்னரைக் கொள்ளும் ஒரு அரசியலமைப்புச் சட்ட சரத்தின் நலன்கள் உட்பட கணிசமான அதிகாரங்களை தன்வசம் கொண்டுள்ளது. அவரின் எந்த ஒரு நடவடிக்கையையும் எந்த ஒரு நீதிமன்றத்திலும் சவால் செய்ய முடியாது. அத்தோடு அரச குடும்ப விவகாரங்களை பாராளுமன்றம் விவாதிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

நினைவற்ற நிலையில் உள்ள புதிய மன்னர் திபேந்திரா இராணுவ ஆஸ்பத்திரியில் உயிர் நீடித்திருக்கச் செய்யப்பட்டுள்ள நிலையில் ஒரு அரசியலமைப்பு பிரச்சினையை



1990ல் இளவரசர் திபேந்திராவின் பிறந்த தின வைபவத்தின் போது, (வலது) மன்னர் பிரேந்திரா ராணி ஐஸ்வர்யா முன்னிலையில் இளவரசர் திபேந்திரா

தோற்றுவித்துள்ளார். ஒரு திறந்ததும் மூடியதுமான வழக்கு நிரூபிக்கப்பட்டாலும் கூட திபேந்திரா மீது கொலைக் குற்றத்தின் பேரில் வழக்குத்தாக்கல் செய்ய முடியாது. திபேந்திரா மரணமடைந்து அவரது இடத்துக்கு அவரின் சிறிய தகப்பனாரான கயனேந்திரா நியமிக்கப்பட்டதோடு இந்தச் சட்ட புதிர் திங்கட்கிழமை காலை இலகுவாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. பத்திரிகைச் செய்திகளின்படி புதிய மன்னர் குதிரை வண்டியில் இராணுவ பாண்டு வாத்தியத்துடனும் குதிரைப் படையுடனும் வீதி வலம் வருவதைக் காண கூடிய ஆயிரக் கணக்கான மக்கள் ஆர்வம் அற்றவர்களாக காணப்பட்டனர்.

பின்னர் திங்கட்கிழமை வீதிகளில் இறங்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் "திபேந்திரா அப்பாவி" "நிஜ கொலைகாரர்களுக்கு தண்டனை கொடு" "எமக்கு வேண்டாம் கயனேந்திரா" என்ற கோஷங்களை கோஷித்தனர். பொலிசாரும் இராணுவத்தினரும் குண்டாந்தடிகளையும் கண்ணீர்ப் புகையையும் பாவித்ததோடு ஆர்ப்பாட்டத்தை உடைக்க எச்சரிக்கை குண்டுகளையும் வெடிக்க வைத்தனர். நள்ளிரவு ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்ததோடு கண்ட இடத்தில் சுடும் உத்தரவையும் பிறப்பித்தனர். இது நேற்று நண்பகலில் இருந்து புதுப்பிக்கப்பட்டது.

திங்கள் இரவு நிகழ்த்திய உரையில் கயனேந்திரா சந்தேகத்துக்கு இடமற்ற விதத்தில் கணிசமான அளவு நெருக்குவாரத்துக்கு உள்ளாகியதோடு தேசிய ஐக்கியத்துக்கும் அழைப்பு விடுத்தார். இந்த மரணங்களையிட்டு உயர் நீதிமன்ற பிரதம நீதியரசரும் பாராளுமன்ற சபாநாயகரும் எதிர்க் கட்சித் தலைவர் மாதவ் குமார் நேபாலும் ஒரு உத்தியோகபூர்வமான விசாரணையை நடாத்துவார் எனவும் அறிவித்தார். எவ்வாறெனினும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சியின் (UML) அங்கத்தவரும் இதில் கலந்து கொள்ள மறுப்புத் தெரிவித்ததை தொடர்ந்து விசாரணையினால் ஏற்படக் கூடிய நம்பிக்கை விரைவில் மங்கிப் போயிற்று.

## வரலாற்று ரீதியில் காலத்துக்கு ஒவ்வாதது

இந்தக் கட்டுரையின் நோக்கம் இந்த விசித்திரமான நிகழ்வுகளில் சம்பந்தப்பட்டவர்களின் உளவியல் ஊக்கிகளை விளக்க முயற்சிப்பது அல்ல. மொத்தத்தில் முழு நாடும் பொருளாதார பின்னடைவினாலும் வறுமையினாலும் நாசம் கண்டு போகையில் அரச குடும்ப அங்கத்தவர்கள் நேபாள மக்களில் பெரும்பான்மையினர் முகம் கொடுத்துள்ள கசப்பான சமூக யதார்த்தங்களில் இருந்து இழுத்து மூடப்பட்ட ஒரு ஆடம்பர வாழ்க்கையை வாழ்ந்து கொண்டுள்ளனர் எனக் கூறுவது மட்டும் போதுமானது. அத்தகைய ஒரு சூழ்நிலையானது அதற்கேயுரிய விசித்திரமான பதட்டங்களை சந்தேகத்துக்கு இடமற்ற விதத்தில் சிருஷ்டிக்கின்றது.

ஒருவர் அங்ஙனம் அறியாது போனால் இதில் சம்பந்தப்பட்ட தனிநபர்கள் -கோர்கி (Corgeis) நாயை ஊட்டி வளர்க்கும், வாட்டார் கலரினால் சித்திரம் தீட்டும், பரசூட்டில் இறங்கும் மன்னர்; செல்லம் கொடுத்து வளர்த்து, ஈடன் (Eton) கல்லூரியில் கல்வி கற்று கவர்ச்சியான மனைவியின் பின்னால் அலையும் மகன்; எல்லா விதத்திலும் திட்டமிடும் ராணி இந்து பாரம்பரியத்தில் நின்று முடிக்குரிய இளவரசருக்கு பேசி செய்யப்பட்ட ஒரு திருமணத்துக்கு ஏற்பாடு செய்தல் ஆகியன- ஒரு நூற்றாண்டுக்கு அல்லது அதற்கும் முன்னதாக வாழ்க்கைச் சம்பாத்தியத்தின் பண்புகள் போல் தோன்றும்.

பூகோளத்தின் இப்பிராந்தியத்தில் முதலாளித்துவத்தின் அரசியல் அவசியங்களுக்காக இது இல்லாது போனால் இந்த நூதனமான ஜாதி நீண்ட காலத்துக்கும் முன்னரே எந்த ஒரு நியாயாதிக்கத்தையும் இழந்து மறைந்து போய் இருக்கும். அரச குடும்பம் தொடர்ந்தும் நேபாளத்தில் இருந்து வருவதோடு அது கணிசமான அளவு அதிகாரத்தையும் கொண்டுள்ளது.

அனைத்துலக பிரதிபலிப்புகள் நடுக்கமூட்டுவதாக உள்ளது. அரச குடும்ப கொலைகளின் ஈடாட்டம் அளிக்கும் தாக்கங்களின் பேரில் அச்சத்தை ஊட்டுகிறது. உதாரணமாக அவுஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் அலக்சாண்டர் டவுணர் வார இறுதியில் ஒரு அசாதாரணமான அறிக்கையை வெளியிட்டார். மரணங்களைப் பற்றிய உத்தியோகபூர்வமான விவரங்களை தமது அரசாங்கம் "மதிப்பதாகவும்" குறிப்பிட்டது. "இவை எல்லாம் நேபாளத்தின் ஸ்திரப்பாட்டுக்கு ஏற்படுத்தும் தாக்கங்களையிட்டு" கவலை தெரிவித்தது. அவுஸ்திரேலியா போலல்லாது அமெரிக்க நிர்வாகம் "துப்பாக்கி சடுதியாக வெடித்தது" என்ற கோட்பாட்டை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் அது நாட்டின் ஸ்திரப்பாட்டின் பேரிலான தனது கவலையை வெளியிட்டது.

பீபீசி வெப் தளத்தில் வெளியான ஒரு கட்டுரை ஒரு பெரிதும் சாதகமான குறிப்பை வெளியிட்டது. புதிய மன்னர் கயனேந்திரா "பொது மக்கள் அவரை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் ஒரு பெரும் கஷ்டத்தை" முகம் கொடுத்த போதிலும் "ஒரு பாதுகாப்பான சோடி கரங்களாக கருதப்பட்டவர்" என வாசகர்கள் அங்கீகரிக்கச் செய்ய முயல்கிறார். பீ.பீ.சி.யின்படி அப்பதவிக்கான கயனேந்திராவின் முக்கிய தகுதிகள், பாதுகாப்பு வேலையிலான அவரின் ஈடுபாடும் நேபாள உல்லாசப் பயணத்தை அபிவிருத்தி செய்வதில் அவரின் பங்குமேயாகும். கத்மண்டுவில் உள்ள பல ஹோட்டல்களின் சொந்தக்காரராக விளங்குவதோடு அவர் தனிப்பட்ட நிதி சம்பந்தப்பட்ட நலன்களை கொண்டுள்ளார். அவரது ஏனைய வர்த்தகங்கள் கிழக்கு நேபாளத்தில் உள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தையும் ஒரு சிகரட் பக்டரியையும் உள்ளடக்குகின்றது.

அனைத்துலகத் தொடர்பு சாதனங்கள் கயனேந்திராவின் குணாதிசயங்கள் பற்றி ஒரு சில மறைமுகமான தாக்குதல்களைத் தொடுத்துள்ள போதிலும் இறந்த மன்னரைப் பற்றிய இவற்றின் விவரங்கள் முகத்துதி செய்வதாகவும் விளங்கியது. பல செய்திகள் பிரேந்திரா "மக்களின் பெருவிருப்புக்கு உரியவராகவும் இந்து தெய்வமான விஷ்ணுவின் அவதாரமாகவும் கணிக்கப்பட்டவர்" என வருணித்தன. இந்திய பத்திரிகையான இந்துவில் வெளியான ஆசிரியத் தலையங்கம் இன்னும் பெரிதும் ஊதாரித் தனமானது. அது கூறியதாவது: "உண்மையில் படுகொலை செய்யப்பட்ட மன்னர் சாதாரண நேபாள பிரஜைகளிடையே பெருமளவிலான அங்கீகாரத்தைக் கொண்டிருந்தார். அவரது நீண்ட ஆட்சியின் விசித்திரமான உச்சப் புள்ளி 1990ல் நேபாளத்தை ஒரு அரசியலமைப்புக்குட்பட்ட மன்னராட்சி முறையைக் கொண்ட ஜனநாயக நாடாக மாற்ற அவர் ஆற்றிய மக்கள்-நட்புறவு பாத்திரமாகும்."

இந்த ஆசிரியத் தலையங்கம் வடக்குப்புற அயல் நாட்டில் இந்தியாவின் மூலோபாய நலன்கள் பற்றி குறிப்பிட்ட போது இந்த புகழ்ச்சிக்கான காரணங்கள் தெளிவாகியது. கத்மண்டு, புதுடில்லி, பீகிங் சம்பந்தமான தமது வெளிநாட்டு கொள்கைகளை சமப்படுத்துவதில் பெரிதும் அக்கறை காட்டுகின்றது. நேபாளத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாரி நிகழ்ச்சி நிரல்கள் அதனது பெரும் அயலவர்களால் ஏற்படக் கூடிய பாதுகாப்பு பிரச்சினைகளை தவிர்த்துக் கொண்டவை அல்ல." கடந்த காலத்தில் இந்தியா நேபாளத்திலான சீன செல்வாக்கையிட்டு கவலை தெரிவித்து வந்துள்ளது. பீகிங் மாஓவாத கெரில்லாக்களுக்கு ஆதரவளிப்பதாக குற்றம் சாட்டி வந்துள்ளது. சீனா அதன் புறத்தில் நேபாளத்தில் வசித்து வரும் 30000 தீபெத்திய புலம் பெயர்ந்த மக்கள் தீபெத் மீதான தனது பிடியை அரசியல் ரீதியில் அச்சுறுத்தும் என எண்ணியது.

சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே சமப்படுத்தும் நேபாளத்தின் நடவடிக்கையானது எப்போதும் நிச்சயமற்றதாக விளங்கியது. இந்து பத்திரிகை அதனது ஆய்வில் நேர்மையானதாக விளங்கியிருக்குமானல் 1990ல் ஒரு புதிய அரசியலமைப்பை பிரகடனம் செய்யும் பிரேந்திராவின் தீர்மானம் ஒரு தருமசிந்தை படைத்த மன்னனின் நடவடிக்கை அல்ல; ஆனால் அவரின் ஆட்சிக்கு எதிரான பரந்த அளவிலான எதிர்ப்புக்களினால் அவர் மீது திணிக்கப்பட்ட ஒன்றாகும் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கும். இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் 500க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர். இந்த ஆர்ப்பாட்டங்கள் ஒரு புறத்தில் 1989 ஆண்டின் கடைப் பகுதியில் நேபாளத்தின் சீன ஆதரவு நடவடிக்கைகளாக தோன்றியவற்றுக்கு எதிராக ஒரு வர்த்தகத் தடையை திணிக்க இந்திய அரசாங்கம் திணித்த தீர்மானத்தினால் உருவான மோசமான சமூக, அரசியல் நெருக்கடியின் பெறுபேறாக ஏற்பட்டவையாகும். இந்நடவடிக்கை விரைவில் எரிபொருள், உப்பு, சமையல் எண்ணெய் மற்றும் அடிப்படை பொருட்களில் கட்டுப்பாட்டை உண்டுபண்ணியது. இது நேபாள உல்லாசப் பயணக் கைத்தொழிலில் வீழ்ச்சியை உண்டுபண்ணியதோடு சமூக பதட்ட நிலையையும் உக்கிரம் காணச் செய்தது.

1990 அரசியலமைப்பு எந்த விதத்திலும் ஜனநாயகத்தின் ஒரு மாதிரியாக இருக்கவில்லை. மன்னர் சட்டத்துக்கும் பாராளுமன்றத்துக்கும் மேலாக இருத்தப்பட்டார். மன்னரின் வருமானமும் சொத்துக்களும் வருமான வரிக்கு அப்பாற்பட்டதாகவும் தீண்ட முடியாததாகவும்



திபேந்திரா

விளங்கியது. அரசியலமைப்புச் சட்டம் மன்னர் அரச பீடம் ஏறுவது சம்பந்தமாக சட்டம் இயற்றுவது, சட்டத்தை திருத்துவது, சட்டத்தை நீக்குவது உட்பட ஒரு தொகை ஏகபோக அதிகாரங்களை உள்ளடக்கி இருந்தது. அத்தோடு அவர் யுத்தம், வெளிநாட்டு ஆக்கிரமிப்பு, ஆயுத கிளர்ச்சி அல்லது தீவிரமான பொருளாதார அவசரகால நிலையில் பரந்த அவசரகால அதிகாரங்களை பிரயோகிக்கும் உரிமையை கொண்டிருந்தார். அவசரகால நிலைப் பிரகடனம் ஒன்றில் பாராளுமன்றத்தின் கீழ் சபையால் அல்லது அது இடம்பெறாத போது மேற் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே ஒரே பாதுகாப்பாகும். ஜனநாயக ரீதியிலான பாராளுமன்றத்துடன் ஆட்சி செய்யும் பெரிதும் விருப்புக்குரிய ஒரு மன்னர் என தொடர்புச் சாதனங்கள் தீட்டிய சித்திரத்துக்கு முரணாக ஜனநாயக உரிமைகளின்மையும் பணக்காரருக்கும் ஏழைகளுக்கும் இடையேயான பெரு வளைகுடாவும் அமைதியின்மைக்கான முக்கிய மூலமாக விளங்கி வந்தது. கடந்த 5 ஆண்டுகளாக ஒரு மாஓவாத கெரில்லா ஆயுதக் கிளர்ச்சி குழு நாட்டின் மேற்கு பாகத்தில் செல்வாக்கு பெற்றது. மோதுதல்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் இருந்து 30க்கும் அதிகமான மாவட்டங்களுக்கு பரவியதைத் தொடர்ந்து மரணங்களின் எண்ணிக்கை 1600க்கும் மேற்பட்டதாக மதிப்பிடப்பட்டது. ஏப்பிரலில் இடம்பெற்ற ஒரு தாக்குதலில் கெரில்லாக்கள் ஒரு மாவட்ட பொலிஸ் தகவல் நிலையத்தை கைப்பற்றியதோடு 29 பொலிசார் உட்பட 47 மக்கள் கொல்லப்பட்டனர்.

கெரில்லாக்கள் தமது அணிக்கு ஆட்திரட்டும் சக்தியை விளக்குவது கஷ்டமானது அல்ல. வறிய இந்தியத் துணைக் கண்டத்தில் நேபாளம் ஒரு ஏழை நாடாகும். வருடாந்த தலா மொத்த

**இந்த முழு விவகாரங்களும் நேபாளத்தில் மட்டுமன்றி அனைத்துலக ஆளும் வட்டாரங்களிலும் ஒரு விநோதமான பதட்ட நிலையை தூண்டி விட்டது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே அமைந்துள்ளதும் ஏற்கனவே அரசியல் ரீதியில் சிதறுண்டு போன நாடுமான நேபாளத்தில் இது மேலும் பதட்ட நிலையை உருவாக்கும் என அரசாங்கங்கள் கணித்துக் கொண்டுள்ளன.**

உள்நாட்டு உற்பத்தி (GDB) 210 டாலர்களாகும். இதனது 22 மில்லியன் மக்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானோர் விவசாயத்தின் மூலமே வாழ்க்கையை கொண்டு நடாத்துகின்றனர். வெளிநாட்டுச் செலாவணியின் முக்கிய மூலகமாக உல்லாசப் பயணமும், கம்பளம், ஆடை ஏற்றுமதிகளும் உள்ளன. நாட்டின் அபிவிருத்தி வரவு செலவுத் திட்டத்தில் பாதி வெளிநாட்டு உதவி மூலம் கிடைக்கிறது. கைத்தொழில் கிடையாது.

கம்யூனிஸ்ட் கட்சிகள் என கூறிக் கொள்பவற்றின் கூட்டரசாங்கம் உட்பட கடந்த ஒரு தசாப்தமாக ஆட்சி நடாத்திய அரசாங்கங்கள் நாட்டின் உயர்மட்ட வேலையின்மை, வறுமையினுள் எந்த ஒரு கணிசமான ஊடுருவலையும் நடாத்த தவறிவிட்டன. உண்மையில் 1991ல் இருந்து நாடு பொருளாதாரத்தை வெளிநாட்டு மூலதனத்துக்கு திறந்து விட முயற்சித்தது. முன்னைய அரச நிறுவனங்களை விற்றுத் தள்ளியது. ஏற்கனவே ஆழம் கண்டு போயிருந்த சமூகப் பிரச்சினைகளை மோசமடையச் செய்தது. தூரக் கிராமங்களில் வீதிகள், ஆரம்பக் கல்வி, சுகாதார வசதிகள் கூட கிடையாது. படிப்பறிவின்மை இன்னமும் பரந்து போய் உள்ளது. 15 வயதுக்கும் மேற்பட்டவர்களிடையே இது 72 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. உயிர் வாழ்க்கை காலம் ஆண்களிடையே 58.47 வருடங்களாகவும் பெண்களிடையே 58.36 ஆண்டுகளாகவும் உள்ளது.

இந்த நிலைமைகளில் அரசாங்கங்கள் படுமோசமான பொலிஸ் அடக்குமுறைகளை மாஓவாத கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக மட்டுமன்றி எந்த வடிவிலான எதிர்ப்புக்களுக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும் எதிராக கையாண்டனர். கடந்த ஆண்டு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட நேபாளம் பற்றிய அறிக்கையில் மனித உரிமைகளின் நிலைமையையிட்டு பின்வருமாறு எச்சரிக்கை செய்தது:

"அரசாங்கம் பொதுவாக பிரஜைகளின் மனித உரிமைகளை பல துறைகளில் மதித்துள்ளது. எவ்வாறெனினும் பிரச்சினைகள் இருந்து கொண்டுள்ளன. பொலிசார் பல தடவைகளில் உயிராபத்தான வன்முறையை கையாண்டனர். ஒருவர் சித்திரவதை காரணமாக சிறைக் காவலில் மரணமானார். பொலிஸ் கைதிகளை தொடர்ந்தும் அவமானம் செய்கிறது. பொலிசார் ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற சித்திரவதையை தண்டனையாகப் பயன்படுத்தியுள்ளது. பொலிசார் மாஓவாதிகளுடன் தொடர்பு கொண்ட புதினபத்திரிகை சந்தேக நபர்கள் மீது பாய்ந்து விழுகிறது. அரசாங்கம் பொலிஸ் காட்டுமிராண்டித் தனங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிப்பது குறைவு. அப்படி சட்டங்களை மீறும் பொலிஸ் அதிகாரிகளை தண்டிப்பது கிடையாது.

"சிறைச்சாலை நிலைமைகள் மோசமாக உள்ளது. அதிகாரிகள் நினைத்த மாத்திரத்தில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைக்கின்றனர். வழக்கு விசாரணைக்கு முன்னைய நீண்ட தடுப்புக் காவல், அரசியல் நெருக்குவாரங்களுக்கும் ஊழல்களுக்கும் நீதித்துறை கீழ்படிந்து போதல், நீதி விசாரணைக்கு முன்னைய நீண்ட தாமதம் என்பன பிரச்சினைகளாக இருந்து கொண்டுள்ளன. அரசாங்கம் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மீது தொடர்ந்து கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றது. அரசாங்கம் மதச் சுதந்திரத்தின் மீது கட்டுப்பாடுகளை திணிக்கிறது. பெண்களும் வலது குறைந்தோரும் தாழ்த்தப்பட்ட சாதியினரும் பரந்த அளவிலான பாகுபாடுகளுக்கு உள்ளாகின்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறையும் பெண் கடத்தலும் சிறுவர் விபசாரமும் கட்டாய ஊழியமும் சிறுவர் ஊழியமும் பெரும் பிரச்சினைகளாக இருந்து கொண்டுள்ளன. கட்டாய சிறுவர் உழைப்பு பற்றிய சம்பவங்களும் வெளிவந்துள்ளன.

"1996ல் பாராளுமன்றம் மனித உரிமை மீறல்களை பற்றி விசாரணை செய்யும் அதிகாரத்துடன் கொண்ட ஒரு நிலையான மனித உரிமைகள் ஆணைக்குழுவை நிறுவும் ஒரு மசோதாவை ஏகமனதாக நிறைவேற்றியது. எவ்வாறெனினும் ஆணைக்குழு இன்னமும் ஸ்தாபிதம் செய்யப்படவில்லை."

## சதி வரலாறு

1990ல் இருந்து மன்னர் நேபாளத்தின் அரசியல், சமூக பிரச்சினைகளுக்கான பொறுப்பை அரசாங்கத்தின் மீது கட்டியடித்துவிட முயற்சித்து வந்தார் என்பதில் சந்தேகம் கிடையாது. எவ்வாறெனினும் இன்றைய நிலைமை, முன்னைய காலப் பகுதியிலான மன்னர் ஆட்சி முறையின் வரலாற்றில் நீண்டதும் அருவருக்கத்தக்கதுமான நேரடி விளைவாகும்.

ஷா குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டதும் நேபாளத்திலுமான மன்னராட்சி ஒப்பீட்டளவில் ஒரு சமீபகால தோற்றப்பாடாகும். 18ம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஒரு இந்து இராஜ்பத் பரம்பரையை அடிப்படையாகக் கொண்ட கூர்க்கா பரம்பரை முஸ்லீம் ஆக்கிரமிப்பாளர்களால் இந்தியாவில் இருந்து கலைக்கப்பட்டதாகும். இவர்கள் ஒரு சிறிய மலைநாட்டு அரசில் ஆட்சி புரிந்தனர். இது கிட்டத்தட்ட நேபாளத்தின் தற்போதைய 75 மாவட்டங்களின் விஸ்தீரணத்துக்கு சமமானது. பிரித்தானிய கிழக்கு இந்திய கம்பனியுடனான (British East India company) தனது தொடர்புகள் மூலம் பெற்றுக் கொண்ட முன்னேற்றமான துப்பாக்கிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தி கூர்க்கா ஆட்சியாளர் பிரித்வீ நாராயண் ஷா தனது இராணுவத்தை மீளமைத்ததோடு, 1769ல் இன்றைய நேபாளத்தின் பெரும்பகுதியை கைப்பற்றுவதில் வெற்றி கண்டனர்.

எவ்வாறெனினும் இந்த நிலைமையில் நேபாளம் மீதான கூர்க்காக்களின் பிடி தொடர்ந்தும் மென்மையானதாகவே விளங்கியது. மன்னர்கள் பெரும் வல்லரசுகளால் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர்- -முதலில் 18ம் நூற்றாண்டில் சீனாவிலும் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரித்தானிய கிழக்கு இந்திய கம்பனியின் இராணுவத்தினாலும் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர்- சலுகைகளை வழங்கும்படி நெருக்கப்பட்டனர். உள்வாரியாக இது அடிக்கடி குழு மோதுதல்களாலும் அரச குடும்ப ஆட்சிக்கான போராட்டத்தினாலும் பாதிக்கப்பட்டது. இது 1846ம் ஆண்டில் ஒரு நாள் இரவு உச்சக் கட்டத்தை அடைந்தது. கொட் படுகொலைகள் (Kot Massacre) எனப் பேர் பெற்ற ஒரு அரச குடும்ப கூட்டம் ஒரு புகழ் பெற்ற அரச வமிசத்தவர் இரத்தம் தோய்ந்த சண்டையில் படுகொலை செய்யப்பட்டதை கலந்துரையாடக் கூட்டப்பட்டது. இதில் டசின் கணக்கான நேபாள பிரபுக்கள் ஒன்றில் கொல்லப்பட்டனர் அல்லது படுகாயமடைந்தனர்.

இந்தப் படுகொலையினால் பெரும் நன்மை கண்டவர் பிரதமர் ஜாங் பகதூர். இவர் மறுநாள் ஒரு துடைத்துக் கட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டார். இதனால் இவரது பல பிரபுத்துவ போட்டியாளர்கள் கொல்லப்பட்டதோடு 6000 மக்களை இந்தியாவுக்கு தப்பியோடச் செய்தது. ஜாங் பகதூர் -இவர் பின்னர் றனா என்ற பட்டத்தைப் பெற்றதோடு பிரதமர் மரபுரிமையையும் ஸ்தாபித்துக் கொண்டார். இது அரசுடமையை அடியோடு வீட்டுக் காவலில் வைத்ததோடு, ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலம் நேபாளத்திலும் மேலாதிக்கம் செலுத்தியது.

றனா பிரபுத்துவம் நாட்டின் ஈடாட்டம் கண்ட அரசியல் காலநிலையை தொடர்ந்தும் பராமரிக்க முடிந்ததற்குக் காரணம் அது பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் கொண்டிருந்த நெருக்கமான உறவுகளே. 1857ல் ஜாங் பகதூர் முற்றுகையிடப்பட்ட பிரித்தானிய கிழக்கு இந்திய கம்பனி (BEIC) படைகள் பரந்த அளவிலான இந்திய படைக் கலகத்தை அடக்குவதற்கு பெரிதும் அவசியப்பட்ட இராணுவ உதவியை வழங்கினார். இந்த கலகத்தின் பின்னர் பிரித்தானியா ஜாங் பகதூருக்கு ஒரு பெருமளவு நிலத்தை நன்கொடையாக வழங்கியதோடு நேபாள அரச குடும்பத்தை ஒரு விசுவாசமான இராணுவக் கூட்டாகவும் பிரித்தானிய இராணுவத்துக்கு ஆட்திரட்டுவதற்கான ஒரு மூலமாகவும் கொண்டிருந்தது.

றணாஸ் நேபாளத்தின் மீது கொண்டிருந்த பிடியை இந்தியத் துணைக் கண்டம் பூராவும் தேசிய இயக்கம் உண்டுபண்ணிய தாக்கத்தின் கீழே மட்டுமே தழுவத் தொடங்கியது. 1930பதுகளில் இந்தியாவில் இருந்து வந்த நேபாளக்காரர்களால் ஒரு தொகை முதலாளித்துவ அரசியல் கட்சிகள் அமைக்கப்பட்டன. அவை றணாஸ் ஆட்சிக்கு முடிவு கட்டும்படி கோரியதோடு ஒரு வரையறுக்கப்பட்ட ஜனநாயக சீர்திருத்தங்களையும் வேண்டி நின்றன. இறுதியில் நேபாள தேசிய காங்கிரஸ் எனப்பட்ட இந்த நாடுகடத்தப்பட்ட நேபாளிகள் றணா பிரபுத்துவத்தின் கீழ்த் தட்டினரோடும் இராணுவத்தோடும் 1950ன் கடைப்பகுதியில் மாளிகையில் இருந்து தப்பியோடிய திரிபுவன் பிர் பிக்ராம் ஷாவுடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

1951ம் ஆண்டின் முற்பகுதியில் றணாஸ் இறுதியாக இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் ஆட்சியில் இருந்து தூக்கி வீசப்பட்ட போது நேபாள காங்கிரஸ் கட்சியினால் உருவாக்கப்பட்ட சந்தர்ப்பவாத கூட்டுக்களின் பெறுபேறாக கணிசமான அளவு அதிகாரங்களைக் கொண்ட அரசியல் சக்தியாக மன்னர் அரசின் தலைவராக மீளஸ்தாபிதம் செய்யப்பட்டார். அவரும் 1955ல் மன்னனான அவரது மகன் மகேந்திராவும் அரசியலமைப்பை வழங்குவதையும் தேர்தல்களை நடாத்துவதையும் நிறுத்தினர். நேபாள காங்கிரஸ் கட்சி தலைவர்களால் பிரேரிக்கபட்ட வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுக்கும் குறுக்கே நின்று கொண்டிருந்தனர்.

1959ல் அரசியலமைப்புச் சட்டம் இறுதியாக அறிவிக்கப்பட்ட போது இது ஒரு வெறும் கண்துடைப்பாகவே இருந்தது. மேற்சபை அரச குடும்ப அங்கத்தவர்களின் மேலாதிக்கத்தை கொண்டிருந்தது. மன்னர் பிரதமரை கலந்தாலோசிக்காது செயல்படும் அதிகாரத்தை தக்க வைத்துக் கொண்டார். இராணுவத்தையும் வெளிநாட்டுக் கொள்கையையும் கட்டுப்படுத்தினார். அமைச்சரவை உறுப்பினர்களை வெளியேற்ற அதிகாரம் இருந்ததோடு அவசரகால நிலையைப் பிரகடனம் செய்யவும் முடிந்தது. ஜனநாயக வண்டி ஓட்டமும் ஒரு ஆண்டுக்கு சற்று மேலாக நின்று பிடித்தது. 1960 டிசம்பரில் மன்னர் எச்சரிக்கை செய்யாமலும் இராணுவத்தின் ஆதரவுடனும் ஒரு அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தது. அரசாங்கத்தை தள்ளுபடி செய்ததோடு அதன் தலைவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் பராமரிக்கத் தவறி விட்டதாகக் கூறி அவர்களை கைது செய்தது.

மூன்று தசாப்தங்களுக்கு மன்னர் மகேந்திராவும் 1972ன் பின்னர் அவரின் மகன் -சமீபத்தில் மரணமான பிரேந்திராவும் உலகில் எஞ்சியுள்ள ஒரு சில பூரண மன்னராட்சியில் ஒன்றை பராமரித்தனர். உள்ளூராட்சி சபைகளுக்கான கட்சிகளற்ற தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு நான்கு கட்ட பஞ்சாயத்து முறை மாவட்டத்துக்கும் பிராந்தியத்துக்கும் தேசிய சபைகளுக்குமான அங்கத்தவர்களை நியமித்தது. இது மட்டுமே ஜனநாயக உணர்வுகளுக்கு வழங்கப்படும் ஒரே சலுகையாகும். தேசிய பஞ்சாயத்து சபைகளுக்கு மன்னரை விமர்சனம் செய்யும் உரிமை இல்லாத போதிலும் ஒரு சுயாதீனமான தீர்மானத்தை எடுக்க முடியும். நேபாளக் காங்கிரசும் பல்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இந்த அரசியல் முறைக்கு தம்மை சீர்செய்து கொண்டன.

அத்தகைய ஒரு வரலாற்று ரீதியில்



தேவ்யாணி ரணா

காலத்திற்கு ஒவ்வாத ஒன்று பல தசாப்தங்களுக்கு தொடர்ந்து இருந்து வருவதானது வெறுமனே பல்வேறு நேபாள அரசியல் கட்சிகளது சந்தர்ப்பவாதத்தினது பெறுபேறு அல்ல. அமெரிக்காவும் மற்றும் பெரும் வல்லரசுகளும் சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் எதிரான நடவடிக்கைகளின் பேரில் நேபாள மன்னருடன் நெருக்கமான உறவுகளை பெற்றுக் கொண்டிருந்தனர். பூகோளத்தின் விரகி முக்கியத்துவமான பிராந்தியத்தில் இந்த உறவை வைத்துக் கொண்டிருந்தனர். இந்திய அரசாங்கம் குறிப்பாக 1962 இந்திய-சீன எல்லை யுத்தத்தின் போது மன்னருடனான உறவுகளை பலப்படுத்திக் கொண்டது. புதுடில்லி இந்தியாவில் இருந்து இயங்கி வந்த நேபாள எதிர்க்கட்சி குழுக்களுக்கான தனது ஆதரவை இரத்துச் செய்தது. அத்தோடு நேபாளத்துக்கு பல சலுகைகளை வழங்கும் வர்த்தக, இராணுவ உடன்படிக்கைகளைச் செய்துகொண்டது.

கடந்த வாரம் இடம்பெற்ற சம்பவங்கள் மீண்டும் ஒரு தடவை நேபாள முடியாட்சியின் திகிலூட்டும் பண்பை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. எவ்வாறெனினும் இதன் நிலைப்பாடு அப்படி ஒன்றும் புதுமையானது அல்ல. 1950பதுகளின் ஷா முடியாட்சியின் விடயத்தில் போன்று வரலாற்று நினைவுச் சின்னத்தின் ஒரு தீவிரமான அங்கமாகும். 20பதாம் நூற்றாண்டில் மறக்கப்பட்டு போனவற்றில் இருந்து உயிர்த்தெழச் செய்யப்பட்டு, ஆசியாவிலும் வேறு இடங்களிலும் முதலாளித்துவ ஆட்சிக்கான அரசியல் ஆதரவுக்கான தீர்க்கமான அம்சமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மாநிலத் தேர்தல் ஆளும் பீ.ஜே.பி. மீதான வெறுப்பை அம்பலப்படுத்தியுள்ளது

நந்த விக்கிரமசிங்க
29 மே 2001

*புதிய மாநிலத் தேர்தல்கள் மொத்தத்தில் எல்லா அரசியல் கட்சிகளுடனும் உத்தியோகபூர்வ அரசியலிலும் பரந்த அதிருப்தியையும் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டியுள்ளது. ஒன்றரை தசாப்த காலமாக, அதிகாரத்தில் இருந்த மாநில அரசாங்கங்கள் அவர்களது எதிரிகளால் வழக்கமான முறையில் ஆட்சியில் இருந்து தூக்கி வீசப்பட்டுள்ள அதே வேளை மீண்டும் அவர்களுக்கும் அடுத்த தேர்தலில் அதே வகையிலான ஊசலாட்டத்துக்கு எதிர் திசையில் முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.*

கடந்த மே 10ம் திகதி நான்கு இந்திய மாநிலங்களிலும் மத்திய அரசின் அதிகாரத்தின் கீழான ஒரு பிராந்தியத்திலும் இடம்பெற்ற தேர்தல்களில், பாரதீய ஜனதா கட்சியும் (BJP) அதன் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் (NDA) அங்கம் வகிக்கும் கட்சிகளும் படுதோல்வி அடைந்தன. இந்தத் தோல்வி மூன்று ஆண்டுகளாக தேசிய ரீதியில் ஆட்சியில் இருந்து வந்த ஆளும் கூட்டணியினுள் ஏற்கனவே மோதுதல்களை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் 35 மாநிலங்களிலும் மற்றும் பிராந்தியங்களிலும் ஐந்து இடங்களில் மாத்திரம் தேர்தல் இடம்பெற்றிருந்த போதிலும், பெறுபேறுகள் பீ.ஜே.பி. தலைமையிலான மத்திய அரசாங்கம் மற்றும் அரசியல் ஸ்தாபனம் உட்பட்ட அனைத்தும் மீதான வெறுப்பு அதிகரித்து வருவதை பிரதிபலிக்கின்றன. தேர்தல்கள் தமிழ் நாடு, கேரளம் மற்றும் தென்னிந்தியாவின் பிராந்தியமான பாண்டிச்சேரி, இந்தியாவின கிழக்கு மற்றும் வடகிழக்கு பிரதேசத்தில் மேற்கு வங்காளம், அசாம் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

தேசிய ஜனநாயக கூட்டணி தமிழகத்தில் மிகவும் மோசமான நிலையில் உள்ளதை காட்டுகிறது. மாநில சட்ட மன்றத்தில், பிராந்தியத்தில் பீ.ஜே.பி.யின் பிரதான கூட்டணியான, முன்னர் ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் (DMK), 177 இருந்து 36 வரை ஆசனங்களை இழந்துள்ளது. தி.மு.க. தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு.கருணாநிதி வெறுமனே தனது ஆசனத்தைத் தப்ப வைத்துக் கொண்டார். காங்கிரஸ்(ஐ) ஆதரவுடனான அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (AIADMK) தலைமையிலான எதிர் கூட்டணி 196 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

மேற்கு வங்காளத்தில், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் (CPI-M) தலைமையிலான இடது முன்னணி அரசாங்கம் கடந்த தேர்தல்களில் எதிர்ப்புகள் வளர்ச்சி கண்டுவருவதற்கான அறிகுறிகள் தோன்றிய போதிலும் மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது. மாநிலத் தேர்தலுக்கு சற்று முன்னர் வரை தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்திருந்த திரிணமுல் காங்கிரஸ், காங்கிரஸ்(ஐ) உடன் கூட்டுசேர்ந்து, 294 ஆசனங்களில் 87 ஆசனங்களை வெற்றி கண்டு சமாளித்துக் கொண்டது.

கேரளத்தில், முன்னாள் மாநில சட்டமன்றத்தில் 81 ஆசனங்களைக் கொண்டிருந்த சீ.பி.ஐ-எம் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி 40 ஆசனங்களை மாத்திரமே பெற்று அதிகாரத்தை இழந்துள்ளது. எவ்வாறெனினும், வெற்றியாளர் பீ.ஜே.பி.யோ அல்லது அதனது கூட்டணிக் கட்சிகளில் ஒன்றோ அல்ல. ஆனால் தற்போது 99 ஆசனங்களை கொண்டுள்ள காங்கிரஸ்(ஐ) அடுத்த மாநில அரசாங்கத்தை அமைக்கும்.


அசாமில், ஏ.ஜி.பி. (அசாம் கனசங் பரிஷாட்) மற்றும் பி.ஜே.பி.யினதும் கூட்டணி 21 ஆசனங்களை இழந்து தற்போது 42 ஆசனங்களை மாத்திரமே கொண்டுள்ளது. மொத்தத்தில், சபாநாயகர் மற்றும் பிரதி சபாநாயகர் உட்பட 16 அமைச்சர்கள் தங்களது ஆசனங்களை இழந்துள்ளனர். காங்கிரஸ்(ஐ) தற்போதைய அரசாங்கம் மீதான எதிர்ப்பை சுரண்டிக் கொண்டு 70 ஆசனங்களை வெற்றி கொண்டுள்ளது. மத்திய அரசின் பிராந்தியமான பாண்டிச்சேரியில் காங்கிரஸ் கட்சி 13 ஆசனங்களை வெற்றி கொண்டுள்ளதோடு அடுத்த அரசாங்கத்தை அ.இ.அ.தி.மு.க. வுடன் இணைந்து அமைக்கவுள்ளது.

சீரழிவின் பரிணாம்மானது பி.ஜே.பி.யின் சொந்த நடவடிக்கைகளால் அடிக்கோடிடப்பட்டுள்ளது. ஐந்து பிராந்தியங்களிலான பந்தயத்தில், 823 ஆசனங்களில் 13 ஆசனங்களை மாத்திரமே பி.ஜே.பி. வென்றுள்ளது. பி.ஜே.பி., கேரளத்திலும் மேற்கு வங்காளத்திலும் 6 வீதத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றுள்ளதோடு ஆசனங்கள் எதையும் வெற்றி கொள்ளவில்லை. அது மட்டுமல்லாமல், இதே காலத்தில் இடம்பெற்ற திருச்சினாப்பள்ளி லோக்சபைக்கான (இந்தியப் பாராளுமன்றத்தின் கீழ் சபை) தேர்தலில், அ.இ.அ.தி.மு.க.விடம் பி.ஜே.பி. தோல்வி கண்டது.

தேர்தல் பெறுபேறுகள் லோக்சபையில் பி.ஜே.பி.யின் நிலைமைக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தாத போதிலும்



ஜெயலலிதா



பட்டாச்சார்யா

பெறுபேறுகளுக்கான ஒரு முக்கிய காரணம். நிச்சயமாக தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கத்தின் மீதான வெறுப்பேயாகும். பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் வாக்குகளின் குறிப்பிடத் தக்க நிலைமைகளை குறுக்கிக் கொள்ளும் முயற்சியாக, தேர்தலுக்கு முன்னர் பி.ஜே.பி. ஐந்து பிராந்தியங்களிலும் பெரியளவில் முன்னிலை வகிக்கவில்லை எனக் குறிப்பிட்டார். ஆனால் பெறுபேறுகள் "தேசிய ஜனநாயக முன்னணி அரசாங்கத்துக்கு ஒரு எச்சரிக்கையேயாகும்" என்பதை கணக்கில் கொள்ளத் தள்ளப்பட்டுள்ளார்.

இந்தத் தோல்வி தேசிய ஜனநாயகக் கூட்டணியின் 18 கட்சிகளுக்கிடையில் மத்திய நிலைப்பாட்டில் இருந்து நழுவிச் செல்லும் நிலைமைகளை தீவிரமாக்கியுள்ளது. தேர்தலுக்கு முன்னதாக திரிணமூல் காங்கிரஸ் ஆளும் கூட்டணியுடனான உறவை முறித்துக் கொள்வதற்காக பாதுகாப்பு மாமூல் மீதான டெஹேல்கா அவதூறைப் பற்றிக் கொண்டு பீ.ஜே.பி.யிடம் இருந்து தானாகவே விலகிக் கொண்டது.

பி.ஜே.பி. மாநில ரீதியில் ஏற்படுத்திக் கொண்ட ஒழுங்கிலிருந்து விலகிக் கொண்டு மணிப்பூர் மாநிலத்தின் சமதாக் கட்சித் தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்க்க உதவியதன் பின்னர், கடந்த வாரம் சமதாக் கட்சி தேசிய கூட்டணியில் இருந்து விலகிக்கொள்ளப் போவதாக அச்சுறுத்தியுள்ளது. இந்த வாரம் தனது 12 லோக்சபா அங்கத்தவர்களும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தொடர்ந்தும் இருப்பார்கள் என சமதாக் கட்சி அறிவித்திருப்பது வாஜ்பாய் அரசாங்கம் கீழ் சபையின் 543 உறுப்பினர்களில் சிறிய 19 பெரும்பான்மையை இன்னமும் கொண்டுள்ளதை அர்த்தப்படுத்துகிறது.

அடுத்ததாக, அரசாங்கத்தின் மீதான வெறுப்புகளுக்கு தக்கவாறு இயங்கும் அதன் நெருங்கிய கூட்டாளிகளாலும் -இந்து சோவினிச ராஸ்ட்ரீய ஸ்வயம்சவேக் சங் (RSS), சிவசேனா மற்றும் விஷ்வ இந்தி பர்ஷாத்- கூட பி.ஜே.பி. விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது. தேர்தலைத் தொடர்ந்து, "அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளை முக்கியமான திருப்பங்களில் தாக்குவதற்காக" ஆகஸ்ட் வரை நாடுமுழுவதிலும் ஒரு தொடர் கூட்டங்களை தனது அமைப்பு நடாத்தும் என ஆர்.எஸ்.எஸ். தலைவர் டலோபான்ட் தன்கடி அறிவித்துள்ளார்.

பி.ஜே.பி.யின் இணைத் தொழிற் சங்கமான பி.எம்.எஸ் (பாரதீய மஸ்டூர் சங்) கூட "மக்கள் எதிரி மற்றும் தேசிய எதிரி" என முத்திரை குத்துவதோடு வாஜ்பாயின் கொள்கைகளுக்கு எதிராக வேலை நிறுத்தங்களுக்கு அழைப்பு விடுப்பதன் மூலம் அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

## சந்தை சீர்திருத்தங்கள்

காங்கிரஸ்(ஐ) யால் முன்னெடுக்கப்பட்ட சந்தை மறுசீரமைப்பு கொள்கைகள் மீதான மத்தியதர வர்க்க தட்டினரின் வெறுப்பை சுரண்டிக் கொண்ட பி.ஜே.பி. இந்து தீவிரவாதம் மற்றும் தேசியப் பொருளாதாரக் கொள்கைகளாலும், அடுத்த கூட்டரசாங்கமாக ஆட்சிக்கு வந்தது. எவ்வாறெனினும் பி.ஜே.பி. தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பெரும் வியாபாரிகளும் சர்வதேச நிதி மூலதனமும் கோரி வந்த கொள்கைகளை அமுலுக்குக் கொண்டுவரத் தொடங்கியதோடு, அதன் பெறுபேறாக சொந்த சமூக அடித்தளத்திலேயே தனது செல்வாக்கை இழந்தது.

பெப்பிரவரியில் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைத் தொடர்ந்து பொருளாதார மறுசீரமைப்பு துரிதப்படுத்தப்பட்டது. இது ஏழைகளின் மானியங்களை வெட்டித் தள்ளி, சுங்க வரிகளையும் இறக்குமதி தடைகளையும் தளர்த்தி, ஆட்குறைப்பை துரிதப்படுத்த தொழில் சட்டங்களை மாற்றியமைத்தது. கூட்டுறவு வரிகளை வெட்டியதோடு அரசாங்கக் கூட்டுத்தாபனங்களை விற்றுத் தள்ளுவதையும் துரிதப்படுத்தியது.

அரசாங்கம், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறிய விவசாயிகளையும் மின்சாரசபை, தொலைத் தொடர்பு, விமானம் மற்றும் வங்கித் துறைகளில் இடம்பெற்ற வேலை நிறுத்தங்களையும் எதிர்த்தது. தேர்தல் நெருங்கிய சமயத்தில் தொழில் சட்டங்களை மாற்றியமைத்ததற்கு எதிராக பம்பாய் நகரிலும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் ஒரு நாள் பொது வேலைநிறுத்தம் ஒன்று இடம்பெற்றது. பாரத அலுமீனியம் கூட்டுத்தாபனத்தின் (BALCO) தொழிலாளர்கள் கம்பனி தனியார்மயமாக்கப்படுவதற்கு எதிராக இரண்டுமாத காலமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

தேர்தல் பெறுபேறுகள் தொடர்பாக ஆளும் வர்க்க பகுதியினர் சிரத்தை கொண்டிருந்த போதிலும், வரவு செலவுத் திட்டத்தை விலக்கிக் கொள்ளப்போவதில்லை என வாஜ்பாய் முதலீட்டாளர்களுக்கு உறுதியளித்துள்ளார்.

தேர்தல் பெறுபேறுகள் காங்கிரஸ்(ஐ) யின் "வெற்றியை" பிரதிநிதித்துவம் செய்வதாக சில விமர்சகர்கள் குற்றம் சாட்டிய போதிலும் சில அண்மைய ஆய்வுகள் அது ஒரு குறிப்பிட்ட அளவிலான வாக்குகளையே பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளன.

1996ல் மேற்கு வங்காளத்தில் கடைசியாக இடம்பெற்ற மாநிலத் தேர்தலில், காங்கிரஸ்(ஐ) 82 ஆசனங்களை வென்றதோடு 39.48 வீத வாக்குகளை பெற்றிருந்தது. அடுத்த ஆண்டு, கட்சி மாநில ரீதியில் பிளவுண்டு, திரினமூல் காங்கிரசை அமைக்க வழிவகுத்தது. அண்மையில் நடைபெற்ற தேர்தலில், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான வாக்குகளில் ஒரு தொகையை திரினமூல் பெற்றுக்கொண்ட அதே வேளை, காங்கிரஸ்(ஐ) 8 வீதமான வாக்குகளையும் 20 ஆசனங்களையும் மாத்திரமே பெற்றிருந்தது.

மஹாராஷ்டிராவில் தேசிய காங்கிரஸ் கட்சியும் தமிழ் நாட்டில் தமிழ் மாநில காங்கிரசும் (TMC) அமைக்கப்பட்டதுடன் இது போன்ற மாநில ரீதியிலான பிளவுகள் காங்கிரஸ்(ஐ)யில் ஏனைய மாநிலங்களிலும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இன, மொழி அடிப்படையில் குறுகிய பிரதேசவாத, சோவினிச உணர்வுகளுக்கு அழைப்பு விடுக்கும் இந்த மாநிலக் கட்சிகள், உள்ளூர் ஆளும் கும்பல்களை பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றன. இதன் பெறுபேறாக, காங்கிரஸ்(ஐ] பல மாநிலங்களிலும் உள்ள மாநிலக் கட்சிகளின் ஆதரவிலேயே கூட்டணியாக இருந்து வந்துள்ளது. இது தமிழ் நாட்டில் அ.இ.அ.தி.மு.க. தலைமையிலான அரசாங்கத்தின் கனிஷ்ட பங்காளியாக இருந்து வருகின்றது.

மேற்கு வங்காளத்தில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான இடதுசாரி முன்னணி தனது ஆறாவது வெற்றிகரமான தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதோடு அதன் தலைவர்கள் தங்கள் வெற்றியைப் பற்றி வாயடித்துக்கொள்ளும் அதே வேளை, ஸ்டாலினிச மற்றும் "இடதுசாரி" கட்சிகளின் கூட்டணிக்கான ஆதரவு -1987ல் ஆகக் கூடிய 260 ஆசனங்களில் இருந்து 1996ல் 203 ஆகவும் இந்த வருடம் 199 ஆகவும்- முறை முறையாக வீழச்சி கண்டுவந்துள்ளது. இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய ஆசனங்களின் எண்ணிக்கை 1987ல் 188 ஆசனங்களில் இருந்து தற்போது 144 ஆக வீழ்ச்சி கண்டுள்ளது. எவ்வாறானாலும், இடதுசாரி முன்னணிக்கான ஆதரவு கல்கத்தாவையோ அதைச் சூழவுள்ள நகர்ப்புறங்களையோ அடிப்படையாகக் கொண்டது அல்ல, ஆனால் நிலச் சீர்திருத்தத்தின் பெறுபேறாக வரையறுக்கப்பட்ட நன்மைகளை பெற்ற விவசாயிகள் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவை வழங்கியுள்ளனர்.

ஏனைய மாநிலங்களில் உள்ள அரசாங்கங்களைப் போலவே, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் முதலீடுகளை மேற்கு வங்காளத்துக்குள் ஈர்த்துக் கொள்வதற்காக கழுத்தறுப்பு போட்டிகளில் ஈடுபட்டுவருவதோடு பெரும் வியாபாரிகள் தட்டினருடன் நெருங்கிய உறவுகொண்டுள்ளது. தேர்தலைத் தொடர்ந்து "வங்காளப் புலி" என ஊடகங்களில் கத்திய பட்டாச்சார்ஜி, இந்தியக் கைத்தொழில் கூட்டமைப்பின் (CII) உயர் பிரதிநிதிகள் குழுவை உடனடியாகச் சந்தித்தார். முதலீடுகளுக்கு உதவுவதன் பேரில் அரசாங்க திட்டங்களைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக புதிய மாநில் அமைச்சர்களுக்கு சீ.ஐ.ஐ. அமோக இராப்போசன விருந்தளித்தது. பட்டாச்சார்ஜி "இப்போது வேலை செய்வோம்"! என தனது குறிக்கோளை அறிவித்ததோடு, தனது அரசாங்கம் கடந்த அரசாங்கத்தை விட அதிக "நட்புடன் வியாபாரம்" செய்வதாகவும் கூட குறிப்பிட்டார்.

புதிய மாநிலத் தேர்தல்கள் மொத்தத்தில் எல்லா அரசியல் கட்சிகளுடனும் உத்தியோகபூர்வ அரசியலிலும் பரந்த அதிருப்தியையும் குறைபாடுகளையும் சுட்டிக் காட்டியுள்ளது. ஒன்றரை தசாப்த காலமாக, அதிகாரத்தில் இருந்த மாநில அரசாங்கங்கள் அவர்களது எதிரிகளால் வழக்கமான முறையில் ஆட்சியில் இருந்து தூக்கி வீசப்பட்டுள்ள அதே வேளை மீண்டும் அவர்களுக்கும் அடுத்த தேர்தலில் அதே வகையிலான ஊசலாட்டத்துக்கு எதிர் திசையில் முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

இந்த போக்கு, 1987ல் தி.மு.க. கூட்டணி 151 மாநில சட்டசபை ஆசனங்களுடன் ஆட்சிக்கு வந்த தமிழ் நாட்டில் அதிகளவில் தோன்றியுள்ளது. 1991ல், அ.இ.அ.தி.மு.க. தலைமையிலான ஒரு கூட்டணி 164 ஆசனங்களுடன் மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் அவர்கள் கவிழ்க்கப்பட்டாலும், 1996ல் 173 ஆசனங்களுடன் தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தது. இப்போது அ.இ.அ.தி.மு.க. அறுதிப் பெரும்பான்மையை வெற்றி பெற்றுள்ளது.

வாக்காளர்களில் கணிசமான அளவினர் வாக்களிக்கவில்லை. தமிழ் நாட்டில் அண்மையில் இடம் பெற்ற தேர்தலின் போக்கு, 1984 தொடக்கம் -50 வருடங்களில் மிகக் குறைந்தளவிலான 59.06 வீதத்துக்கு- சீராக வீழ்ச்சி கண்டுள்ளது. மாநிலத்தின் தலைநகரான சென்னையில், 43 வீதமானவர்களே வாக்களித்துள்ளதோடு மாநிலத்தின் இரண்டாவது பெரிய நகரமான மதுரையில், 49 வீதமான வாக்குகளே பதிவாகியிருந்தன. அவ்வாறே மேற்கு வங்காளத்தில் வாக்காளர் எண்ணிக்கை 1996 தேர்தலைக் காட்டிலும் 9 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டு 75.24 வீதமாகியது. 1982ன் பின்னர் ஆகக் குறைந்த வீதம் இதுவாகும்.


தேர்தல் பெறுபேறுகள், தற்போதுள்ள ஆளும் இந்திய வர்க்கத்தின் பகுதிகளின் வேறுபட்ட போட்டி அவசியங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகளில் எதற்குமே முறையான சமூக அடிப்படை இல்லாததோடு பி.ஜே.பி. தலைமையிலான அரசாங்கம் மீது அரசியல் ஸ்திரமற்ற தன்மையும் பகைமையும் மேலும் வளர்ச்சி கண்டுவருவதை குறிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அரசியல் நெருக்கடியின் உலக வரலாற்றுத் தாக்கங்கள்

பறி கிறே
பெப்பிரவரி 6, 2001

*உலக சோசலிச வலைத் தள ஆசிரியர் குழு அங்கத்தவர் பறி கிறே அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியினால் சிட்னியில் நடாத்தப்பட்ட அனைத்துலகப் பாடசாலையில் 2001 ஜனவரி 23ம் திகதி நிகழ்த்திய விரிவுரை அறிக்கையின் தொடர்ச்சி*



*ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வெளியுறவு செயலாளர் கோலின் பவல், ஜனாதிபதி புஷ், உப ஜனாதிபதி டிக் சென்னி*

## அமெரிக்க முதலாளித்துவமும் உலக சோசலிசப் புரட்சியும்

20பதாம் நூற்றாண்டில் சோலிசப் புரட்சியின் தலைவிதியை கணக்கிலெடுக்கையில் ட்ரொட்ஸ்கிச இயக்கம் எப்போதும் அவசியமான முறையிலும் சரியான விதத்திலும் அகநிலைக் காரணி மீது -ஸ்டாலினிசம் சமூக ஜனநாயகத்தின் காட்டிக் கொடுப்பு, புரட்சிகரத் தலைமை நெருக்கடிக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. ட்ரொட்ஸ்கி அக்டோபரின் படிப்பினைகள், ஏகாதிபத்திய சகாப்தத்தில் மூலோபாயமும் உபாயமும் போன்ற படைப்புக்களில் தலைமை, முன்நோக்கு, நவீன உலகில் மூலோபாயம், உபாயங்களை வலியுறுத்தினார். சில நிலைமைகளின் கீழ் சில நாட்கள் அல்லது மணித்தியாலங்கள் கூட புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்கும் இடையேயான வேறுபாட்டை தீர்மானம் செய்து, முழுக் காலப்பகுதி பூராவும் உலக சம்பவங்களின் தன்மையை தீர்மானம் செய்யும் என்பதைச் சுட்டிக் காட்டியது.

உண்மையில் ருஷ்யப் புரட்சியின் பின்னர் ஸ்டாலினிசத்தின் செயற்பாடு உலக சோசலிசப் புரட்சியின் அபிவிருத்தியைக் கருச்சிதைவு செய்வதில் தீர்க்கமான பங்கு வகித்தது. ஸ்டாலினிசக் கும்பலின் தவறுகளையும் பின்னர் அதன் அட்டூழியங்களையும் அம்பலப்படுத்தி அவற்றின் அரசியலையும் இறுதியில் சமூக மூலங்களையும் தோற்றுவித்து, முதலாளித்துவத்தையும் தொழிலாளர் இயக்கத்தினுள் முதலாளித்துவ அதிகாரத்துவ ஏஜண்டுகளினால் தொழிலாளர் வர்க்கப் பாதையினுள் இடப்பட்டுள்ள தடைகளையும் தோற்கடிக்கும் மூலோபாய, உபாய முன்நோக்கையும் விளக்குவதற்கு ட்ரொட்ஸ்கிக்கு நேரிட்டது.

ஸ்டாலினிசத்துக்கும் மற்றும் சகல வகையறாக்களையும் சேர்ந்த தேசிய சந்தர்ப்பவாதத்துக்கும் எதிராக எதிர்கால பரம்பரையின் பேரில் லியோன் ட்ரொட்ஸ்கி விட்டுச் சென்ற தொழிலாளர் வர்க்க அனைத்துலக வாதத்தைக் காப்பதை மையமாகக் கொண்ட பிரமாண்டமான கோட்பாட்டு, அரசியல் பங்களிப்பை நாம் குறைத்து மதிப்பிடவில்லை. இந்த மரபுரிமை இன்று தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் அத்திவாரத்தில் இருந்து அன்நியப்படுத்த முடியாத அத்திவாரமாக உள்ளது.

ஆனால் அனைத்து மாபெரும் மார்க்சிஸ்டுகளும் புரிந்து கொண்டதைப் போல் வரலாற்றில் புறநிலை அகநிலைக்கு இடையேயான உறவு பெரிதும் சிக்கலானதும் இயக்கவியலானதாயும் உள்ளது. இறுதியாக அகநிலைக் காரணி சமூக, வரலாற்று அபிவிருத்தியின் புறநிலை முற்போக்கு போக்குகளை நனவான வடிவில் வெளிப்படுத்தும் அளவுக்கு மட்டும் வரலாற்று முன்னேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்ய முடியும். முதலாளித்துவ தேக்கத்தினதும் சோசலிச புரட்சியினதும் சகாப்தத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் புறநிலைப் புரட்சிகரப் பாத்திரம் அந்த வர்க்கம் அல்லது அதனது பெரிதும் முன்னேற்றமான தட்டினர் அதன் புரட்சிகரமான பாத்திரத்தையும் அப்பாத்திரத்தில் அடங்கியுள்ள வரலாற்று அவசியத்தையும் நனவாகப் புரிந்து கொள்ளும் போது மட்டுமே யதார்த்தமாக முடியும்.

புரட்சிகர அரசியலில் தொழிலாளர் வர்க்கத்தின் கட்சியானது தனது கொள்கைகளையும் உபாயங்களையும் அபிவிருத்தியின் புறநிலையான போக்கினையும் உலகப் பொருளாதாரத்தினதும் உலக அரசியலினதும் நிஜ முரண்பாடுகளையும் விஞ்ஞான ரீதியில் புரிந்து கொள்வதன் மூலமுமே எப்போதும் அடிப்படையாகக் கொள்ள முடியும். இந்த விதத்திலேயே ட்ரொட்ஸ்கி 1924ல் தமது புகழ் பெற்ற "பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான முன்னுரை" என்ற பிரசுரிக்கப்பட்ட பேச்சில் அகநிலை, புறநிலை காரணிகளுக்கு இடையேயான காரணிகளை தொகுத்துக் கூறுகையில் தெரிவித்தார். பின்னர் இது நான்காம் அகிலத்தினால் "உலக அபிவிருத்தியின் முன்நோக்கு" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

"நாம் எமது முதுகுக்குப் பின்னாலும் எமது விருப்பு வெறுப்புக்களுக்குப் பின்னாலும் வளர்ச்சி பெறும் அபிவிருத்திகளை அவற்றை புரிந்து கொண்டும் எமது துடிப்பான விருப்பு வெறுப்பு மூலம் அவற்றின் அடிப்படையில் -ஒருங்கு திரட்டப்பட்ட வர்க்கத்தின் விருப்பின் அடிப்படையில்- செயற்படவும் ஆய்வு செய்கின்றோம்.

"வரலாறு சம்பந்தமான எமது மார்க்சிச அணுகுமுறையின் இருபக்கமும் மிகவும் நெருக்கமாகவும் பிரிக்க முடியாத முறையிலும் ஒன்றுடன் ஒன்று இணைந்து கொண்டுள்ளது. புரட்சிகர அரசியலின் முழுக் கலையும் புறநிலை ஆய்வுகளை அகநிலை நடவடிக்கையுடன் சரியான முறையில் இணைப்பதுடனேயே இணைந்து கொண்டுள்ளது. லெனினிச சிந்தனா முறையின் சாராம்சம் இதுவே."

இந்த உறவை மனதில் கொண்டு ஒருவர் 20ம் நூற்றாண்டில் சோசலிசப் புரட்சியின் தோல்வியை ஆய்வு செய்யும்போது இதைக் கேட்க நேரிடும்: தொழிலாளர் வர்க்கத்தினால் திரும்பத் திரும்ப தொடுக்கப்பட்ட புரட்சிகரத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கும் சக்தியை முதலாளித்துவத்துக்கும் அதன் ஏஜன்சிகளுக்கும் இறுதி ஆய்வில் உருவாக்கியது என்ன புறநிலை சக்தி அல்லது சக்திகள்?

இந்தக் கேள்விகளுக்கான அடிப்படைப் பதில் அமெரிக்க முதலாளித்துவம் என நாம் வாதிப்போம். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அமெரிக்க முதலாளித்துவம் ஆதிக்கம் கொண்ட பொருளாதார சக்தியாக தோன்றியமையும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் இன்னும் அதிகரித்த அளவில் உலக மேலாதிக்கம் பெற்றமையும் -பிரித்தானிய ஏகாதிபத்தியம் முன்னர் கையாண்ட மேலாதிக்கத்துக்கு அப்பாற்பட்டது- அமெரிக்க ஐக்கிய அரசுகள் ஏகாதிபத்தியத்துக்கான அசாதாரணமான பாத்திரங்களை வழங்கியது. அது உலக சோசலிசப் புரட்சிக்கு எதிரான கோட்டையாகச் செயற்பட்டது. 20ம் நூற்றாண்டு எல்லாவற்றுக்கும் மேலாக அக்டோபர் புரட்சியும் உலக சோசலிசப் புரட்சியும் வெடித்த நூற்றாண்டாயின் அது அங்கு சில நியாயப்படுத்தல்களோடு- பழைய பிற்போக்கு ஹென்றி லூஸ் கூறியவற்றில் ஏதேனும் அர்த்தம் ஒரு துளியளவும் இருப்பதாக ஒப்புக்கொண்டு -எம்மால் பின்வருமாறு கூறமுடியும். அது "அமெரிக்க நூற்றாண்டு ஜனநாயக உரிமைகள் பற்றிய இப்பிரச்சினையும் ஆகும்." ஆனால் உடனடியாக நாம் இங்கு தெளிவுபடுத்த வேண்டிய விடயம் நூற்றாண்டின் இறுதியில் இடம்பெற்றவை அமெரிக்க நூற்றாண்டு உண்மையில் முடிவு பெற்றுவிட்டது என்பதை காட்டுகிறது. அமெரிக்க ஸ்திரப்பாட்டின் பொறிவு, உலக முதலாளித்துவ அமைப்பில் முன்னொரு போதும் இல்லாத அளவிலான நெருக்கடியைக் காட்டிக் கொண்டுள்ளது.

லெனின், ட்ரொட்ஸ்கி, லக்சம்பேர்க் போன்ற மாபெரும் மார்க்சிஸ்டுகள் புரிந்து கொண்டது போல் 1914ல் உலக யுத்தம் வெடித்தமை ஒரு புறத்தில் முதலாளித்துவ சொத்து உறவுகள், தேசிய அரச அமைப்புக்களுக்கும் மறுபுறத்தில் உற்பத்தி சக்திகளுக்கும் இடையேயான முரண்பாடுகளின் வெளிப்பாடாகியது. ஒரு வரலாற்று அர்த்தத்தில் முதலாளித்துவம் அதனது முற்போக்கு பாத்திரத்தை இழந்து போய்விட்டதையும் யுத்தங்களதும் புரட்சிகளதும் சகாப்தம் ஆரம்பமாகி விட்டதையும் குறித்து நின்றது. இம்முன்னோக்கு அக்டோபர் புரட்சியினால் முழுப்படியே ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

எவ்வாறெனினும் இது உலக முதலாளித்துவம் அதன் உள்வாரி வளங்களை நுகர்ந்து கொண்டுவிட்டது என்பதாகாது. முதலாளித்துவ ஆட்சி தூக்கி வீசப்பட்டமை எந்த ஒரு மாபெரும் மார்க்சிச புரட்சியாளனும் எதிர்பார்த்திருக்க முடியாத பெரிதும் விஸ்தரிக்கப்பட்டதும் முரண்பாடானதும் சிக்கலானதும் துன்பகரமான போக்குகள் கொண்டதாயும் வெளிப்படுத்தப்பட்டது. இறுதி ஆய்வுகளில் இந்நூற்றாண்டில் அதிக காலம் முதலாளித்துவ ஆட்சி உயிர்பிழைத்து இருந்தமையை அதனது பலம் வாய்ந்த காவல் நிலையமான அமெரிக்க ஐக்கிய அரசுகளுடன் தொடர்பு படுத்தியே நோக்க வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக 19ம் நூற்றாண்டின் இறுதி மூன்று காலாண்டுகளில் ஏனைய சகலதுக்கும் மேலாக ஐரோப்பாவில் தேசிய அரச அமைப்பு நின்று பிடித்தமையும் ஆபிரிக்காவையும் ஆசியாவையும் தமது காலனிகளாகக் கொண்ட ஐரோப்பிய முதலாளித்துவம் தோன்றிய காலப்பகுதியாகும். அதே சமயம் இது சோசலிச தொழிலாளர் வர்க்கம் ஒரு அனைத்துலகச் சக்தியாக தோன்றிய ஒரு காலப்பகுதியாகும். முதலாம் உலக யுத்தப் பேரழிவு உலக முதலாளித்துவ நெருக்கடியின் வெளிப்பாடாகும். ஆனால் பெரிதும் உடனடியாக இது ஐரோப்பிய முதலாளித்துவத்தின் வீழ்ச்சியைக் குறித்து நின்றது.

இந்த நிகழ்வும் அதில் இருந்து தோன்றிய ருஷ்யப் புரட்சியும் அமெரிக்க ஐக்கிய அரசுகள் உண்மையில் உலகின் சக்தி வாய்ந்த- கைத்தொழில், நிதி சக்தியாக கிளர்ந்து எழுந்து வருவதுடன் இணைந்த ஒன்றாக விளங்கியது. அமெரிக்கா 1917 ஏப்பிரலில் உலக யுத்தத்தில் நுழைந்து கொண்டதோடு உலக மேலாதிக்கத்துக்கு உரிமை கொண்டாடியது. அமெரிக்கா யுத்தத்தில் நுழைந்தது, ருஷ்யாவின் பெப்பிரவரி புரட்சியின் ஒரு சில கிழமைகளுக்குப் பின்னராகும். இதன்படி அமெரிக்கா ஐரோப்பாவின் தலைவிதியை தீர்மானம் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அதே கணத்திலேயே அது அனைத்துலக எதிர்ப்புரட்சி முகாமுக்குத் தலைமை வழங்கும் பொறுப்பை ஏற்றது.

அக்டோபர் புரட்சியின் சகல தலைவர்களினுள்ளும் அமெரிக்க ஐக்கிய அரசுகள் தலையெடுத்ததன் பிரமாண்டமான அர்த்தத்தை புரிந்து கொண்டவர் லியோன் ட்ரொட்ஸ்கியே. இந்த விடயம் சம்பந்தமாக அவர் கைவரப்பெற்ற விளக்கம் அனைத்துலக முன்னோக்கை ஆழமாக்குவதுடனும் பாதுகாப்பதுடனும் நெருக்கமாக இணைந்து கொண்டு இருந்தது.

அவருக்கு அமெரிக்க ஐக்கிய அரசுகளின் புதிய பாத்திரம் சம்பந்தமாக அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையேயான உறவு 1923 அக்டோபரில் ஜேர்மன் புரட்சி தோல்வியைத் தழுவிக் கொண்டதன் பின்னர் தீர்க்கமான முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. நாம் இங்கு மீண்டும் ஒரு தடவை அகநிலை, புறநிலை காரணிகளின் சிக்கலையும் இயக்கவியல் பாத்திரத்தையும் கண்டு கொள்ள முடியும். அச்சமயத்தில் ருஷ்யக் கட்சியின் தலைமையில் இருந்த நெறிகெட்டவர்கள் பெருமளவுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய ஜேர்மன் கட்சியின் அடிபணிவு ஐரோப்பிய, அனைத்துலக, அரசியல், வர்க்க சக்திகளை நாடகப் பாணியில் மாற்றியமைத்தது. இது ஐரோப்பியத் தொழிலாளர் வர்க்கத்தை பின்னடிக்குத் தள்ளி ஐரோப்பாவினுள் முதலாளித்துவத்துக்கு புதிய ஆயுளைப் பெற்றுக் கொடுத்தது. இத்தோல்வி அமெரிக்க ஐக்கிய அரசுகள் தனது பிரமாண்டமான வளங்களை -பொருளாதார, அரசியல் வளங்கள்- ஐரோப்பாவை தற்காலிகமாகவேனும் சமநிலைக்கு கொணர இடமளித்தது. ட்ரொட்ஸ்கி தெளிவுபடுத்தியது போல் அது அவ்வாறு செய்தது நிதியையும் பொருட்களையும் கடனுக்கு வழங்குவதன் மூலம் மட்டும் செய்யவில்லை. ஐரோப்பிய சமூக ஜனநாயகத்தின் புனர்வாழ்வுக்கு அவசியமான நிலைமைகளை சிருஷ்டிப்பதன் மூலமாகும். அமெரிக்கா இதனை தமது ஐரோப்பியப் போட்டியாளர்களின்

தொடர்ச்சி 10ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அரசியல் நெருக்கடியின் உலக வரலாற்றுத் தாக்கங்கள்...

9ம் பக்கத் தொடர்ச்சி

இழப்புக்களின் மூலம் அதனது நலன்களுக்காகச் செய்தது.

ட்ரொட்ஸ்கியின் 1924ம் ஆண்டு பேச்சில் இருந்து மேற்கோள் காட்ட எனக்கு இடமளியுங்கள்: இதில் அவர் அமெரிக்க அரசுகளின் அனைத்துலகப் பாத்திரத்தை பண்பாக்கம் செய்துள்ளார்.

"இன்று எவரும் சரி அமெரிக்க ஐக்கிய அரசுகளின் அதிகாரத்தையும் சிறப்பு முக்கியத்துவத்தையும் கணக்கில் கொள்ளாமல் ஐரோப்பாவினது அல்லது உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் தலைவிதியைப் பற்றிப் பேசுவதற்கு முயற்சி செய்யின் அது ஒரு விதத்தில் எஜமானனை கலந்தாலோசிக்காமல் ஒரு ஐந்தொகையை வரைந்ததற்கு சமமானதாகும். முதலாளித்துவ உலகின் எஜமான் -நாம் இதை உறுதியாகப் புரிந்து கொள்ள வேண்டும் - நியூயோர்க் ஆகும்; அதன் இராஜாங்கத் திணைக்களம் வாஷிங்டன் ஆகும்.

"போல்ஷிவிசத்துக்கு அமெரிக்க முதலாளித்துவம் போன்று காட்டிமிராண்டித்தனமானதும் கொள்கைப் பிடிப்பானதுமான வேறு எதிரி கிடையாது. ஹியூசையும் (1921-25 அமெரிக்க இராஜாங்கச் செயலாளர்) அவரது கொள்கையையும் தற்செயலானதாகக் கொள்ள முடியாது. அவை சலன புத்தி அல்ல. அது உலகின் பெரிதும் அணிதிரண்ட முதலாளித்துவத்தின் நம்பிக்கையின் வெளிப்பாடாகும். இது இப்போது முழு உலகையும் சர்வாதிகார ஆட்சியினுள் கொணரும் அப்பட்டமான போராட்டத்தினுள் ஈடுபட்டுள்ளது. அது எம்முடன் மோதிக் கொள்வதற்கு பசுபிக் சமுத்திரத்தின் ஊடாக வரும் கடல் வழி சீனாவுடனும் சைபீரியாவுடனும் நெருங்குகின்றது என்ற தனிக் காரணமே போதுமானது. சைபீரியாவைக் காலனியாக்கிக் கொள்ளும் சிந்தனை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு மிகவும் கவர்ச்சியான சிந்தனையாகும். ஆனால் அதன் காவலாளி நின்றுகொண்டுள்ளான். நாம் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏகபோகம் கொண்டுள்ளோம். நாம் பொருளாதாரக் கொள்கையில் சோசலிசத் தொடக்கத்தைக் கொண்டுள்ளோம். ஏகபோகத்தினதும் அமெரிக்க ஐக்கிய அரசுகளினதும் பிளவுபடாத ஆட்சியினதும் வழியில் இருந்து கொண்டுள்ள முதலாவது தடை இதுவேயாகும். ஐரோப்பாவிலும் அத்தோடு ஆசியாவிலும் எங்கும் ஏகாதிபத்திய அமெரிக்கவாதம் புரட்சிகர போல்ஷிவிசத்துடன் மோதிக் கொள்கின்றது. தோழர்களே! இவை நவீன வரலாற்றின் அடிப்படைக் கொள்கைகள்."

ட்ரொட்ஸ்கி உலகின் புதிய சமபல நிலையை தொகுத்துக் கூறுகையில் ஐரோப்பா தொடர்பான அமெரிக்கக் கொள்கையை புகழ்பெற்ற பழமொழியுடன் பண்பாக்கம் செய்தார்: "அமெரிக்கா முதலாளித்துவ ஐரோப்பாவை கூப்பனில் போட முயற்சிக்கின்றது."

உலக ஆதிபத்தியத்துக்கான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கோரிக்கையின் முக்கிய அம்சம் ஐரோப்பா, அமெரிக்கா இரண்டிலும் உள்ள தொழிலாளர் இயக்கத்தை நாற்றெமெடுக்கச் செய்யும் சித்தாந்த, அரசியல் பாத்திரத்தை வகிப்பதேயாகும். ட்ரொட்ஸ்கி "சமாதான சீர்திருத்தவாதம்" (Pacifist Reformism) என அழைத்ததன் உருவத்தை அபிவிருத்தி செய்து, தேசிய சீர்திருத்தவாத அதிகாரத்துவத்தை ஊட்டி வளர்ப்பதேயாகும்.

"வார்த்தையின் முழு அர்த்தத்தில் "அமெரிக்கன் ஏகாதிபத்தியம்" சாராம்சத்தில் முரட்டுத்தனமானதும் காலவதியானதும் கொலைகாரத் தனமானதுமாகும். ஆனால் அமெரிக்கன் அபிவிருத்தியின் சிறப்புத் தன்மைகள் காரணமாக அது தன்னை சாத்வீக மேலங்கியில் சுற்றிக் கொள்ளும் சாத்தியம் இருந்து கொண்டுள்ளது" என அவர் குறிப்பிட்டார்.

ஜேர்மன் புரட்சியின் தோல்வியின் பின்னர் ஐரோப்பிய சமூக ஜனநாயகம் அமெரிக்கன் வாதத்தின் சீடனாகியது. வூட்ரோ வில்சனின் நற்செய்தியைப் போதனை செய்த ஐரோப்பிய சமூக ஜனநாயகம் சிறிது காலம் ஐரோப்பிய முதலாளித்துவத்துக்கு எதிராக நின்று கொள்ள நேரிட்டது.

அந்த விரிவுரையிலும் கூட ட்ரொட்ஸ்கி அமெரிக்க ஐக்கிய அரசுகளின் தொழிலாளர் இயக்கம் வரலாற்று ரீதியில் முன்னொரு போதும் இல்லாத அளவிலான ஊழல்களுள் மூழ்கடிக்கப்பட்ட விபரங்களை சுட்டிக் காட்டினார். அவர் இந்த அரசியல் தோற்றப்பாடு இறுதி ஆய்வில் அமெரிக்க முதலாளித்துவத்தின் கையில் இருந்து கொண்டுள்ள பிரமாண்டமான வளங்களின் பெறுபேறு எனச் சுட்டிக் காட்டினார்.

"இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது காலாண்டில் அமெரிக்கா பங்கு கொண்ட ஏகாதிபத்தியப் படுகொலைகளின் பின்னரும் அனைத்து நாடுகளது தொழிலாளர்களின் அனுபவத்தின் பின்னரும் நடைமுறையில் உள்ள தரப்படுத்தப்பட்ட இன்றைய இணக்கப்பாட்டை எட்டுவது எவ்வாறு சாத்தியமாகியது? இக்கேள்விக்கான பதிலை அமெரிக்க மூலதனத்தின் சக்தியிலேயே கண்டுகொள்ள வேண்டும். இத்துடன் கடந்த காலம் எதையும் ஒப்பிட முடியாது...

"இந்தச் சக்தியே முதலாளிகளை பிரித்தானிய முதலாளி வர்க்கத்தின் பழைய நடைமுறைகளைக் கடைப்பிடிக்க அனுமதிக்கிறது: பாட்டாளி வர்க்கத்துக்கு கால்கட்டு போடும் பொருட்டு தொழிலாளர் பிரபுக்களைக் கொழுக்கச் செய்தது. பிரித்தானிய முதலாளி வர்க்கம் கவனத்தில் எடுக்கத் தன்னும் அஞ்சிய இந்த நடைமுறையை இவர்கள் பூரணமாகச் செய்தனர்."

ட்ரொட்ஸ்கி விளக்கியது போல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உயர்நிலை, அது மேலாதிக்கத்துக்கு வளர்ச்சி கண்டதேயாகும். இது உலக முதலாளித்துவத்தின் முழு அளவிலான பொருளாதார சீரழிவு காலப்பகுதியில் இடம்பெற்றது. அமெரிக்க முதலாளித்துவம் அது வளர்ச்சி கண்டதும் ஒரு வீழ்ச்சி கண்டுபோன அமைப்பினது சகல முரண்பாடுகளையும் தன்னுள் ஈர்த்துக் கொள்ளத் தள்ளப்பட்டது.

20பதாம் நூற்றாண்டின் சோசலிசப் புரட்சியின் மிகவும் அடிப்படையான சக்திகளின் ஜீவ அணுக்களைப் பற்றிய ஆய்வு இந்தப் பேச்சில் அடங்கி இருந்தது. சமீப காலச் சம்பவங்களின் வெளிச்சத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகுக்கு தன்னை சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான சக்தியாக காட்டுவதும் தொழிலாளர் வர்க்கத்தை ஏமாந்து போகச் செய்து தவறான வழியில் பயணம் செய்ய வைப்பதும் பிற்போக்கு தொழிலாளர் அதிகாரத்துவங்களின் கால்கட்டுக்கு கட்டுண்டு போகச் செய்வதும் அமெரிக்காவின் பரந்தளவிலான பொருளாதார வளங்களிலும் பூகோள மேலாதிக்கத்திலும் தங்கி இருந்தது என்பதைக் குறிப்பிடுவது சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.

அனைத்துலக வேலைத்திட்டத்தையும் மூலோபாயத்தையும் ஆரம்பமாகக் கொள்ள வலியுறுத்துவதை மையமாகக் கொண்டதும் அமெரிக்க முதலாளித்துவத்தின் உலக வரலாற்றுப் பாத்திரத்தை மதிக்கின்றதற்கும் இடையேயான நெருங்கிய உறவு கொண்ட ட்ரொட்ஸ்கியின் ஆழமான கருத்துப்பாடு அவரின் 1929ம் ஆண்டின் ஆக்கங்களில் தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றது: கம்யூனிஸ்ட் அகிலத்தின் வரைவு அறிக்கை -அடிப்படைகள் பற்றிய விமர்சனங்களினுள் (Draft program of the Communist International -a critique of fundamentals) வெளிப்படுகின்றது. பெரிதும் புகழ் பெற்ற அவரின் ஆரம்பப் பகுதியைத் தொடர்ந்து ட்ரொட்ஸ்கி அமெரிக்கன் ஏகாதிபத்தியத்தின் புதிய பூகோளப் பாத்திரம் பற்றிய பிரச்சினைக்கு உடனடியாகச் செல்கின்றார். "தனியொரு நாட்டில் சோசலிசம்" என்ற தேசிய சோசலிச பிடிவாதக் கொள்கைகளுக்கு நேர் எதிராக ட்ரொட்ஸ்கி சோசலிச அனைத்துலகவாதக் கொள்கையை முன்நோக்கினதும், மூலோபாயத்தினதும் உபாயத்தினதும் மூலைக்கல்லாக நாட்டுகின்றார்.

ஐரோப்பாவின் மீது அமெரிக்காவினால் புதிதாக ஸ்தாபிதம் செய்யப்பட்ட மேலாதிக்கத்தின் தாக்கங்களை உத்தியோக பூர்வ வரைவு பாரதூரமானதாகக் கொள்ளத் தவறியதை வரைவின் முக்கியமான தேசியவாத தகவமைவின் ஆழமான வெளிப்பாடு என அவர் கொள்கிறார். அவர் எழுதியதாவது:

"ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் அடிபணிவில் இருந்தும் 1923ல் ஜேர்மன் பாட்டாளி வர்க்கம் தோல்வி கண்டதில் இருந்தும் ஐரோப்பாவில் அமெரிக்காவின் புதிய பாத்திரம் மதிப்பீடு செய்யப்பட முடியாது போயிற்று. ஐரோப்பாவின் "ஸ்திரப்பாடு" "சகஜநிலை" "சமாதான" காலப்பகுதியும் அத்தோடு சமூக ஜனநாயகத்தின் "புனருத்தாரணமும்" ஐரோப்பிய விவகாரங்களில் அமெரிக்கத் தலையீட்டின் முதல் நடவடிக்கைகளின் நெருக்கமான சட, சித்தாந்த தொடர்புடன் இணைந்து சென்றது என்பதை விளக்க எதுவிதமான முயற்சியும் செய்யப்படவில்லை."

அமெரிக்காவின் புதிய பூகோளப் பாத்திரத்தின் சிறப்பு முக்கியத்துவத்தை ஆய்வு செய்யத் தவறியமை வரைவின் கர்த்தாக்களை ஒரு புறத்தில் சீர்திருத்தவாதத்தின் அரசியல் பாதுகாப்பின் கீழும் மறுபுறத்தில் ஐரோப்பிய நாடுகளிடையேயான பிரமாண்டமான மோதுதல்களின் உக்கிரத்தின் கீழும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வர்க்கப் போராட்டங்கள் உக்கிரம் கண்ட நிலைமையிலும் ஐரோப்பிய முதலாளித்துவத்தின் தற்காலிக மறுஸ்திரப்பாட்டைக் கணக்கீடு செய்வதைத் தடுக்கின்றது. இது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நெருக்குவாரத்தின் கீழ் தவிர்க்க முடியாத விதத்தில் தோன்றுகின்றது என் ட்ரொட்ஸ்கி விளக்குகின்றார்.

அமெரிக்கன் முதலாளித்துவத்தின் சக்தி பிரமாண்டமானதாக விளங்கியது. ஆனால் உலக முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் இதைக் காட்டிலும் பலம் கொண்டதாக விளங்கியது. அது அமெரிக்காவினுள் ஒரு முனைப்படுத்தப்பட்ட வெளிப்பாட்டைப் பெற்றுள்ளது. 1929-31ல் அமெரிக்க முதலாளித்துவத்தின் வீழ்ச்சி இந்த ஆய்வை ருசுப்படுத்தியது. ஆனால் சோவியத் யூனியனினுள் ஸ்டாலினிசக் கும்பலின் மாபெரும் வெற்றியினால் ஏற்கனவே பாரிய அளவில் அகநிலைக் காரணியான புரட்சிகரத் தலைமை பாதிக்கப்பட்டது. இது ஒரு பாரிய நெருக்கடிக் காலப்பகுதியின் சவாலையும் புரட்சிகர எதிர்ப்பையும் எதிர்கொள்ளப் பற்றாக்குறையானது என்பதை நிரூபித்துவிட்டது.

அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கமும் உண்மையில் முழு மனித இனமும் சோவியத் ஆட்சியின் சீரழிவுக்கு செலுத்திய விலை, ஐரோப்பாவில் பாசிசத்தின் வெற்றியும் இரண்டாம் உலக யுத்தத்தின் மனிதப் படுகொலையும் ஆகியது. கடந்து சென்ற ஒரு நூற்றாண்டு காலமாக இடம்பெற்ற வர்க்கப் போராட்டத்தின் ஒரு விரிவான ஆய்வினை இந்த ஆய்வின் மூலம் வழங்குவது என்பது இந்த அறிக்கையின் நோக்கிற்கும் பரிமாணத்துக்கும் பெரிதும் அப்பாற்பட்டது. முதலாவது உலகப் படுகொலையின் பின்னர் அது அடைந்திருந்ததைக் காட்டிலும் பெரிதும் பாரியதான மேலாதிக்க அந்தஸ்துக்கு யுத்தத்தின் பின்னைய காலப்பகுதியில் அமெரிக்க முதலாளித்துவம் ஐரோப்பாவினதும் ஆசியாவினதும் சாம்பலின் மேல் ஸ்தாபிதம் செய்யப்பட்டது எனக் கூறுவது மட்டும் போதுமானது.

அமெரிக்க முதலாளித்துவம் முக்கியமாக உலக முதலாளித்துவத்தை மீளக் கட்டியெழுப்பியது. அத்தோடு உலகம் பூராவும் இலாப முறையின் பாதுகாப்பின் பேரில்-பொருளாதார, அரசியல், இராணுவ -முன்னரைக் காட்டிலும் நேரடியாகத் தோள்கொடுக்கத் தள்ளப்பட்டது. யுத்தத்தின் பின்னைய யதார்த்தத்தை இரண்டு மேலாதிக்க வல்லரசுகளுக்கு -அமெரிக்கா சோவியத் யூனியன் -இடையேயான மோதுதலாகக் காட்டும் பப்லோவாத உருவாக்கத்தை எமது இயக்கம் சரியான விதத்தில் கண்டனம் செய்தது. திரிபுவாதிகளின் முகாமில் இந்த உருவமைப்பு குளிர் யுத்த கால மேல்மட்டத் தோற்றப்பாட்டுக்கு இயைந்து போவதைக் காட்டிக் கொண்டது. இது ஸ்டாலினிசத்துக்கு இயைந்து போவதற்கும் விட்டுக்கொடுப்பதற்குமான கோட்பாட்டு அடிப்படையாகியது.

இருப்பினும் இந்நோக்கின் பின்னணியில் ஒரு உண்மை மூலகம் இருந்தது. அதனது வரலாற்றுப் போக்குகளில் இருந்து பப்லோவாதிகளால் பிரித்தெடுக்கப்பட்ட மூலகம் முற்றிலும் ஒரு பக்கச்சார்பான நோக்கையே முன்வைத்ததோடு அதன் மூலம் அதைப் பொய்மைப் படுத்தியது. ஆனால் உண்மையில் அமெரிக்க அரசுகள் ஏகாதிபத்தியத்தினதும் கம்யூனிஸ்ட் எதிர்ப்பு கோட்டையினதும் பூகோளப் பொலிஸ்காரனாகவும் "சுதந்திர உலகம்" எனப்படுவதன் தலைவனாகவும் தோன்றியமை உலகப் புரட்சிக்கு எதிரான இன்றியமையாத தனிக் கொத்தளத்தின் பாத்திரத்தைப் பிரதிபலித்தது.

அத்தகைய ஒரு பாத்திரத்தின்



முதலாளித்துவத்தின் மிலேச்சத்தனம்: நாசி முகாம்களில் சித்திரவதைகளுக்குள்ளாகி பட்டினியில் இறந்துபோன கைதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லியொன் ட்ரொட்ஸ்கி

கோரிக்கைகள் எந்த ஒரு முதலாளித்துவ நாடும் இட்டு நிரப்புவதற்கு பெரிதும் பிரமாண்டமானதாக விளங்கியது. அத்தோடு 1960பதுகளில் அமெரிக்காவினுள் நெருக்கடிகள் ஆளமாகுவதற்கான அறிகுறிகள் அதிகரித்து வந்தது. இதற்கு ஒரு தொகை அறிகுறிகளை குறிப்பிட முடியும்: 1963ல் கென்னடி படுகொலை, வன்முறையுடன் கூடிய கறுப்பர்களின் சிவில் உரிமைப் போராட்டம், யூதர் வசிப்பிடங்களில் கலகம், போராளி தொழிலாளர் போராட்டங்களின் வளர்ச்சி, சமூகப் போராட்டங்கள் ஆழம் கண்டமை, உலக அரங்கில் அமெரிக்கன் முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் உக்கிரம் கண்டமையுடன் பிணைக்கப்பட்டு இருந்தது.

1971ல் பிரெட்டன் வூட்ஸ் அமைப்பு வீழ்ச்சி கண்டமை ஒரு மாபெரும் திருப்பு முனையாக விளங்கியது. அமெரிக்காவின் உலக அந்தஸ்தின் அடிமட்டத்திலான அரிப்பை இது வெளிக்காட்டியது. அமெரிக்கன் மேலாதிக்கத்தின் பலவீனம் அந்த சகாப்தத்தில் மேலும் இரண்டு குமுறல் வெளிப்பாடுகளுடன் பிணைக்கப்பட்டு இருந்தது: நிக்சன் ஆட்சி வீழ்ச்சி; வியட்னாமில் அமெரிக்காவின் தோல்வி.

நாம் எமது 1988ம் ஆண்டின் அனைத்துலக முன்நோக்கப் பத்திரத்தில் விளக்கியது போல், உலக முதலாளித்துவம் 1968-1975 வரையிலான நெருக்கடியின் அலைகளுக்கும் புரட்சியின் எழுச்சிக்கும் நின்று பிடிக்க முடிந்தது பெருமளவுக்கு பப்லோவாத சீர்குலைப்புவாதத்தின் சேவைகளின் காரணமாகவேயாகும். ஆனால் அமெரிக்கா இந்த தசாப்தத்தில் அல்லது இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து வந்த சகாப்தத்திலும் அது அனுபவித்து வந்த சவால் செய்ய முடியாத உலக மேலாதிக்கத்தை மீளக் கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை. அதனது பலவீனம் கண்ட உலக அந்தஸ்து அமெரிக்காவின் உள்ளேயான ஆளும் பிரமுகர்களின் வர்க்கப் போர் கொள்கையை பக்குவமான திருப்பத்தின் மூலம் வெளிப்பாடாகச் செய்தது. றீகன் ஆட்சிக்கும் அதைத் தொடர்ந்து வந்தவர்கட்கும் உழைக்கும் மக்களின் செல்வங்களைத் தட்டிப் பறித்து சமுதாயத்தின் பெரும் வசதி வாய்ப்புகள் நிறைந்த பகுதியினருக்கு மீளவும் நாடகப் பாணியில் மறுபங்கீடு செய்வதும் அதன் மூலம் அமெரிக்க முதலாளித்துவம் சந்தைகளுக்காகவும் மலிவு உழைப்பு மூலகங்களுக்காகவும் பூகோள ரீதியான போராட்டத்தில் பொருளாதாரத்தை யுத்த அடிப்படையில் இருத்தவும் முடிந்தமை அடிமைத்தனமான தொழிலாளர் அதிகாரத்துவத்தின் சேவையில் முற்றிலும் தங்கியிருந்தது.

சமூக சீர்திருத்தத்தினதும் சார்பு ரீதியான வர்க்க சமரசத்தினதும், கடந்த காலக் கொள்கைகளில் இருந்து உடைத்துக் கொள்வதன் மூலம் அமெரிக்க முதலாளித்துவம் பதிலளித்தது. அதனது பலவீனம் கண்ட அனைத்துலக அந்தஸ்துக்கு மட்டும் அல்ல. பூகோளமயமாக்கம் என்ற பேரில் தெரிய வந்த உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட ஆழமான மாற்றங்களில் இருந்து பெருக்கெடுத்த கோரிக்கைகளுக்கும் பதிலளிக்க வேண்டி ஏற்பட்டது.

நாம் விளக்கியவாறு இந்தப் போக்கானது ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினால் ஆட்சி செய்யப்பட்ட சுயபூர்த்தி ஆட்சிகளுக்கு மரண நாதம் ஒலித்தது. அத்தோடு சோவியத் யூனியனின் வீழ்ச்சி அமெரிக்க முதலாளித்துவத்துக்கு ஒரு குறுகிய கால திட நம்பிக்கைக்கும் பொருளாதார வளர்ச்சிக்குமான புத்தூக்கத்தை வழங்கியது.

எவ்வாறெனினும் கடந்த இரண்டு தசாப்த காலங்களாக அமெரிக்க முதலாளித்துவம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கண்ட வெளித்தோற்ற வெற்றிகள் ஒரு பாரிய விலை கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அவை உண்மையில் பிரமாண்டமான இழப்புக்களின் மூலம் கிட்டிய வெற்றிகளாக விளங்கின. அமெரிக்க ஆளும் வர்க்கம் அதனது ஆட்சியின் அரசியல், சித்தாந்த அடிப்படைகளை முறைமுறையாகக் கீழறுப்பதன் காரணமாக பிரமாண்டமான சனத்தொகையில் இருந்து அன்னியப்பட்டுப் போய்விட்ட ஒரு அரசியல் முறையை உருவாக்கிக் கொண்டும் முன்னர் ஒரு போதும் இல்லாத விதத்தில் குறுகியதும் ஈடாட்டம் கண்டதுமான சமூக அடிப்படையில் ஒரு நீண்ட சமூகத் துருவப்படுத்தலினதும் அரசியல் சீரழிவினதும் போக்காகும்.

## அமெரிக்க முதலாளித்துவத்தின் உலக அந்தஸ்தின் வீழ்ச்சியும் அமெரிக்க ஜனநாயகத்தின் நெருக்கடியும்

அமெரிக்கன் ஏகாதிபத்தியத்தின் பாரதூரமான நெருக்கடிக்கான எந்த ஒரு சாத்தியத்தையும் தள்ளி வைப்பது அனைத்து திரிபுவாதத்தினதும் அசல் அடையாளமாக விளங்கியது. அந்த அரசியல் சிறப்பம்சம் பப்லோவாதத்தின் மூலங்களை நோக்கிச் செல்கிறது. இது அமெரிக்காவில் ஒரு சமூக நெருக்கடிக்கான சாத்தியத்தை கூடவோ அல்லது குறையவோ அழித்து எழுதியது. இந்நெருக்கடி புரட்சிகர பரிமாணம் கண்டு வந்ததோடு, ஸ்டாலினிசம் அல்லது சமூக ஜனநாயகத்தைப் பார்க்கிலும் பப்லோவாதத்தை அமெரிக்க தொழிலாளர் வர்க்கத்தை வரலாற்றின் குப்பைக் கூடைக்குள் வீசத் தள்ளியது.

இது லத்தீன் அமெரிக்க பப்லோவாதிகளின்- பொசாடஸ் (posadas)- ஆய்வுகளில் ஒழுங்கற்ற உருவைப் பெற்றது. அமெரிக்கன் ஏகாதிபத்தியத்தை தோற்கடிப்பதற்கான ஒரே வழி முன்கூட்டியே முடமாக்கும் அணுவாயுத யுத்தத்தில் (Nuclear war) ஈடுபடுவதும் அமெரிக்க அரசுகளை சிதறடிப்பதுமே என அவர் வாதித்து வந்தார்.

சமீப கால அரசியல் நெருக்கடியில் இந்த நிலைப்பாடு பல்வேறுபட்ட மாஜி. தீவிரவாதக் குழுக்களால் மீள ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. 2000ம் ஆண்டு தேர்தலில் "இடது" அமைப்புக்களின் பொதுப் போக்கானது- இது ரால்ப் நாடரின் கிறீன் கட்சி தொடக்கம் பல்வேறு மாவோவாத அரச முதலாளித்துவ, மாஜி -ட்ரொட்ஸ்கிச குழுக்களுக்கும் பொதுவானது- அமெரிக்க ஐக்கிய அரசுகளின் அரசியலமைப்பு நெருக்கடி "தேநீர் கோப்பை புயல்" என ஸ்பாட்டசிஸ்ட் லீக்கினால் அழைக்கப்பட்டது.

முக்கியமாக அவர்கள் இதை "இருதரப்பு தொற்று நோய்" ஆகக் கொண்டதோடு ஆளும் தரப்பினுள் பாரதூரமான பிளவுகள் இருப்பதாகவோ அல்லது தேர்தலை மோசடி செய்வதில் பெரும் பாரதூரமான விடயங்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகவோ ஏற்க மறுத்தனர். அதனால் தொழிலாளர் வர்க்கம் அதையிட்டு அக்கறை காட்ட வேண்டிய அவசியம் கிடையாது எனவும் கூறிக் கொண்டனர். நான் முன்னர் மேற்கோளாகக் காட்டிய சோசலிசத் தொழிலாளர் கட்சியின் (SW) அறிக்கை இந்த பொதுத் தொனியின் பெரிதும் வலதுசாரி வேறுபாடாகும். சோசலிசத் தொழிலாளர் கட்சி அரசியல் நோய் பிடித்த இந்தக் கும்பல் தனது பொது அரசியல் திசையையே காட்டிக் கொண்டுள்ளது. அதாவது: முதலாளி வர்க்கத்திலிருந்து எந்த ஒரு நிஜமான சுதந்திரமும் இல்லாமையும் அமெரிக்க அரசியலில் உள்ள பெரிதும் வலதுசாரி சக்திகளுக்கு கோழைத்தனமான முறையில் இயைந்து போனமையும்.

மறுபுறத்தில் சோசலிச சமத்துவக் கட்சியும் அனைத்துலகக் குழுவும் அமெரிக்க அரசியல் அபிவிருத்திகளைப் பற்றிய ஆய்வினை, அமெரிக்க முதலாளித்துவத்தினையும் அதனது ஆழமான சமூக முரண்பாடுகளையும் தொடர்ச்சியாக ஆய்வு செய்வதனைக் கோட்பாட்டு வேராகக் கொண்டுள்ளது. 1971ல் பிரெட்டன் வூட்ஸ் அமைப்பின் சரிவினால் பிரிகோடிடப்பட்ட கடந்த முப்பது ஆண்டுகள் உலகப் பொருளாதாரத்திலும் அமெரிக்க அரசுகளின் அரசியல் அந்தஸ்திலும் ஒரு வீழ்ச்சியைக் கண்டுள்ளன. இந்தப் பொதுச் சீரழிவானது உள்வாரி வர்க்க குரோதங்களை உக்கிரம் அடையச் செய்ததோடு, அமெரிக்க ஜனநாயகத்தின் நெருக்கடியையும் மோசம் அடையச் செய்தது.

அமெரிக்காவின் பூகோள மேலாதிக்கத்தின் வீழ்ச்சிக்கும் அமெரிக்காவில் முதலாளித்தவ ஜனநாயகம் சீரழிந்து போனதுக்கும் இடையே தெளிவான உறவு இருந்து கொண்டுள்ளது. 1900-1945 வரையான அமெரிக்க அரசுகள் பற்றி சமீபத்தில் எழுதிய ஒரு கட்டுரையில் பிரித்தானிய வரலாற்றாசிரியரும் ஜோன்.எப்.கென்னடியின் வாழ்க்கை வரலாற்றாசிரியருமான ஹியூ புரோகன் ஒரு பரந்த அளவிலான பொதுமைப்படுத்தலாக கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது:

"சவால்கள் என்னவாக இருந்த போதிலும் (1929-39 ஆண்டுகளின் பெரும் பொருளாதார மந்தம் மோசமானதாக விளங்கியது) அமெரிக்கா தொடர்ந்தும் லிபரலாக இருந்து வந்ததோடு 1945 வரையிலும் அதன் பின்னருமான ஒவ்வொரு நெருக்கடிக்கும் பதிலிறுத்தும் வந்தது. இதனை அதனது அரசியலமைப்பு அல்லது அதனது ஒரு பகுதியை கைவிடுவதன் மூலம் அன்றி அதனது நிழலை விஸ்தரிப்பதன் மூலம் செய்தது. 20பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்த தாக்கங்களுக்கு ஏற்ப அமெரிக்க அரசுகள் அதன் ஆரம்பத்தில் ஒரு பெரிதும் குறைபாடுகள் கொண்ட ஜனநாயகமாக விளங்கியது. கறுப்பு இன பிரஜைகளும் ஏழைகளான வெள்ளையரும் தென் மாநிலங்களில் வாக்களிக்க முடியவில்லை. பெண்களுக்கு நான்கு மாநிலங்களில் மாத்திரமே வாக்குரிமை இருந்தது. வேறு குறைபாடுகளும் இருந்தன. ஆனால் அமெரிக்கர்கள் ஜனநாயகத்தின் நோய்களுக்கு பரிகாரம் மேலும் மேலும் ஜனநாயகம் என நம்பினார்கள்" என்றார்.

புரோகன் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் 20பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இடம்பெற்ற அரசியலமைப்பு திருத்தங்கள் பற்றி குறிப்பிடுகின்றார். இவை அமெரிக்க செனட்டர்களை தெரிவு செய்யவும் மகளிர் வாக்குரிமைக்கும் தென் மாநிலங்களில் கறுப்பர்களின் வாக்குரிமைக்கும் இடமளித்தது.

ஒரு பொது எடுகோள் என்ற முறையில்- ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் - உள்நாட்டு யுத்தத்தின் முடிவு தொடக்கம் 1920பதுகளின் ஆரம்பம் வரையும்- ஜனநாயகத்தின் உள்ளடக்கம் பற்றிய தகராறுகள் சர்வஜன வாக்குரிமையை விஸ்தரிப்பதற்கும் மேலாக அரசியல் ஜனநாயகத்தை விஸ்தரிப்பதன் ஊடாகவே இறுதியில் தீர்த்து வைக்கப்பட்டது.

1865-1870 வரை நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான ஆக்கபூர்வமான திருத்தங்கள் -13ம் 14ம் 15ம் திருத்தங்கள் - உள்நாட்டு யுத்தத்தின் புரட்சிகர, ஜனநாயக உந்து சக்தியை பிரதிநிதித்துவம் செய்து, அடிமை முறையை ஒழித்துக் கட்டி முன்னைய அடிமைகளுக்கும் அமெரிக்காவில் பிறந்த அனைத்து மக்ளுக்கும் குடியுரிமையை வழங்கியும் எந்த ஒரு நபருக்கும் சட்டத்தின் உரிய போக்கு அல்லது சம பாதுகாப்பு கிடைப்பதை தடை செய்வதினின்றும் மாநிலங்களை தடுத்து அல்லது இனம், நிறம், அல்லது முன்னைய அடிமை நிலையை காரணமாகக் காட்டி சமஷ்டி அரசாங்கம் அல்லது மாநிலங்கள் வாக்குரிமையை தவிர்ப்பதை வெளிக்காட்டியது.

1913ல் நிறைவேற்றப்பட்ட 17வது அரசியலமைப்புத் திருத்தம், அமெரிக்க செனட் சபை அங்கத்தவர்கள் நேரடி மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்படுவதை ஸ்தாபிதம் செய்தது. (இதற்கு முன்னர் ஒவ்வொரு மாநிலங்களில் இருந்தும் இரண்டு செனட்டர்கள் மாநில சட்டசபையால் தெரிவு செய்யப்பட்டனர்.)

1920ல் நிறைவேற்றப்பட்ட 19வது திருத்தம் மகளிர் வாக்குரிமையை ஸ்தாபிதம் செய்தது.

1961ல் நிறைவேற்றப்பட்ட 23வது அரசியலமைப்புத் திருத்தம், கொலம்பியா மாவட்டத்தில் வதியும் பிரஜைகளுக்கு ஜனாதிபதிக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கியது.

1971ல் செய்யப்பட்ட 26வது திருத்தம் வாக்குரிமை வயது எல்லையை 21 வயதில் இருந்து 18 வயதாக குறைத்தது.

இதன் மூலம் 17 அரசியலமைப்புத் திருத்தங்களில் 8 திருத்தங்கள் உரிமைகள் மசோதா (இது அரசியலமைப்புச் சட்டத்துக்கான முதல் பத்து திருத்தங்களைக் கொண்டுள்ளது.) அரசியல் உரிமைகளை விஸ்தரிக்கச் செய்ததோடு பொதுஜன இறைமைக் கொள்கையையும் பலப்படுத்தியது. இத்தனைக்கும் மேலாக 1965ம் ஆண்டின் வாக்குரிமைச் சட்டம் தென் மாநிலக் கறுப்பர்களுக்கு சர்வஜன வாக்குரிமையை மறுத்த பாரபட்சமான பதிவு விதிமுறைகளைச் சட்ட விரோதமாக்கியது. இது சமஷ்டி பரிசோதகர்கள் (Examiners) தெற்கில் பதிவு விதிமுறைகளைக் கையாளும் அதிகாரத்தை வழங்கியது. 1960ல் மிசிசிப்பி கறுப்பு இன வாக்காளர்கள் ஆக 22000 பேரை மட்டுமே கொண்டிருந்தது. 1965ம் ஆண்டின் இறுதியில் இது 175000 ஆகியது. 1970ம் ஆண்டின் சிவில் உரிமைகள் சட்டம் வாக்கு உரிமை சட்டத்தின் சரத்துக்களை விஸ்தரித்ததோடு, பலப்படுத்தவும் செய்தது.

எவ்வாறெனினும் 1971ம் ஆண்டின் பின்னர் ஜனநாயக உரிமைகளை சட்டசபை. அரசியலமைப்புக்கு விஸ்தரிப்பது தொடர்பாக பொதுவிலும் குறிப்பாக வாக்குரிமை சம்பந்தமாகவும் பாவிக்கும் போக்கு ஒரு முடிவுக்கு வந்தது. (1973ல் அமெரிக்க உயர் நீதிமன்றம் கருக்கலைப்பை (Abortion) சட்டரீதியாக்கும் விதத்தில் வழங்கிய தீர்ப்பு ஒரு விதிவிலக்கானதாக விளங்கியது. எவ்வாறெனினும் இது ஒரு புதிய விஸ்தரிப்பு காலப்பகுதியின் ஆரம்பப் புள்ளியாக விளங்காமல் ஜனநாயக சீர்திருத்தத்தின் இறுதி மூச்சுத் திணறலாக விளங்கியது. அன்றில் இருந்து இது ஒரு தொகை சமஷ்டி நடவடிக்கைகளாலும் அரச சட்டங்களாலும் தொடரப்பட்டது. இது Roe V Wade வழக்கில் ஸ்தாபிதம் செய்யப்பட்ட மக்களின் உரிமையை தமக்குச் சாதகமாக்கிக் கொள்ளும் சக்தியை குறுகலாக்கின.

கடந்த 30 ஆண்டுகளும் முதலாளித்துவ ஜனநாயக அமைப்புகளது சீரழிவையும் ஜனநாயக உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டதையும் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் தரிசித்துள்ளன. ஆளும் கும்பலதும் முதலாளித்துவ அரசினதும் உயர் மட்டங்களில் சமூக, அரசியல் முரண்பாடுகளின் பேரிலான அக்கறை பாராளுமன்றத்துக்கு புறம்பானதும் சதி நிறைந்ததுமான வடிவங்களை அதிகரித்த அளவில் எடுத்துள்ளன.

ஒவ்வொரு தசாப்தமும் வீழ்ச்சியின் ஆழமான போக்கினைக் குறிக்கும் விதத்தில் பாரிய அரசியல் நெருக்கடியை உருவாக்கியுள்ளது. 1970பதுகள் வாட்டர்கேட்டின் (Watergate) தசாப்தமாக விளங்கியது. இது நிக்சனின் வெள்ளை மாளிகையின் அடியோடு கொலைகாரத்தனமான நடவடிக்கைகளை அடியோடு அம்பலப்படுத்தியது. நிக்சனின் காடையர் கும்பல் விதிமுறைகள் வியட்னாம் யுத்தத்துக்கும் அத்தோடு நகரங்களிலான சமூக குழப்பங்களுக்கும் போர்க்குணம் கொண்ட தொழிலாளர் போராட்டங்ளுக்கும் காட்டிக் கொண்ட பிரதிபலிப்புக்களாக விளங்கின.

1980பதாம் ஆண்டுகள் ஈரான் -கொன்ட்ரா விவகாரத்தில் சட்ட விரோத. அரசியலமைப்பு விதிமுறைகள் அதிகரித்த அளவில் கையாளப்பட்டதைக் கண்டன. நிக்சனின் வெள்ளை மாளிகையில் இருந்து தொழிற்பட்ட வலதுசாரி இராணுவ அதிகாரிகளும் உளவுச் சேவை அதிகாரிகளும் ஒரு இரகசிய அரசாங்கமாகவே செயற்பட்டனர். மத்திய அமெரிக்காவில் இருந்து வந்த எதிர்ப்புரட்சி இராணுவத்துக்கும் கொலைகாரக் கும்பல்களுக்கும் ஆயுதங்களும் பணமும் அள்ளி வழங்கும் இரகசிய அரசாங்கமாக செயற்பட்டது.

12ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அரசியல்நெருக்கடியின்...

*10ம் பக்கத் தொடர்ச்சி*

1990களில் குடியரசுக் கட்சியின் வலதுசாரிகள் கிளின்டன் ஆட்சியை ஈடாட்டம் காணச் செய்து வீழ்ச்சியடையச் செய்யும் பொருட்டு ஆத்திரமூட்டல்களும் நாசகார நடவடிக்கைகளும் கொண்ட அசிங்கமான சூழ்ச்சிகளில் ஈடுபட்டனர். 1995-96ல் இது குடியரசுக் கட்சி காங்கிரசின் தலைமையில் சமஷ்டி அரசாங்கத்தை இழுத்து மூடும் வடிவத்தை எடுத்தது. இந்த தசாப்தத்தின் இறுதி வருடங்களில் குடியரசுக் கட்சி ஒரு அரசியல் சதி முயற்சி புள்ளியை எட்டியது. இது கிளின்டனுக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டாகவும் செனட் சபையின் கிளின்டன் விசாரணையாகவும் விளங்கியது.

இந்த தசாப்தம் ஜனாதிபதி தேர்தல் களவாடப்பட்டதோடு முற்றுப் பெற்றது. புதிய தசாப்தம் மோசடியினதும் அரசியல் சூறையாடலினதும் அடிப்படையில் ஒரு ஜனாதிபதியை ஸ்தாபிதம் செய்ததோடு ஆரம்பித்தது.

தசாப்தத்துக்கு தசாப்தம் கொலைகாரத்தனத்தினதும் சட்டவிரோதத்தினதும் பரிமாணம் வளர்ச்சி கண்டது. அத்தகைய விதிமுறைகளுக்கு அரசியல், தொடர்பு சாதனங்களின் உள்ளேயான எதிர்ப்பு நலிந்து போயிற்று. வாட்டர் கேட் நிகழ்வுகள் நிக்சனை ஆட்சியில் இருந்து இராஜினாமாச் செய்ய வைத்ததோடு, அவரது உயர்மட்ட சகாக்கள் பலருக்கு தண்டனையும் சிறையும் கிட்டியது.

ஈரான்- கொண்ட்ரா விவகாரத்தில் காங்கிரஸ் சபை, சதியின் சாபக்கேடான அம்சங்களை மூடிமறைக்க செயற்பட்டது. அத்தோடு றீகன் அவரது முன்னணித் தளபதியான ஒலிவர் நோர்த் செய்தது போல் தண்டனை இல்லாமல் தப்பிக் கொண்டார். கிளின்டனின் அரசியல் குற்றச்சாட்டில் தொடர்புச் சாதனங்கள் சதிகாரர்களின் ஒரு முற்று முழுதான செய்தி ஏஜன்சியாகத் தொழிற்பட்டன. 2000 ஆண்டுத் தேர்தலில் அது அத்தகைய ஒரு பிற்போக்குப் பாத்திரத்தையே வகித்தது.

இந்தத் தொடரில் ஒரு நோயாளியின் நோய் எதிர்ப்புச் சக்தி நோய்க் கிருமிகளை இனியும் கண்காணிக்க முடியாதது போல் ஜனநாயக எதிர்ப்பு போக்குகளை எதிர்ப்பதற்கு இலாயக்கற்றனவாக அரசியல் உடம்பு மாறிவிட்டதை ஒருவர் காண்பர். 2000ம் ஆண்டு தேர்தலின் அரசியல் ஆய்வினை நீட்டிச் செல்லின் நோயாளி நோய்க் கிருமிகளுக்கு அடிபணிவார்.

இந்தக் காலப்பகுதியிலான அமெரிக்கன் ஜனநாயகத்தின் சீரழிவின் ஏனைய அம்சங்கள் உள்ளடக்குவது: 1970பதுகளிலும் 1980பதுகளிலும் பிரபல லிபரல் காங்கிரஸ் அங்கத்தவர்கள் உத்தியோகத்தர்களின் அரசியல் ஸ்தாபனத்தைத் துடைத்துக் கட்டல்; குடியரசுக் கட்சி, தொடர்புச் சாதனங்கள் மூலம் வலதுசாரி தீவிரவாதிகளையும் பாசிச பகுதியினரையும் ஊட்டி வளர்ப்பதும், சட்டரீதியானதாக்குவதும்; இது கிறீஸ்தவ வலதுசாரிகள், கருத்தடை எதிர்ப்பு வெறியர்கள், வரி எதிர்ப்பு, அரச உரிமை காக்கும் வலதுசாரி குழுக்களையும் ஆயுத குழுக்களையும் உண்டாக்கும். சட்டத்தையும் ஒழுங்கையும் ஊக்குவிக்கும் அமைப்பு. 'பாதிக்கப்பட்டோர் உரிமைகள் பற்றிய கூப்பாடு, சிவில் உரிமைகளுக்கு நீதிமன்ற தடை.

ஜனநாயக உரிமைகள் மீதான தாக்குதல் தொழிற்சங்கப் போராட்டங்கள் மீதும் வேலைநிறுத்த உரிமை மீதும் அரசாங்க தலைமையிலான தாக்குதலுடன் ஆரம்பமாகியது. 1980பதுகளின் தசாப்தம் பற்கோ (PATCO) விமானப் போக்குவரத்து நெறியாளர் வேலைநிறுத்தம் உடைக்கப்பட்டதோடு ஆரம்பமாகியது. இது தொழிலாளர் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அரசியல் அரங்கில் காணமுடியாது இருந்த வர்க்க யுத்த விதிமுறைகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதாக விளங்கியது. வேலைநிறுத்தம் உடைக்கும் கருங்காலிகளைப் பயன்படுத்துவது, தொழில்சார் குண்டர்களையும் கைத்தொழில் இராணுவத்தையும் தொழிற்சங்க எதிர்ப்பு தடை உத்தரவுகளையும் கையாள்வது, குற்றப்பணம் கட்ட வைத்தல் பொய் தொழில் வழக்கு தாக்கல் செய்தல், வேலைநிறுத்த மறியல் வன்முறைகள், கொலைகள் என்பன இதில் அடங்கும்.

இந்தக் காலப் பகுதியில் அரசியல் அமைப்பின் சீரழிவும் அதனது ஜனநாயக உள்ளடக்கத்தின் தேய்வும் வாக்களிப்போர் எண்ணிக்கையில் கணிசமான அளவு வீழ்ச்சி மூலம் வெளிப்பட்டது. இது இரண்டு முதலாளித்துவக் கட்சிகளதும் வெகுஜன அடித்தளத்தைச் சிதறுண்டு போகச் செய்தது.

2000ம் ஆண்டு தேர்தலில் இந்தப் போக்கின் உச்சக் கட்டம் அமெரிக்க ஜனநாயகத்தின் அத்திவாரம் -வாக்குரிமை மீதான தாக்குதலாக உச்சக் கட்டத்தை அடைந்தது. சமீப காலம் வரை இது நினைத்தும் கூடப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்து வந்தது.

வியட்னாம் யுத்தம் போன்ற அமெரிக்க அட்டூழியங்கள் அமெரிக்காவின் சமாதான நடிப்புக்களை நீண்ட காலத்துக்கு முன்னரே தவிடுபொடியாக்கி விட்டது. ஆனால் அது இன்னமும் ஒரு பெரும் சித்தாந்த துரும்பை- உலக ஜனநாயகத்தின் கோட்டையாக காட்டிக் கொள்ளும் சக்தியை கொண்டிருந்தது. இது ஒரு பெரிதும் அவலட்சணமான நடிப்பாக விளங்கியது. அமெரிக்கன் இரு கட்சி முறையின் தொழிற்பாடு மூலம் இது ஆயிரம் விதத்தில் பொய்யாக்கப்பட்டது. எனினும் இது அமெரிக்காவினுள்ளும் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர்கள், புத்திஜீவிகளை தவறான வழியில் திசை திருப்புவதன் மூலமும் கணிசமான வெற்றி கண்டது.

முதலாளித்துவம் கொடூரமானதாக இருக்கலாம், அது சமத்துவமற்ற பொருளாதாரத்தை போஷிக்கலாம். ஆனால் மக்கள் குறைந்த பட்சம் தங்கள் பிரதிநிதிகளுக்கு வாக்களிக்கும் உரிமையைக் கொண்டு இருந்தனர். உலக மக்களில் பெருமளவிலானோர் ஸ்டாலினிசத்தை சோசலிசத்துடன் தவறாக இனங்கண்டு கொண்டு இருந்த ஒரு நிலைமையில் அமெரிக்க முதலாளி வர்க்கம் தமது 'ஜனநாயகத்தை' சோவியத் அதிகாரத்துவத்தின் எதேச்சதிகாரமான விதிமுறைகளுக்கு எதிராக முன்வைக்க வாய்ப்புக் கிடைத்தது.

ஆனால் 2000 ஆண்டு தேர்தல் அத்தகைய நடிப்புக்களை தவிடு பொடியாக்கிவிட்டது. அதன் மூலம் சோசலிசத்துக்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மிக முக்கியமான சித்தாந்த ஆயுதத்தை பறிகொடுத்துவிட்டது.

## சோசலிசமும் ஜனநாயக உரிமைகளின் பாதுகாப்பும்

இந்த ஆய்வில் இருந்து பெருக்கெடுக்கும் அரசியல் முடிவுகள் நீண்ட தூரம் செல்வதோடு அவை எமது இயக்கத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்களை ஆய்வு செய்ய இன்னும் பல பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது. நாம் பரந்த மக்களின் ஒரு தீவிரமய காலப்பகுதியை உண்மையில் எதிர்பார்ப்பதோடு அதற்குத் தயாராகவும் வேண்டும். சோசலிச, புரட்சிகரக் கருத்துக்களின்பால் மறு கிளர்ச்சி ஏற்படும் என்பதையும் எதிர்பார்க்க வேண்டும்.

நான் இங்கு மற்றொரு முக்கியமான வேலைத்திட்ட விடயத்தையும்- ஜனநாயக பிரச்சினைகள், ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தல் சம்பந்தமான எமது பொது மனப்பான்மையையும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். மத்தியதர வர்க்க மாஜி. தீவிரவாதிகளின் பத்திரிகைகள் ஒருவர் ஆய்வு செய்யும் போது அவர்கள் அமெரிக்காவில் அந்தளவுக்கு பாரதூரமான முறையில் தலையெடுத்துள்ள வாக்குரிமை பற்றிய பிரச்சினையையிட்டு அக்கறை இளகிய மனப்பான்மையும் கசப்புணர்வும் தொழிலாளர் வர்க்கத்தின் உணர்வுகளையோ அல்லது நலன்களையோ பிரதிபலிக்காமல் தாராண்மை முதலாளி வர்க்கத்தின் பொதுவான அலட்சியப் போக்கினைப் பிரதிபலிக்கின்றது.

உழைக்கும் மக்களிடையே- சிறப்பாகத் தொழிலாளர் வர்க்கத்தின் பெரிதும் ஒடுக்கப்பட்ட பகுதியினரிடையே வாக்குரிமை- அரசியல்வாதிகள் உத்தியோகபூர்வமான அரசியல் கட்சிகளின் பேரில் பரந்ததும் நியாயமானதுமான வெறுப்பு இருப்பினும்- பெரிதும் ஆழமாக உணரப்படும் ஒரு பிரச்சினையாகும், அரசியல், தொடர்புச் சாதன அமைப்புக்கள் இந்த உரிமைகளை கண்டிப்பான முறையில் பாதுகாப்பதைக் கைவிடுவதானது பரந்த மக்களில் இருந்து செல்வந்த பிரமுகர்களைப் பிளவுபடுத்தும் பொருளாதார ஆதாளபாதாள அரசியல் தளத்தின் ஒரு பிரதிபலிப்பாகும். அமெரிக்காவில் ஒரு பிரமாண்டமான அரசியல் இடைவெளி இருந்து கொண்டுள்ளது. இதனை நிரப்பித் தள்ள சோசலிச இயக்கம் முன்தள்ளப்பட வேண்டும்.

ஜனநாயக உரிமைகளின் பேரிலான சகல பிரச்சினைகள் சம்பந்தமாகவும் நாம் பெரிதும் உணர்ச்சி மிக்கவராகவும் ஊக்கத்துடன் எதிர்த்து போராடுபவராயும் இருந்தாக வேண்டும். சோசலிச இயக்கம் தன்னை ஜனநாயக உரிமைகளின் பாதுகாவலனாக விளங்கச் செய்ய வேண்டும். நாம் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனமான நலன்களின் நிலைப்பாட்டில் இருந்து அப்படிச் செய்கின்றோம். அடிப்படை உரிமைகளைக் காக்கும் போராட்டத்தில் தொழிலாளர் வர்க்கத்தினால் மட்டுமே ஒரு காத்திரமான தலைமையை வழங்க முடியும் என்பதை எடுத்துக் காட்டுவது எமது கல்விப் பணியாகும். இதனை வெறுமனே முதலாளித்துவ சமுதாயத்தின் கட்டுமானத்தில் இருந்தும் தேசிய அரசில் இருந்தும் ஆரம்பித்து செல்லாமல் மாறாக ஒரு சோசலிச உலகிற்கான தொழிலாளர் வர்க்கத்தின் ஒன்றுபட்டதும் அனைத்துலகப் போராட்டத்தின் மூலமுமே இதைச் சாதிக்க முடியும். எவ்வளவுக்கு எவ்வளவு தொழிலாளர் வர்க்கம் ஜனநாயக உரிமைகளின் காப்பீட்டிற்காக தனது அர்ப்பணிப்பை காட்டிக் கொள்கின்றதோ அவ்வளவுக்கு மத்தியதர வர்க்கத்தின் பெரிதும் முற்போக்கான பகுதியினரைத் தன் பின்னால் அணிதிரட்டிக் கொள்ளவும் தீவிர வலதுசாரிகளை தகர்க்கவும் அதனால் முடியும்.

இந்த நிலைப்பாட்டில் இருந்தே உலக சோசலிச வலைத் தளம் (WSWS) அடக்கமாகவும் ஆனால் ஈவிரக்கமற்ற முறையிலும் லிபரல்களதும் ஜனநாயகவாதிகளதும் தொழிற்சங்க அதிகாரத்தில் உள்ள அவரது கையாட்களதும் கோழைத்தனத்தையும் மலட்டுத்தனத்தையும் அம்பலப்படுத்துகின்றது. அவர்களது சோடை போன தன்மையின் சமூக வேர்களை அம்பலப்படுத்துவதும் இறுதியில் ஜனநாயக உரிமைகளை ஒழித்துக் கட்டுவதில் சகபாடிகளாக இருப்பதை விட வேறு எந்த ஒரு பாத்திரத்தையும் வகிக்க முடியாது என்பதை எடுத்துக் காட்டுவதும் எமது பணியாகும். அரசியல் தகவமைவு, சித்தாந்தம், வரலாறு, தத்துவம் என்பவற்றை பற்றி பிரச்சினைக்குரிய பல விடயங்கள் இருந்து கொண்டுள்ளன. இது லிபரல்வாதத்தின் சீரழிவுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் ஆராயப்பட்டு, விளக்கப்பட வேண்டியுள்ளது. எவ்வாறெனினும் இறுதியில் இந்தத் தோற்றப்பாடு சமுதாயத்தின் வர்க்க அமைப்புக்கும் முதலாளித்துவ அமைப்பின் தன்மைக்கும் இட்டுச் செல்கின்றது.

இது வாக்குரிமை ஜனநாயக உரிமைகளின் பிரச்சினையை காலி செய்து விடுகின்றது எனச் சொல்வதாகாது. எம்மைப் பொறுத்தமட்டில் ஜனநாயகத்துக்கு ஒரு நீண்ட ஆழமான உள்ளடக்கம் இருந்து கொண்டுள்ளது. அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சாரம் போன்ற தமது வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட சகல துறைகளிலும் உற்பத்தியாளர்களின் - நடைமுறை ரீதியான- ஜனநாயகப் பங்குபற்றலை அரவணைத்துக் கொள்ளும் துடிப்பானதும் வளமானதுமான உள்ளடக்கமாகும். இருப்பினும் வெகுஜனங்களின் வாக்களிப்பதற்கான அடிப்படை உரிமையானது ஒரு முற்போக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த உரிமை பெரிதும் திடசங்கற்பமான முறையில் பேணப்படாது போனால் சோசலிசத்துக்கான போராட்டத்தை பின்னடிக்குத் தள்ளிவிட்டு ஜனநாயகத்தின் பெரிதும் பரந்த வெளிப்பாட்டைக் கூட அடைந்துவிட முடியாது. இப்பிரச்சினை சோசலிச இயக்கம் பிரமாண்டமான பின்னடைவுகளுக்கு உள்ளானதும் தொழிலாளர் அதிகாரத்துவங்களின் அட்டூழியங்கள் பரந்த உழைக்கும் மக்களின் சோசலிச நனவில் வீழ்ச்சியை உண்டு பண்ணியதுமான எமது காலப்பகுதியில் ஜனநாயக பிரச்சினைகளின் பேரிலான போராட்டங்கள் பலருக்கு புரட்சிகர சோசலிசத்துக்கு காலடி வைப்பதற்கான அரசியல் பரிணாம காலப்பகுதியாக மாறுகின்றது. எமது இயக்கம் இந்தப் பரிணாமத்தை நிச்சயம் ஊக்குவிக்க வேண்டும்.

இந்த அணுகுமுறையானது அமெரிக்காவிலும் அனைத்துலகிலும் ஒரு தெளிவானதும், ஆளமானதுமான அக்கறையை உண்டுபண்ணியுள்ளது. அமெரிக்காவின் அரசியல் நெருக்கடி பற்றி செய்யப்பட்ட விளக்கத்தில் உலக சோசலிச வலைத் தளத்தினால் (WSWS) பிரசுரிக்கப்பட்ட வாசகர்களின் கடிதங்கள்- எமக்கு கிடைத்த கடிதங்களில் ஒரு சிலவே பிரசுரிக்கப்பட்டன- எமது ஆய்வுகளும் விவாதங்களும் பொதுமக்களில் மிகவும் நனவானதும் அரசியல் ரீதியில் விழிப்பானதுமான பகுதியினரிடையே தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதை நாம் காணாமல் விட்டுவிட முடியாது. உலக சோசலிச வலைத் தளம் (WSWS) அதிகரித்த அளவில் முற்போக்கானதும் ஜனநாயக ரீதியானதும் சோசலிச ரீதியானதுமான சிந்தனையினதும் அரசியலதும் ஒரு பாலைவனப் பசும்புற் தரையாக போராட்டத்துக்கான முன்நோக்கினைத் தேடுபவர்களை அணிதிரட்டும் மையமாக பெரிதும் நோக்கப்படும்.

ஆனால் ஜனநாயக உரிமைகளின் பிரச்சினைகளைப் பற்றிய இந்த அணுகுமுறையானது பரந்த அளவிலான அரசியல் தகவமைவு அற்ற காலப்பகுதியில் எல்லாவற்றையும் விட ஒரு தீர்க்கமான விடயமாகின்றது. நாம் ஒரு புதிய சோசலிச நனவின் பிறப்புக்கு இடைமருவி செல்ல பங்களிப்புச் செய்ய வேண்டும். இது சகாப்தத்தின் தன்மையிலும் சோசலிசப் புரட்சியின் அடிப்படைப் பிரச்சினைகளிலும் வேரூன்றிக் கொண்டுள்ளது. இது உண்மையில் ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டில் இருந்து பெருக்கெடுக்கின்றது. இது வெறுமனே பின்தங்கிய நாடுகளுக்கு உரிய வேலைத்திட்டம் அல்ல என்றும் ஏகாதிபத்திய சகாப்தத்தில் சோசலிசப் புரட்சியின் முன்நோக்கு என்றும் நாம் அடிக்கடி கூறி வந்துள்ளோம். தொழிலாளர் வர்க்கம், முதலாளித்துவம் அபிவிருத்தி காலங்கடந்து வளர்ச்சி கண்ட நாடுகளின் ஜனநாயக உரிமைகளைக் காப்பதற்கு மட்டுமன்றி சகல நாடுகளிலும் முன்னணியில் நிற்க வேண்டும். தாராண்மை முதலாளி வர்க்கம் (Liberal Bourgeoisie) 1920, 1930ம் ஆண்டுகளில் பாசிசத்தின் வெற்றியில் அதனது வங்குரோத்தைக் காட்டிக் கொண்டிருக்குமானால் இன்று அதனது மலட்டுத்தனம் எல்லாவற்றுக்கும் மேலாக ஆழமாகப் பதிந்து கொண்டுள்ளது.

சோசலிச தொழிலாளர் இயக்கம் உலக சோசலிசப் புரட்சியினது வேலைத் திட்டத்தினதும் தொழிலாளர் வர்க்கத்தை ஆட்சிக்கு கொணரும் போராட்டத்தினதும் அடிப்படையில் உழைக்கும் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பேணுகின்றது. அமெரிக்க முதலாளித்துவ ஆட்சியின் வளர்ச்சி கண்டுவரும் நெருக்கடி கட்டளையிட்டுள்ள முன்நோக்கு அதுவேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டரசாங்க முக்கிய பங்காளி விலகியதால் அரசாங்கம் பாராளுமன்றத்தில் சிறுபான்மையாகியுள்ளது

கே.ரத்னாயக்க
ஜூன் 26, 2001

ஆளும் பொதுஜன முன்னணி கூட்டரசாங்கத்தில் இருந்து கடந்த வாரம் முக்கிய கட்சிகளில் ஒன்று விலகியதால் இலங்கை அரசாங்கம் பெரும் குழப்பநிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் மொத்தமாக உள்ள 225 ஆசனங்களில் அது 109 ஆசனங்களை மட்டுமே கொண்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி (UNP) நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. இது பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் தமது பலத்தைக் காட்டுவதற்கான தருணமாக விளங்கியதால் பல கிழமைக் கணக்கான அரசியல் குத்து வெட்டுக்களுக்கும் சூழ்ச்சிகளுக்குமான களமாக விளங்கியது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த புதன்கிழமை அரசாங்க தரப்பிலான அரசியல் நெருக்கடியை ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) தலைவரான ரவூப் ஹக்கீமை தமது அமைச்சரவையில் இருந்து விலக்கியதன் மூலம் ஒரு உச்சக் கட்டத்துக்கு கொணர்ந்தார். ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசினதும் அதனது முன்னணி அமைப்பான தேசிய ஐக்கிய முன்னணி (NUA) அங்கத்தவர்களும் கட்சியும் தலைவரும் அவமானம் செய்யப்பட்டு விட்டதாகக் கூறி, உடனடியாக சகல அரசாங்க பதவிகளில் இருந்தும் இராஜினாமாச் செய்தனர். அதே நாளன்று ஹக்கீமும் ஸ்ரீ.ல.சு.க.வின் வேறு ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்க் கட்சி ஆசனங்களில் சென்று அமர்ந்து கொண்டனர். அத்தோடு யூ.என்.பி.யுடன் ஒரு உடன்படிக்கையும் செய்து கொண்டுள்ளனர்.

தேசிய ஐக்கிய முன்னணியின் (NUA) தலைவியான பேரியல் அஷ்ரப் தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்து கொண்ட போதிலும் அவர் எதிர்க் கட்சி ஆசனங்களில் சென்று அமர்ந்து கொள்வதில் ஹக்கீமுடன் சேரவில்லை. "அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு இது தருணம் அல்ல" என அவர் கூறிக் கொண்டார். பேரியல் அஷ்ரபும் அவரது ஆதரவாளர்களும் ஆளும் அரசாங்கத்தின் ஒரு பாகமாகத் தொடர்ந்து இருந்து வருவதன் மூலம் ஸ்ரீ.ல.மு.கா.வில் ஒரு பிளவை உண்டுபண்ணியுள்ளனர். ஸ்ரீ.ல.மு.கா. தலைமை கடந்த சனிக்கிழமை திருமதி அஷ்ரபுக்கு ஒரு 72 மணித்தியால காலக்கெடு விதித்தது. அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும் அல்லது ஒழுங்கு நடவடிக்கைக்கு முகம் கொடுக்க வேண்டும் என அவர்கள் குறிப்பிட்டனர்.

குமாரதுங்க ஹக்கீமை அமைச்சரவையில் இருந்து நீக்கிய ஒரு நாளின் பின்னர் வெளியிட்ட அறிக்கையில் அவர் "கூட்டுப் பொறுப்பை" மீறிவிட்டதாகவும் அவரின் "நடவடிக்கைகளும் மனப்பாங்கும் அரசாங்கத்தையும் நாட்டையும் தேசிய ஐக்கியத்தையும் பாதிப்பதாகவும்" குற்றம் சாட்டினார். ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசுக்கும் குமாரதுங்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் (SLFP) இடையேயான உறவுகள் கடந்த பல வாரங்களாக பாதிக்கப்பட்டு வந்தது.

ஏப்பிரல் கடைப்பகுதியில் மாவனெல்லை நகரில் ஒரு அரசாங்க அமைச்சரான மகிபால ஹேரத்தும் அவரது குண்டர்களும் முஸ்லீம்களுக்கு எதிரான இனவாத தாக்குதல்களை தூண்டிவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டதன் பின்னர் இந்தப் பதட்ட நிலை உச்சக் கட்டத்தை அடைந்தது. அன்றில் இருந்து ஹக்கீம் எதிர்க்கட்சியான யூ.என்.பி.யை வெளிவெளியாகச் சந்தித்ததோடு, கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்களுக்கான புதிய ஒரு நிர்வாக மாவட்டத்துக்கான முஸ்லீம் காங்கிரஸ் கோரிக்கைக்காக நெருக்கியும் வந்தார்.

1948ல் இலங்கை சுதந்திரம் கண்டதில் இருந்து ஹக்கீமும் அவரது ஆதரவாளர்களும் அரசாங்கத்தில் இருந்து வெளியேறியது இலங்கையை இரண்டாவது தடவையாக ஒரு சிறுபான்மை அரசாங்கம் என்ற நிலைக்கு தள்ளியுள்ளது. இன்றைய நெருக்கடியில் இருந்து என்ன தலையெடுக்கும் என்பது தெளிவாக இல்லை. பொதுஜன முன்னணி தொடர்ந்தும் பாராளுமன்றத்தில ஒரு பெரும்பான்மை அல்ல. ஆனால் 89 ஆசனங்களை மட்டுமே கொண்டுள்ள யூ.என்.பி. தனது நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்றப் போதிய ஆதரவை வெற்றி கொள்ளுமா என்பது தெளிவாக இல்லை.

யூ.என்.பி.க்கு மூன்று தமிழ் அரசியல் கட்சிகளின் -தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF), தமிழீழ விடுதலை கழகம் (TELO), அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் (ACTC)- ஆதரவு நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு கிடைக்கிறது. இந்தக் கட்சிகளின் ஆதரவுடன் சேர்த்து யூ.என்.பி. மொத்தத்தில் 97 ஆசனங்களையே கொண்டுள்ளது. ஆனால் பொதுஜன முன்னணி இன்னமும் பாராளுமன்றத்தில் 109 ஆசனங்களை கொண்டுள்ளது. இதே சமயம் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவரான ஹக்கீம் எதிர்க் கட்சியுடன் சேர்ந்து கொண்டுள்ளார். ஆனால் அவர் தற்போதைக்கு நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும் சாத்தியத்தை நிராகரித்துள்ளார்.


விடயங்களை மேலும் சிக்கலாக்கும் விதத்தில் அரசாங்கம் மாவனெல்லை வன்முறையில் அமைச்சர் ஹேரத்தின் பாத்திரத்துக்கு எதிராக மற்றொரு நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு முகம் கொடுக்கின்றது. அத்தோடு ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு பெரிதும் பாத்திரமானவரான பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவுக்கு எதிரான எதிர்க்கட்சியின் பதவி நீக்க பிரேரணையும் பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியுள்ளது. ஆனால் ஜனாதிபதி குமாரதுங்க கடந்த வெள்ளிக்கிழமை திடமனதை காட்டும் விதத்தில் "நாம் அரசாங்கத்தைப் பலப்படுத்துவதற்கு இன்னமும் பலமான பதிலீட்டு வழிவகைகளை கொண்டுள்ளோம்" எனக் கூறினார். ஆனால் அவர் இந்த "பதிலீட்டு" விதிமுறைகள் என்ன என்பதை தெளிவுபடுத்தவில்லை.

குமாரதுங்க இரண்டு சிரேஷ்ட ஸ்ரீ.ல.சு.க. (SLFP) தலைவர்களை- நகர அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீரவும் ஸ்ரீ.ல.சு.க. பொதுச் செயலாளர் எஸ்.பி.திசாநாயக்கவும்- இந்த அரசியல் குதிரை வியாபாரத்தில் தமக்கு உதவும் பொருட்டு வெளிநாட்டில் இருந்து திருப்பி அழைத்துள்ளார். அவர் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமை கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுவார்த்தைக்கு அழைத்த போதும் அவர் அதில் கலந்து கொள்ள மறுத்து விட்டார்.

## ஜே.வி.பி.யுடன் பேச்சு

இதன் பெறுபேறாக பாராளுமன்றத்தில் நேர்த்தியான சமமான அங்கத்தவர்களைக் கொண்ட சிங்கள தீவிரவாதிகளான ஜே.வி.பி.யின் -10 எம்.பீ.க்களைக் கொண்டுள்ளது- பாத்திரம் தீர்க்கமாகியுள்ளது. பொதுஜன முன்னணி பொதுச் செயலாளர் டீ.எம்.ஜயரத்ன கடந்த வாரம் ஜே.வி.பி.யை "தற்போதைய அரசியல் நிலைமை பற்றிய ஒரு கலந்துரையாடலுக்கு" அழைத்தார். யூ.என்.பி. தலைவர்களும் ஜே.வி.பி. தலைவர்களைச் சந்தித்த போதும் பேச்சுவார்த்தை முற்றுப் பெறவில்லை.

ஸ்ரீ.ல.சு.க.வும் யூ.என்.பி.யும் அத்தகைய அரசியல் முட்டுக்கட்டை நிலைமைகளுக்கு எதிர்கொண்டுள்ளனர். ஒரு புறத்தில் இரு கட்சிகளும் பெரும் வல்லரசுகளிடம் இருந்தும் பெரும் வர்த்தக நிறுவனங்களிடம் இருந்தும் நாட்டின் நீண்டு வரும் உள்நாட்டு யுத்தத்துக்கு பேச்சுவார்த்தை



ரவுப் ஹக்கீம்

மூலம் தீர்வுகாணும் வழிவகைகளை காணும்படி நெருக்கப்பட்டு வருகின்றன. இந்த யுத்தம் தீவில் ஆழமான பொருளாதார, சமூக நெருக்கடியை உண்டுபண்ணியுள்ளது. மறுபுறத்தில் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு (LTTE) அல்லது ஏனைய சிறுபான்மை கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு (TULF) வழங்கும் எந்தவொரு சலுகைக்கான சமிக்கைகளும் சிங்கள தீவிரவாதிகளிடையே எதிர்ப்பைத் தூண்டுவதோடு ஜே.வி.பி. போன்ற தீவிரவாதக் கட்சிகளின் சொந்த அங்கத்தவர்களிடம் இருந்தும் எதிர்ப்பைத் தூண்டிவிடும்.

யூ.என்.பி. ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் எம்.பீ.க்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டுள்ளதோடு நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு தமிழ் கட்சிகளின் ஆதரவையும் பெற்றுள்ளது என்ற உண்மை ஜே.வி.பி.யினுள் பிளவை உண்டுபண்ணியுள்ளது. கடந்த வார இறுதியில் ஜே.வி.பி. நம்பிக்கையில்லாத் தீர்மானம் சம்பந்தமான அதனது மனோபாவத்தை வெளிப்படுத்தும் விதத்தில் ஒரு நீண்ட மத்திய குழுக் கூட்டத்தை நடாத்தியது. இக்கூட்டம் பற்றி கலந்துரையாடும் விதத்தில் ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறியதாவது: யூ.என்.பி. சிறுபான்மை கட்சிகளுக்கு எந்தளவில் "விட்டுக் கொடுக்கின்றது" என்பதை கணக்கில் எடுக்கின்றது. தீர்மானம் எடுக்கும் விடயம் ஜே.வி.பி.யின் பாராளுமன்றக் கன்னையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மட்டுமே அது அறிவித்தது.

அரச கட்டுப்பாட்டிலான தொடர்புச் சாதனங்கள் மூலம் அரசாங்கம், யூ.என்.பி. விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க ரெலோவுக்கு (TELO) வாக்குறுதி அளித்துள்ளது என்ற விடயத்தை ஜே.வி.பி.யை எட்டுவதற்கான திட்டவட்டமான களமாக்கிக் கொண்டுள்ளது. பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான விடுதலைப் புலிகளின் தொடக்க கோரிக்கையாக விளங்கிய விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்பதை அரசாங்கம் ஏற்க மறுத்தது. இதை வைத்துக் கொண்டு அரசாங்கத் தொடர்பு சாதனங்கள் உடனடியாக யூ.என்.பி. ஒரு "மாபெரும் காட்டிக் கொடுப்பில்" ஈடுபட்டுள்ளதாக கண்டனம் செய்யத் தொடங்கின.

நீதி அமைச்சரும் சந்தர்ப்பவாத லங்கா சமசமாஜக் கட்சியின் (LSSP) தலைவருமான பற்றி வீரக் கோன் கடந்த வாரம் தேசிய தொலைக் காட்சியில் தோன்றி இதே தொனியில் பேச்சு நடாத்தினார். எதிர்க் கட்சிகள் தமது எண்ணிக்கையை பாவித்து அரசாங்கத்தின் நீண்டு வரும் அவசரகாலச் சட்டத்தை தடுக்க முயற்சிக்கலாம் என எச்சரிக்கை செய்தார். இச்சட்டம் மாதா மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றது. எதிர்க்கட்சிகள் அத்தகைய ஒரு நடவடிக்கை எடுக்குமேயானால் அது விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு சமமானதாக விளங்கும் என வீரக்கோன் கூறினார்.

ஜே.வி.பி.யில் தங்கி நிற்கச் செய்யும் குமாரதுங்கவின் எந்த ஒரு முயற்சியும் அதற்கேயுரிய பிரச்சினைகளைக் கொண்டுள்ளது. அந்த ஆதரவுக்கான விலை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை பெரிதும் உக்கிரமான முறையில் முன்னெடுக்க வேண்டி நேரிடும். இது இன்றைய அரசியல் முட்டுக்கட்டை நிலையினால் ஏற்கனவே குழப்பம் அடைந்து போயுள்ள ஆளும் வர்க்கத்தின் கணிசமான பகுதியினரை அன்நியப்பட்டுப் போக வைக்கும்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை அமுல் செய்தல் என்பவற்றுக்கு உத்தரவாதம் அளிக்கும் விதத்தில் ஸ்ரீ.ல.சு.க.-யூ.என்.பி. யைக் கொண்ட ஒரு தேசிய ஐக்கியத்துக்கான அரசாங்கத்தை அமைக்கும்படி பெரும் வர்த்தக நிறுவனங்களில் ஒரு தரப்பினர் நெருக்கி வருகின்றனர். ஐலண்ட் பத்திரிகை கடந்த சனிக்கிழமை எழுதிய ஆசிரியத் தலையங்கத்தில் அத்தகைய ஒரு அரசாங்கத்துக்கான அவசியத்தை அல்லது பெரும் கட்சிகளின் உடன்பாட்டை வலியுறுத்தியது.

ஒரு சிரேஷ்ட அரசாங்க அமைச்சரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அரசாங்கமும் எதிர்க் கட்சியும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டியுள்ளார். "இந்த நாட்டில் கொதிக்கும் பிரச்சினைகள் இருந்து கொண்டுள்ள வேளையில் பெரும் கட்சிகள் ஒன்று கூடி, பிரிந்து நின்று மோதிக் கொள்ளும் பாரம்பரியங்களில் இருந்து ஏன் விடுபட முடியாது" என தொழில்சார் நிபுணர்கள் அடிக்கடி தம்மைக் கேட்பதாக அவர் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை குமாரதுங்கவும் யூ.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு இரண்டு மணித்தியால கலந்துரையாடலை நடாத்தினார். இதற்கான தரகராக பிரதமர் ரத்னசிரி விக்கிரமநாயக்க விளங்கியதோடு வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இதில் பங்குபற்றினார். இந்த உயர்மட்ட பேச்சுவார்த்தைகள் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளையிட்டு யூ.என்.பி.யின் ஆதரவை பெறுவதாக வெளியில் கூறிக் கொள்ளப்பட்டது. இதில் விக்கிரமசிங்க கட்சி அரசியலுக்கு "அப்பாற்பட்டு" உதவி வழங்குவதாக வாக்குறுதி அளித்ததாக கூறப்பட்டது. ஆனால் 'டெயிலி மிறர்' பத்திரிகை அறிக்கையின்படி இங்கு ஒரு "தேசிய அரசாங்கம்" பற்றிய விடயமும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அரசியல் நெருக்கடி மாதக் கணக்கில் இல்லாது போனாலும் வாரக் கணக்கில் இழுபட்டுச் செல்லும். யூ.என்.பி. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைக்க முயற்சித்தாலும் கூட அது அடுத்த மாதம் வரை விவாதிக்கப்பட மாட்டாது. அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டாலும் கூட தெளிவான தீர்வு தென்படுவதாக இல்லை. யூ.என்.பி. தனியாக தெரிவு செய்யப்பட்டவரும் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்டவருமான குமாரதுங்கவுடன் பகைமை கொண்ட விதத்தில் தனது சொந்த அரசாங்கத்தை அமைக்க முயற்சிக்கலாம்.

யூ.என்.பி யினால் ஒரு அரசாங்கத்தை அமைக்க முடியாது போனால் ஜனாதிபதி ஒரு புதிய தேர்தலை நடாத்த தள்ளப்படுவார். ஆனால் பாராளுமன்றத் தேர்தல்கள் கடந்த அக்டோபரிலேயே நடைபெற்றுள்ளதால் குமாரதுங்க பாராளுமன்றத்தை இந்த அக்டோபருக்கு முன்னர் கலைக்க முடியாது. ஒரு தேர்தலுக்கு அடுத்த ஜனவரி வரை காத்திருக்க வேண்டும். அத்தகைய ஒரு அரசியல் பாரிசவாத நிலையை ஆளும் வர்க்கத்தால் சகித்துக் கொள்ள முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நூலகம் தீமூட்டப்பட்டு இரண்டு தசாப்தங்கள்

விலானி பீரிஸ்,
மே 30, 2001

*கொழும்பில் உள்ள அரசியல் ஆட்சியாளர்கள் பல தசாப்த காலங்களாக இலங்கை ஒரு பௌத்த, சிங்கள நாடு எனவும் அங்கு தமிழரும் ஏனைய சிறுபான்மையினர்களும் இரண்டாம் தரமானவர்கள் எனவும் கூறும் பேரினவாத கருத்துக்களுக்கு எண்ணெய் வார்த்து வந்துள்ளனர். ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் வேண்டுமென்றே தூண்டி விட்ட இனவாத உணர்வுகள் தமிழர்களுக்கு எதிரான பாகுபாடான நடவடிக்கைகளை திணிக்கவும், தமிழர் விரோத கலவரங்களை தூண்டவும், 1983ல் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இடம்பெற்று வரும் யுத்தத்தை முன்னெடுக்கவும் அவற்றை இட்டுச் சென்றது.*

ஆப்கானிஸ்தான் தலிபான் ஆட்சியாளர்கள் பாமியனில் உள்ள பிரமாண்டமான புத்தர் சிலையை அழிக்கப் போவதாக அறிவித்து, அப்படியே செய்த போது அந்நடவடிக்கை நியாயமான முறையில் எதிர்ப்பு அலைகளை முழு உலகிலும் தூண்டி விட்டது. எவ்வாறெனினும் இலங்கையின் ஆளும் வட்டாரங்களிலும் உயர் பௌத்த அதிகார தரப்பிலும் இருந்தும் போலி நடிப்புக்களின் வெளிப்பாடுகள் பல தலையெடுத்தன.

கொழும்பில் உள்ள அரசியல் ஆட்சியாளர்கள் பல தசாப்த காலங்களாக இலங்கை ஒரு பௌத்த, சிங்கள நாடு எனவும் அங்கு தமிழரும் ஏனைய சிறுபான்மையினர்களும் இரண்டாம் தரமானவர்கள் எனவும் கூறும் பேரினவாத கருத்துக்களுக்கு எண்ணெய் வார்த்து வந்துள்ளனர். ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் வேண்டுமென்றே தூண்டி விட்ட இனவாத உணர்வுகள் தமிழர்களுக்கு எதிரான பாகுபாடான நடவடிக்கைகளை திணிக்கவும், தமிழர் விரோத கலவரங்களை தூண்டவும், 1983ல் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இடம்பெற்று வரும் யுத்தத்தை முன்னெடுக்கவும் அவற்றை இட்டுச் சென்றது.

தலிபான்கள் பாமியான் புத்தர் சிலையை உடைத்துத் தள்ளிய போது அரசியல் பெரும் புள்ளிகள் அதற்கு எதிரான தமது கசப்பைக் காட்டிக் கொள்ள ஆளுக்காள் முண்டியடித்துக் கொண்டனர். பௌத்த பிக்குகள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு அச்சிலையைத் திரும்பவும் இலங்கையில் கட்டியெழுப்பவும் வாக்குறுதியளித்தனர். சிங்கள சோவினிச கருத்துக்களை அள்ளி வீசுவதில் பிரபல்யமானவரும் பௌத்த குருமாருடன் நெருங்கிய உறவு கொண்டவருமான பிரதமர் ரத்னசிரி விக்கிரமநாயக்க உடனடியாக பாகிஸ்தான் பயணமானதோடு, அந்தச் சிலையைக் காப்பாற்ற என்னவெல்லாம் செய்யலாம் என்பதையிட்டு மந்திராலோசனைகள் நடாத்தினார்.

எவ்வாறெனினும் கொழும்பு வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் தலிபான் கலாச்சார அழிபாடுகளுக்குச் சமாந்தரமான இலங்கைச் சம்பவங்கள் தொடர்பாக மூடுமந்திரத்தைக் கடைப்பிடித்தன. குறிப்பாக 1981ம் ஆண்டின் யாழ்ப்பாண பொது நூலக அழிப்பு பற்றி இங்ஙனம் நடந்து கொண்டன. யாழ். நூலகம் தீவைத்துக் கொழுத்தப்பட்ட இருபது ஆண்டுகளின் பின்னரே அதைப் பதிலீடு செய்வதற்கான வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. பொறியியலாளர்களின் படி இக்கட்டிட நிர்மாண வேலைகள் இவ்வாண்டு டிசம்பரில் பூர்த்தி செய்யப்படும்.

என்னதான் மீள நிர்மாணிக்கப்படினும் 1981ல் வெந்து போன விலைமதிப்பற்ற பல்லாயிரக் கணக்கான தமிழ் நூல்களையும் ஓலைச் சுவடிகளையும் புத்துயிர் பெறச் செய்ய முடியாது. யாழ்ப்பாணம் தமிழ் நாகரீகத்தின் முக்கிய ஒரு மையமாக பல நூற்றாண்டுகளாக இருந்து வந்துள்ளது. யாழ்ப்பாண வைபவமாலை- யாழ்ப்பாண வரலாறு- போன்ற நூல்களை புத்துயிர் பெறச் செய்ய முடியாது. இந்நூலகம் மட்டுமே இன்று கிடைக்கக் கூடியதாக இருந்த இந்நூலின் ஒரே பிரதியை தன்னகத்தே கொண்டிருந்தது.

1841ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்நூலகம் 1950ல் கம்பீரமான கட்டிடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதோடு தென்னாசியாவில் உள்ள தலைசிறந்த நூலகங்களில் ஒன்று என்ற விதத்தில் பல தொகை நூல்களையும் கொண்டிருந்தது. இந்நூலகம் புத்திஜீவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் -சிங்களவர்கள், தமிழர்கள்- இடையே பிரபல்யம் அடைந்ததோடு சாதாரண உழைக்கும் பாட்டாளி மக்களினாலும் பரந்த அளவில் பயன்படுத்தப்பட்டது. நாட்டின் உள்நாட்டு யுத்தம் வெடிப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்நூலகம் அழிக்கப்பட்டமை இந்நாட்டின் தமிழ் சிறுபான்மை மக்களின் கலாச்சார பாரம்பரியங்களுக்கு எதிரான ஒரு வெறியாட்டமாகவும் இனவாத உணர்வுகளைத் திட்டமிட்டுத் தூண்டிவிடுவதாகவும் விளங்கியது.

யூ.என்.பி. அரசாங்கத்தினால் தூண்டிவிடப்பட்ட ஒரு இனவாதக் காடையர் கும்பல் இந்தத் தீவைப்புக்களில் ஈடுபட்டது. அன்றைய நேரில் கண்ட சாட்சியங்களின்படி தெற்கில் இருந்து தருவிக்கப்பட்ட ஒரு கும்பலுடன் சேர்ந்து சீருடை அணிந்த பொலிசாரே இதில் ஈடுபட்டனர். 1981 மே 31ம் திகதி நள்ளிரவில் ட்ரக் வண்டியில் வந்திறங்கிய அவர்கள் நூலகக் கட்டிடத்துக்கு தீமூட்டினர்.

இத் தீவைப்பினால் யாழ்ப்பாணத்தில் பரந்த அளவில் ஆத்திரம் கொதித்ததோடு மூன்று நாள் வன்முறைகளையும் ஏற்படுத்தியது. நான்கு தமிழர்கள் வீடுகளில் இருந்து பொலிசாரால் இழுத்துச் செல்லப்பட்டு, கொல்லப்பட்டனர். சிங்களக் குண்டர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) தலைமை அலுவலகத்துக்கு தீவைத்ததோடு, சுமார் 100 தமிழர்களின் வீடுகளையும் கடைகளையும் சூறையாடியதோடு அவற்றுக்கும் தீவைத்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் வி.யோகேஸ்வரனின் வீடு நாசமாக்கப்பட்டது. தமிழ் தினசரியான ஈழநாடு பத்திரிகை அலுவலகமும் அச்சகமும் சுட்டெரிக்கப்பட்டன. நகரின் சந்திகளில் நிறுவப்பட்டிருந்த தமிழ் கலாச்சார, மத தலைவர்களின் சிலைகளையும் குண்டர்கள் அடித்து உடைத்தனர். இந்த வெறியாட்டம் எல்லாம் ஜூன் 4ம் திகதி மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான (DDC) தேர்தலின் பின்னரே முற்றுப் பெற்றது.



*இனவாதக்காடையர்கும்பலால்தீவைக்கப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கும்யாழ்நூலகத்தின் பிரமாண்டமானகட்டடம்*

மே 31ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் சுட்டுக் கொல்லப்பட்டதே நூலகத்தை தீமூட்டுவதற்கான உடனடிச் சாக்குப் போக்காகியது. இக்கொலைகளுக்கு எவரும் உரிமை கோரியிராததோடு தேர்தலின் பேரில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட யூ.என்.பி. ஆதரவு குண்டர் கும்பல்கள் சிருஷ்டித்த ஒரு ஆத்திரமூட்டல் நிலைமையின் கீழேயே இவை இடம்பெற்றன. பொலிசாரும் காடையர்களும் கூட்டத்தில் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவாளர்களைத் தாக்கியதோடு பின்னர் அன்றிரவு நூலகத்தையும் தீயிட்டுக் கொழுத்தினர்.

## காடைத்தனங்களுக்கான பிரச்சாரம்

இந்த துன்புறுத்தல்களுக்கும் காடைத்தனங்களுக்குமான பிரச்சாரம், வாக்காளர்களை குழப்பியடிக்கவும் ஒரு சில யூ.என்.பி. வேட்பாளர்கள் தன்னும் இத்தேர்தலில் வெற்றி பெறும் விதத்தில் வாக்குப் பெட்டிகளை முறைமுறையாக கையாடுவ[illegible] இடம்பெற்றது. தமிழர்களின் ஜனநாயக உரிமைகளுக்கான கோரிக்கைகளை சாந்தப்படுத்தும் ஒரு முயற்சியாக 1980ல் யூ.என்.பி. மாவட்ட அபிவிருத்தி சபை முறையை ஸ்தாபிதம் செய்தது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மா.அ.ச.வை ஆதரித்த போதிலும் தமிழ் இளைஞர்கள் இதை எதிர்த்தனர். எதிர்ப்பு வளரத் தொடங்கியதும் யூ.என்.பி. அரசாங்கம் தேர்தல் வாக்குகளின் பெறுபேறுகளை ஊர்ஜிதம் செய்யப் பெரிதும் ஈவிரக்கமற்ற விதிமுறைகளில் குதித்தது.

தேர்தல் நடந்து முடியும் வரை அரசாங்கம் தனது குண்டர்கள் யாழ்ப்பாணத்தில் நடாத்திய வெறியாட்டங்கள் வெளியரங்குக்கு வரா வண்ணம் பார்த்துக் கொள்ளும் பொருட்டு செய்தி இருட்டடிப்புக்களைக் கடைப்பிடித்தது. ஜூன் 3ம் திகதி ஜனாதிபதி அலுவலகம் ஒரு அறிக்கையை வெளியிட்டது. அதில் யாழ்ப்பாணம் வரையும் அவசரகால விதிகள் அமுலில் இருப்பதாகவும் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் அறிவித்தது. தனது சொந்த காடைத்தனங்களுக்கு தமிழ் சிறுபான்மையினரை பலிகடாக்கள் ஆக்கும் ஒரு முயற்சியாக பிரதமர் ஆர்.பிரேமதாச பொலிசாரினதும் யூ.என்.பி. வேட்பாளரினதும் மரணங்களை விசாரணை செய்ய ஒரு ஆணைக்குழு நியமனம் செய்யப்படும் என பாராளுமன்றத்தில் அறிவித்தார். ஆனால் யாழ். நூலகம் அழிக்கப்பட்டது சம்பந்தமாக எந்தவிதமான உத்தியோகபூர்வ விசாரணையும் இடம்பெறவில்லை.

அதே நாளன்று இரண்டு சிரேஷ்ட அமைச்சர்கள்- ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் ஒரு நெருங்கிய அரசியல் சகாவான காமினி திசாநாயக்கவும் சிறில் மத்தியூவும்- இன்னும் பல குண்டர்களுடன் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கினர். இவர்களின் நடவடிக்கையை நெறிப்படுத்தவே இவ்விருவரும் வருகை தந்தனர். இவர்கள் இருவரும் வாக்குச் சீட்டுக்களை கையாடுவதில் பிரமாண்டமான அளவில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. சில பகுதிகளில் வாக்காளர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமான வாக்குச் சீட்டுக்கள் இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டது. இவர்கள் யாழ்ப்பாணம் வந்ததும் வராததுமாக தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் ஏ.அமிர்தலிங்கம் கைது செய்யப்பட்டார். தேர்தல் தினத்தன்று பொலிசார் மேலும் மூன்று தலைவர்களை -நவரத்தினம், தர்மரத்தினம், சிவசிதம்பரம்- தடுப்புக் காவலில் வைத்தனர். இந்த நடவடிக்கைகளுக்கு இடையேயும் யூ.என்.பி. 23,302 வாக்குகளை மட்டுமே சுருட்டிக் கொள்ள முடிந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி சகல மாவட்ட அபிவிருத்தி சபை ஆசனங்களையும் வெற்றி கொள்ளும் விதத்தில் 263,269 வாக்குகளைப் பெற்றது.

யூ.என்.பி. அரசாங்கம் முன்னைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டரசாங்கத்தைப் போலவே சிங்கள பேரினவாதத்தைத் தூண்டி விடுவதிலேயே நம்பிக்கை கொண்டிருந்தது. பொருளாதாரத்தின் சீரழிவு காரணமாகவும் திறந்த சந்தையின் பக்கம் திரும்பும் அதனது சீர்திருத்தங்கள் காரணமாகவும் மக்களிடையே கசப்புணர்வு வளர்ச்சி கண்டு வருவதை தவிர்க்க இதைச் செய்ய வேண்டி இருந்தது. அங்ஙனம் செய்வதற்கான அதன் வல்லமைக்கு அது எல்லாவற்றுக்கும் மேலாக லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்பில் சார்ந்து இருந்தது. சமசமாஜக் கட்சி 1964ல் சோசலிச அனைத்துலகவாதம் என்ற தனது முன்நோக்கை கைவிட்டுவிட்டு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஸ்ரீ.ல.சு.க. அரசாங்கத்தில் சேர்ந்து கொண்டது. 1972ல் ஸ்ரீ.ல.சு.க. கூட்டரசாங்கத்தின் ஒரு பாகமாக லங்கா சமசமாஜக் கட்சி அமைச்சரான கொல்வின் ஆர்.டி.சில்வா பௌத்தத்தை அரசாங்க மதமாகவும் தனிச் சிங்கள சட்டத்தை மொழிக் கொள்கையாகவும் அரசியலமைப்பில் திணிப்பதற்கு பொறுப்பாக விளங்கினார். கூட்டரசாங்க கொள்கைகளுக்கு எதிரான பரந்த அளவிலான எதிர்ப்பின் பெறுபேறாக 1977ல் யூ.என்.பி. பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி கண்டது. இதனால் அது தனது இனவாத உணர்வுகளுக்கு மேலும் எண்ணெய் வார்த்தது.

யாழ்ப்பாண பொது நூலகம் தீயிடப்பட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இரண்டு அமைச்சர்களில் ஒருவரான சிறில் மத்தியூ தமிழர் எதிர்ப்பு இனவாத உணர்வுகளுக்கு பேர் போனவர். அவர் 'சிங்களவர்களே! பௌத்தத்தை காப்பாற்ற கிளர்ந்து எழுங்கள்' என்ற நூலின் ஆசிரியராவார். 1979ல் அவர் ஆற்றிய ஒரு தொகை சூடேறிய பேச்சுக்கள் "யார் இந்த புலி" என்ற பிரசுரமாக வெளியிடப்பட்டது. இப்பிரசுரம் ஆளுக்காள் கைமாற்றப்பட்டது.

ஏனைய நூல்கள் கொழும்பு அரசியல்வாதிகளாலும் தொடர்பு சாதனங்களாலும் சிருஷ்டிக்கப்பட்ட அரசியல் சூழ்நிலையின் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன. 1980ல் 'கொடூரமான சதி' (The Diabolical Conspiracy) என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட ஒரு நச்சுத்தனமான பிரசுரம் தமிழ் ஆசிரியர்கள் சிங்கள மாணவர்களுக்கு மேலாக தமிழ் மாணவர்களுக்கு கூடுதலான புள்ளிகளை வழங்குவதாகவும் அதன் மூலம் அவர்களை பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறச் செய்வதாகவும் குற்றம் சாட்டியது. இது "சிங்கள மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்களின் இதயங்களுள் கொதித்துக் கொண்டுள்ள ஒரு பிரச்சினையாகும்" எனக்

19ம்பக்கம்பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச.நா.நி. இலங்கையில் பாரதூரமான சந்தை சீர்திருத்தங்களை செய்யும்படி வலியுறுத்துகின்றது

கே.ரத்னாயக்க ஜூன் 16, 2001

சர்வதேச நாணய நிதியத்தினால் (IMF) இலங்கை தொடர்பாக வெளியிடப்பட்ட ஒரு தொகை பத்திரங்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்குப் பெரிதும் அத்தியாவசியமாகியுள்ள கடன்களின் பேரில் தொழிலாளர் வர்க்கத்துக்கு பேரழிவுகளை உண்டு பண்ணும் ஒரு பாரதூரமான சந்தை மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதை ஊர்ஜிதம் செய்து கொண்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஏற்பாட்டின் கீழ் இலங்கைக்கு கடன் வழங்குவது சம்பந்தமான சகல பத்திரங்களும் இப்போது ச.நா.நி. இணையத் தளத்தில் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இதில் ச.நா.நி. அதிகாரிகளின் மதிப்பீடு, பொறுப்புக்களையும் அமுலாக்கத்தையும் காட்டும் நிகழ்ச்சி நிரல் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் மத்திய வங்கி ஆளுனரும் கையொப்பமிட்ட ஒப்படைக் கடிதமும் (Letter of Intent- LOI) அடங்கும்.

இந்தோனேசியா மற்றும் நாடுகள் சம்பந்தமான இத்தகைய பத்திரங்கள் முன்னர் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் இலங்கை சம்பந்தமான விபரங்கள் வெளியிடப்பட்டது இதுவே முதல் தடவையாகும். இது வெளியிடப்பட்டமை உடனடியாக எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினதும் (UNP) தொடர்புச் சாதனங்களதும் கடும் விமர்சனத்தைக் கொணர்ந்தது. அரசாங்கத்தில் இருந்த போது அனைத்துலக நிதி மூலதனத்தின் கோரிக்கைகளை எப்போதும் அப்படியே அமுல் செய்து வந்த வலதுசாரி யூ.என்.பி. குமாரதுங்க நாட்டை "விற்றுத்தள்ளி" விட்டதாக கண்டனம் செய்தது.

இந்த பத்திரங்கள் அம்பலத்துக்கு வந்ததால் அவமானத்துக்கு முகம் கொடுத்த அரசாங்க கட்சி, எதிர்க் கட்சியினர் கோரிய ஒரு பாராளுமன்ற விவாதத்தை தடுத்தது. ஜூன் 8ம் திகதி பிரதி நிதி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை பூசி மெழுக ஒரு அறிக்கையை வெளியிட்டார். அவர் அத்தகைய உடன்படிக்கைகள் இலங்கையில் அப்படி 'ஒன்றும் புதுமை அல்ல' எனக் கூறினார்.

எவ்வாறெனினும் இந்தப் பத்திரங்கள் நாட்டின் பொருளாதார நெருக்கடியின் ஆழத்தையும் அரசாங்கம் எப்படி பொருளாதார கொள்கை முகாமையியலை சர்வதேச நாணய நிதியத்திடம் அடியோடு கையளித்துவிட்டது என்பதையும் அம்பலப்படுத்திக் கொண்டுள்ளது.

ச.நா.நி. குறிப்பிட்டதாவது: "2000ம் ஆண்டின் கடைப்பகுதியில் இலங்கை ஒரு வெளிநாட்டு செலாவணி நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. செலாவணி வீத மட்டம் ஆட்சிகள் காரணமாக குறைந்த செலாவணி கையிருப்பு வைப்புக்களுக்கும் பெருமளவிலான இறக்குமதி செலவுகளுக்கும் முகம் கொடுத்தது... அது தொடர்ந்தும் நம்பத் தகுந்தது அல்ல. அது கணிசமான அளவு மூலதன பாய்ச்சலின் சாத்தியத்தை குறிப்பிட்டுக் கொண்டது." இதற்கான இரண்டு முக்கிய காரணங்கள் எண்ணெய் விலை உயர்வும் ஆயுதங்களுக்கான பிரமாண்டமான செலவீனமுமாகும். இராணுவம் 950 மில்லியன் டாலர்களை வெளிநாட்டு கை இருப்பாக அல்லது ஆறு வாரங்களுக்கான இறக்குமதி செலவீனங்களை ஈடு செய்யும் நிதியை விட்டு வெளியேறுவதாக விளங்கியது.

வேறு எந்த ஒரு தீர்வும் இல்லாத நிலையில் குமாரதுங்க அரசாங்கம் ச.நா.நி. பக்கம் திரும்பியது. அது 253 மில்லியன் டாலர் கடன்களை வழங்குவதன் பேரில் கொழும்பு பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக தாமதம் செய்யப்பட்ட சந்தை சீர்திருத்தங்களை அமுல் செய்ய வேண்டும் என வலியுறுத்தியது. ச.நா.நி. ஏற்கனவே 131 மில்லியன் டாலர் கடன்களை வழங்கியதோடு எஞ்சியது நான்கு பாகங்களாக வழங்கப்படும் எனவும் தெரிவித்தது. "கிடைக்கக் கூடியதாக உள்ள செயற்பாட்டு விமர்சனத்தினதும் மீளாய்வுகளின் பூர்த்திகளையும் அடிப்படையாகக் கொண்ட நிபந்தனைக்கு உட்பட்டு இருக்கும்" என்றது.

ச.நா.நி. நிபந்தனைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

*ரூபாவை மிதக்கவிடுதல். இது ஏற்கனவே மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நடவடிக்கை கடந்த ஜனவரியில் அமுல் செய்யப்பட்டதோடு ரூபாவை பணமதிப்பிறக்கத்துக்கு இட்டுச் சென்றது. இதனால் விலைவாசி உயர்வுகள் மேலும் அதிகரித்தன. நுகர்வு சுட்டெண் ஏற்னவே 115 புள்ளிகளால் அல்லது ஜனவரியில் இருந்த 2,797 புள்ளிகளை விட 4 சதவீதத்தினால் -மேயில் 2,912 புள்ளிகளாக- அதிகரித்தது.

*அரசாங்க ஊழியர்களுக்கு 2001ம் ஆண்டில் சம்பள உயர்வு கிடையாது. ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்படும் அரசாங்க ஊழியர்களின் சம்பளம் உறைய வைக்கப்படும். அரசாங்க ஓய்வூதிய திட்டம் "அரசாங்க சேவை பெரிதும் தாக்கிப் பிடிக்க கூடிய முறையில்" "சீரமைக்கப்படும்." இந்தச் சகல கோரிக்கைகளும் மார்ச்சில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் அமுல் செய்யப்படும்.

*ஒரு வரையறுக்கப்பட்ட வறுமை நிவாரண திட்டமான சமுர்த்தியின் (சுபீட்சம்) கீழ் ஒரு குடும்பம் மாதத்துக்கு ரூபா.500- ரூபா.700 வரை பெறுகின்றது. ச.நா.நிதியத்தின்படி உலக வங்கி இதை மேலும் வெட்டித் தள்ளுவதற்கான திட்டங்களைக் கொண்டுள்ளது.

*பரந்த அளவிலான மறுசீரமைப்பு அல்லது அரசாங்க நிறுவனங்களின் தனியார்மயமாக்கம் -நிதி அமைச்சு, மத்திய வங்கி- பிரேரிக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் 35 நிறுவனங்கள் இழுத்து மூடப்படும் அல்லது விற்றுத் தள்ளப்படும். இலங்கை துறைமுக அதிகார சபையில் 14000 தொழில்கள் வெட்டிச் சரிக்கப்படும். அரசாங்கம் அரச வங்கிகள் தனியார்மயமாக்கப்படாது என இடைவிடாது கூறிக் கொண்டுள்ள போதிலும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை அரசுடமை இலங்கை வங்கி- நாட்டில் உள்ளவற்றில் பெரும் வங்கி- ஆண்டிறுதியில் கொழும்பு பங்குமுதல் சந்தையில் பட்டியலிடப்படும்.

*தனியார்மயத்தினால் கிடைக்கும் வருமானம் பிரமாண்டமான அளவு அரசாங்க கடன்களைத் திருப்பிச் செலுத்த பயன்படுத்தப்படும். கடந்த ஆண்டு உள்நாட்டு அரசாங்க கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 3 சதவீதமாக இருந்த போதும் அது 8.5 சதவீதமாக அதிகரித்தது. அரசாங்கக் கடன்கள் தற்சமயம் கடன் திருப்பிச் செலுத்துகைகளுக்காக அரசாங்க வருடாந்த வருமானத்தில் 32 சதவீதத்தை நுகர்ந்து கொள்கின்றது. மொத்த அரசாங்க கடன், கடந்த ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 97 சதவீதமாக வளர்ச்சி கண்டது.

## விலை உயர்வுகள்

*நிர்வகிக்கப்பட்ட விலைகளை நீக்குவதற்கு ஒரு கால அட்டவணை வகுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இறுதியில் சகல பெற்றோலியம் பொருட்களின் விலையும் -டீசல் உட்பட- சந்தையினால் நிர்ணயம் செய்யப்படும். கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து டீசல் விலை ஏற்கனவே இரட்டிப்பாகியுள்ளது. உயர்ந்த எரி பொருட்கள் போக்குவரத்துச் செலவின் தாக்கத்தை தவிர்க்க முடியாத விதத்தில் உண்டுபண்ணும். அடிப்படை பண்டங்களின் விலைகள் மீண்டும் அதிகரித்து வருகின்றன. புதிய ஏற்பாடுகளின் கீழ் இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, நீர்வளச் சபை என்பன 7 பில்லியன் ரூபா கடனைத் திருப்பிச் செலுத்தும் பொருட்டு விலைகளை அதிகரிக்கத் தள்ளப்படும். அத்தோடு தொழிற்பாட்டு இலாபம் உழைக்கவும் முயற்சிக்கும்.

*நடைமுறை கணக்கு பற்றாக்குறை கடந்த ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 7 சதவீதத்தில் இருந்து இவ்வாண்டு 3 சதவீதத்துக்கு குறைக்கப்பட வேண்டியுள்ளது. வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டது போல் அரசாங்கம் தனது பற்றாக்குறை கடந்த ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9.7 சதவீதத்தில் இருந்து அடுத்த வருடம் 7.5 சதவீதமாகக் குறைக்கப்படும். இந்த இலக்குகள் கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைச் சேவைகளில் அரசாங்கத்தின் பரந்த அளவிலான வெட்டினை கோடி காட்டி நிற்கின்றன.

"உழைப்பு சந்தையின் இறுக்கத்தை" முடிவுக்கு கொணர மாற்றங்கள் தேவைப்படுகின்றன. இது ஆட்களை வேலைக்கு அமர்த்துவது, வேலை நீக்கம் செய்வதையும் உள்ளடக்கும். "இதனால் நிறுவனங்கள் ஊழியர் மட்டத்தை தீர்மானம் செய்ய அனுமதிக்கப்படும்." சட்டப் புத்தகத்தில் இருந்து நீக்கப்பட உள்ளவற்றில் ஒன்று வேலைநீக்கச் சட்டமாகும் (Termination of Employment Act). இச்சட்டம் எந்த ஒரு வேலை நீக்கத்துக்கும் முன்பதாக ஒரு வேலை கொள்வோர் (Employer) ஊழியரின் அல்லது தொழில் ஆணையாளரின் எழுத்து மூலமான சம்மதத்தை பெற்றுக் கொள்வதை வேண்டி நிற்கின்றது.

*பொது விற்பனை வரி (GST) எதிர்வரும் நவம்பரில் தேசிய பாதுகாப்பு வரியையும் ஒன்றிணைத்துக் கொண்டு, ஏனைய துறைகளுக்கும் விஸ்தரிக்கப்பட உள்ளது. தேசிய பாதுகாப்பு வரி ஆரம்பத்தில் விஸ்தரிக்கப்பட்ட போது அரசாங்கம் இதை ஒரு தற்காலிக நடவடிக்கை எனக் கூறிக் கொண்டது. உள்நாட்டு யுத்தம் தொடரும் வரையே அது நீடிக்கும் என்றது. இப்பொழுது இந்த வரி GST மூலம் ஒரு நிரந்தர அம்சம் ஆக்கப்படவுள்ளது.

"பாதுகாப்பு சம்பந்தப்பட்ட செலவீனங்களின் பேரிலான மேலதிகச் செலவுகளை மேலாய நடவடிக்கைகளால் உடனடியாக ஈடு செய்ய முடியாது போனால்" அரசாங்கம் பாதுகாப்புச் செலவீனங்களைக் குறைக்க முயற்சிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொன்னால் இராணுவத்தின் பேரிலான அதிகரித்த செலவீனம் தன்பாட்டில் அரசாங்க சேவைகளை வெட்ட அல்லது உயர்ந்த வரிகளுக்கு இட்டுச் செல்லும். கடந்த ஆண்டு பாதுகாப்புச் செலவீனம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 5.6 சதவீதத்துக்கும் அதிகமாகின்றது.

*அனைத்துலக மூலதனத்துக்கான மேலாய சலுகையாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மீது இன்னமும் இருந்து கொண்டுள்ள வரையறைகள் டிசம்பர் மாத அளவில் கட்டம் கட்டமாக்கப்படும்.

இலங்கை மத்திய வங்கி அறிக்கை மீது கொழும்பில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் பேசிய இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி நடீம் உல் ஹக் அரசாங்கத்தின் மீதான நெருக்குவாரங்களைத் தொடர்ந்தார்: "சீர்திருத்த நிகழ்ச்சி நிரல் தொடர்ந்தும் அப்படியே இருந்து கொண்டுள்ளது. சகல துறைகளும் வெறும் முன்னேற்றம் இல்லாமல் தொடர்ந்தும் அப்படியே இருந்து கொண்டுள்ளன. அங்கு கவலை இருந்து கொண்டுள்ளது" என்றார்.

இந்த மத்திய வங்கி அறிக்கையும் கூட ச.நா.நி. வேலைத்திட்டத்தை அமுல் செய்வதன் அவசியத்தை மீள வலியுறுத்திக் கொண்டுள்ளது. அரசாங்கத் துறையை மறுசீரமைக்க அழைப்பு விடுத்துள்ளதோடு அரசாங்க விடுமுறைகளின் எண்ணிக்கையை குறைக்கும்படியும், அநேக "தொழில் சீர்திருத்தங்களை" செய்யும் படியும் சம்பள உயர்வை உற்பத்தி திறன் அதிகரிப்புடன் இணைத்துப் போடும்படியும் கேட்டுக் கொண்டுள்ளது.

அரசாங்கம் இலங்கை கடனுக்கு ச.நா.நி. அங்கீகாரம் வழங்கியமையை நாட்டின் பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கை வாக்காகக் காட்ட முயற்சித்துக் கொண்டுள்ளது. ஆனால் நாட்டின் தொடர்ந்து வரும் யுத்தத்தின் மீதும் கொழும்பிலான அரசியல் குழப்பநிலை மீதும் குறைந்த மட்ட வளர்ச்சி மீதும் கண் வைத்துக்கொண்டுள்ள முதலீட்டாளர்களிடம் இருந்து அக்கறை தலைநீட்டுவதாக இல்லை.

மத்திய வங்கியின்படி இவ்வாண்டு வளர்ச்சி வீதம் கடந்த ஆண்டை விட 1.5 சதவீதம் குறைவாக -4.5 சதவீமாக விளங்கும். ஆனால் தனிப்பட்ட ஆய்வாளர்கள் இதைக் காட்டிலும் பெரிதும் குறைவான வளர்ச்சி வீதத்தை முன் அனுமானித்துள்ளனர். பூகோளரீதியிலான பொருளாதார வளர்ச்சியின் வீழ்ச்சி காரணமாக இந்த கவலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் இறுதியில் பங்கு விலைகள் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் இருந்த உச்ச விலையைக் காட்டிலும் 50 சதவீதம் குறைவானதாகும். அன்றில் இருந்து பங்குச் சுட்டெண்கள் 449ல் இருந்து 419 (ஜூன்) ஆக மேலும் வீழ்ச்சி கண்டு போயின. 1999-2000ம் ஆண்டுகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்களே கொழும்பு பங்கு சந்தையில் தேசிய விற்பனையாளர்களாக விளங்கினர். இந்த நிதியாண்டில் நிலைமை முன்னேற்றம் காண்பதற்கான சாத்தியங்கள் இல்லை.

ச.நா.நி. தனது பத்திரங்களில் நாடு பூராவும் உயர்ந்த மட்டத்திலான வறுமையை குறித்துக் கொண்டுள்ளது. யுத்தத்தினால் நாசமான வடக்கு- கிழக்கு மாகாணங்கள் தவிர சில தகவல்கள் சராசரியாக 30 சத வீதத்தினரான சனத்தொகையினர் வறுமையில் வாழ்கின்றனர்.

இந்த மாகாணங்களிலான உயர்ங்க புள்ளி 37 சதவீதமாகும். வடக்கும்-கிழக்கும் இதில் சேர்க்கப்படுமானால் இந்த வீதாசாரம் ச.நா.நி. ஒப்புக் கொள்வது போல் பிரமாண்டமான அளவு அதிகரிக்கும். "யுத்தத்தின் பொருளாதார. சமூக செலவீனங்கள் இலங்கையில் வறுமையின் பிராந்திய மட்டத்திலும் தாக்கத்திலும் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கும்" என்றது.

எவ்வாறெனினும் ச.நா.நி. நடவடிக்கைகள் அமுல் செய்யப்படுமேயானால் பணக்காரர்களுக்கும் வறியவர்களுக்கும இடையேயான வளைகுடா இன்னும் வரிவுபடும். அதிகரித்த விலையினாலும் தொழிலின்மையாலும் தாக்கப்பட்டோர் அடிப்படை சேவைகளை -கல்வி, சுகாதாரம், நலன்புரி- பெற்றுக் கொள்வதை இன்னமும் கஷ்டமாக்கும். அரசாங்கம் ச.நா.நி. வேண்டுகோளின்படி இத்துறைகளில் செலவை வெட்டி சரிப்பதால் இந்நிலைமை ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோசலிச சமத்துவக் கட்சி அதிகாரக் குவிப்பு ஆட்சியை...

1ம் பக்கத் தொடர்ச்சி

கல்வி, சுகாதார சேவைகளை மேலும் வெட்டுதல் தொழிற் சட்டங்களை திருத்தி, தடையின்றி சுரண்டலை ஊர்ஜிதம் செய்தல், விடுமுறை நாட்களை வெட்டுதல் என்பனவும் உள்ளடங்கி உள்ளன. பிரமாண்டமான இராணுவச் செலவீனங்களாலும் அவ்வாறே அதிகரித்துவரும் உலக நெருக்கடி காரணமாக பொருளாதாரம் தாக்குதலுக்கு உள்ளாகும் நிலைமையிலும் ஆளும் கட்சி இந்நிபந்தனைகளை அமுல் செய்வதில் பெரும் வேகம் காட்டுகிறது.

முழு நாட்டையும் பீடித்துக் கொண்டுள்ள பெரும் பிர்ச்சினை யுத்தமாகும். ஆளும் வர்க்கமே யுத்தத்தை உருவாக்கியது. இலங்கையின் பலவீனமான ஆளும் வர்க்கம் இனவாத பாகுபாடுகளை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் சிங்கள, தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்தை இனவாதக் கோட்டின் ஊடாக பிளவுபடுத்துவதன் மூலம் தமது ஆட்சியை கட்டிக் காக்கும் பிற்போக்கு முயற்சியில் ஈடுபட்டது. இந்த இனவாத விதிமுறை 1983ல் யுத்தமாக பரிணாமம் கண்டது, வெளிநாட்டு மூலதனத்துக்கான கதவுகளைத் திறந்து, தொழிலாளர்களதும் ஏழைகளதும் உரிமைகளை தாக்குவதற்கே.

முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினால் பிரமாண்டமான இராணுவச் செலவீனங்களையும் சரி யுத்தத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள அரசியல் ஈடாட்டம் கண்ட நிலைமையையும் சரி இனியும் சகித்துக் கொண்டிருக்க முடியாது போயுள்ளது. மேற்கத்தைய வல்லரசுகளும் இந்தியாவும் முக்கிய இரண்டு அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் மற்றும் தமிழ்க் கட்சிகளுடனும் சமரசத்துக்கு செல்ல வேண்டும் என சுட்டிக் காட்டிக் கொண்டுள்ளன. இந்தத் தீர்வு அவர்களுக்கு அவசியமாய் இருப்பது, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிதம் செய்வதற்கோ அல்லது பொதுமக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள சுமைகளை குறைப்பதற்கோ அல்ல. இலங்கை இந்தியத் துணைக் கண்டத்தை ஆட்டம் காண வைக்கும் ஒரு காரணியாக மாறி, தம்மை அச்சுறுத்தும் ஒரு நிலைமை தோன்றுவதை தவிர்ப்பதற்கேயாகும்.

எவ்வாறெனினும் ஆட்சி செய்யும் அரசாங்கம் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைக்கு திரும்பும் போது அல்லது அவற்றுக்கு சிறிய அளவிலான சலுகைகளை வழங்க முயற்சிக்கும போது சிங்கள இனவாதச் சக்திகள் அதற்கு எதிராக வீதியில் இறங்குகின்றன. இந்த இனவாதச் சக்திகளை பாலூட்டி போஷித்து வளர்த்ததும் முக்கிய இரண்டு முதலாளித்துவ அரசியல் கட்சிகளே. அதனை தமது சமூக அடிப்படையாகக் கொண்டு தொழிலாளர் வர்கக்த்தை நசுக்க எண்ணுகிறார்கள். இந்தச் சக்திகளின் எதிர்ப்புக் காரணமாக இவை உரிய தீர்வுகளை காண முடியாமல் ஆளும் வர்க்கம் அரசியல் ரீதியில் பாரிசவாதத்தினால் பீடிக்கப்பட்ட ஒரு நிலைமை உருவாகியுள்ளது.-

இதன் காரணமாக ஆளும் வர்க்கம் இதிலிருந்து விடுபடுவதற்கன ஒரு வழியை தேடும் அவல நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளது. பெரும் வர்த்தகர்கள் பெரும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து இன்றைய நெருக்கடிக்கு தீர்வுகாண உறுதியான ஒரு ஆட்சி முறையை- (அதாவது அதிகாரம் நிறைந்த ஆட்சி முறையை) உருவாக்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. இப்போது இக்கட்சிகள் இரண்டும் அத்தகைய ஒரு அதிகாரம் நிறைந்த ஆட்சி முறையை உருவாக்க முயற்சிக்கின்றன. ஆளும் அரசாங்கம்(2) எதிர்க் கட்சியுடன் சேர்ந்து(1) அத்தகைய ஒரு ஆட்சியை அமைக்க முயற்சித்தது; இன்னமும் முயற்சித்துக் கொண்டுள்ளது. அத்தகைய ஒரு கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய முடியாது போனால் தாமே நிறைவேற்று ஜனாதிபதி முறையின் அதிகாரங்களைப் பாவித்து அரச இயந்திரத்தில் குந்திக் கொள்ளும் பொனபாட்டிச முறையில் செயற்படும் ஒரு ஆட்சி முறைக்கு மாறிச் செல்ல ஆளும் வர்க்கம் முயற்சிக்கின்றது. ஆளும் கட்சி எதிர்க்கட்சியுடன் சேர்ந்து அமைக்கும் ஆட்சி என்றாலும் சரி அல்லது வேறு விதத்தில் அமைக்கும் பொனபாட்டிச ஆட்சி என்றாலும் சரி -அந்த இரண்டுமே ஜனநாயக எதிர்ப்பு, பொதுஜன உரிமைகளைத் தாக்கும் அதிகாரம் கொண்ட ஆட்சியாகவே விளங்கும். இப்போது தமிழ், சிங்களம் பேசும் உழைக்கும் மக்களின் எதிரில் வளர்ச்சி காண்பது, இந்த ஆபத்துக்களை உள்ளடக்கிய செயற்பாடேயாகும்.

முக்கிய முதலாளித்துவ எதிர்க்கட்சிக்கு உள்ளதும் இதே நிகழ்ச்சித் திட்டமே. ஜனநாயக உரிமைகளைப் பற்றிய அக்கட்சியின் வாய்வீச்சுக்கள் முற்றிலும் மோசடியானவை. இக்கட்சியின் 17 வருட ஆட்சிக்காலம் யுத்தத்தை தொடக்கி வைத்ததனாலும் அவசரகால சட்ட ஆட்சியுடனும் ஜனநாயக உரிமைகளுக்கு முடிவின்றி அடி கொடுப்பதுடனும் இளைஞர்களை துடிக்கத் துடிக்கக் கொலை செய்வதனாலும் நிரம்பிப் போய்க் கிடந்தது. இந்த முதலாளித்துவக் கட்சி ஆட்சியில் தொங்கிக் கொள்வதற்காக பாராளுமன்றத்தை ஒத்திவைத்தது. இன்றுவரை எதிர்க்கட்சி அரசாங்கத்துடன் அதிகாரம் நிறைந்த ஒரு அரசாங்கத்தை திணிக்கும் பேச்சுவார்த்தைகளில் வெளிவெளியாகவும் இரகசியமாகவும் ஈடுபட்டது. இப்போது அது வர்த்தகர்களின் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேறு வழிகளில் அதிகாரம் நிறைந்த ஒரு அரசாங்கத்தை திணிக்க முடியுமா என முயன்று வருகிறது.

இந்நாட்டின் 50 வருட ஆட்சிக் காலமும் இன்றைய அரசியல் குழப்ப நிலையும் எந்த ஒரு ஜனநாயக பிரச்சினைக்கோ அல்லது சமூகப் பிரச்சினைக்கோ தீர்வு காண முடியாத இலங்கையின் ஆளும் வர்க்கத்தின் வங்குரோத்து பிற்போக்குத் தன்மையை சுட்டிக்காட்டுகின்றது. பெரும் வர்த்தகர்களின் கட்சிகள் இரண்டும், இரண்டு தடவைகள் அரசியலமைப்பை மாற்றின. ஜனநாயக உரிமைகளை வழங்குவதாகக் கூறிக் கொண்டே இதைச் செய்தன. நடந்ததோ பெரிதும் அடக்குமுறைகளும் இனவாதப் பிளவுகளும் கொண்ட அழிவுகளுக்குள் பொதுமக்களை தள்ளும் அரசியலமைப்பு சட்டத் தயாரிப்பே.

கடந்த ஆண்டில் இன்றைய ஆட்சியாளர்கள் எதிர்க் கட்சியின் ஆதரவோடு யுத்தத்துக்கு தீர்வு காண்பதாகக் கூறிக் கொண்டு தயாரித்த அரசியலமைப்பு சட்ட யோசனைகள் பேரினவாதிகளின் இரத்தம் தோய்ந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கு கதவுகளை அகலத் திறந்துவிட்டதோடு இனவாத பிளவுகளை மேலும் மேலும் ஆழமாக்கச் செய்தனர். தற்சமயம் பிரேரிக்கும் உத்தேச அரசியலமைப்புச் சட்ட யோசனைகள் அதைக் காட்டிலும் பிற்போக்கானவை என்பதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. அது பௌத்த குருமாரின் யோசனைகளுக்கு இணங்கவே தயாரிக்கப்படும் என்ற உத்தரவாதத்தை ஆளும் கட்சி வழங்கியுள்ளது.

தமிழ் மக்கள் யுத்தத்தின் அழிவுகள் நிறைந்த நிலைமைகளுக்கிடையே உயிர் வாழ்ந்து கொண்டுள்ளனர். இரண்டு இனக் குழுக்களும் யுத்தச் செலவீனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதனால் வாழ்க்கை நிலைமைகளும் நலன்புரி சேவைகளும அடியுண்டு போய், நசுங்குண்டு கிடப்பதோடு மட்டுமன்றி, அவர்கள் பல்லாயிரக் கணக்கில் இறந்தும் காயமடைந்தும் போயுள்ளனர். இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாகி பிரமாண்டமான மனித நஷ்டஈட்டின் சுமையில் உயிர்வாழ்ந்து கொண்டுள்ளனர். பெரும்பான்மையான மக்கள் உயிர்வாழ்வது தினசரி வருமானமாக ரூபா.100.00 க்கும் குறைவான வருமானம் பேணும் வறுமையில் தலைமைழ்கிக் கொண்டாகும். இளைஞர்கள் யுத்தத்தின் தோட்டாக்களாக மாறுவதைத் தவிர வேறு எதிர்காலம் இந்த சமூக அமைப்பினுள் கிடையாது. பெரும் வர்த்தகர்களுக்கு கிராம்ப் புறங்க்ளைத் திறந்து விடுவதன் மூலம் விவசாயிகள் தமது வாழ்க்கை வழி நாசமாகிப் போகும் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

ஆளும் கூட்டரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டுள்ள பழைய இடதுசாரிக் கட்சிகள்(3) ஆட்சியாளர்களின் சகல பிற்போக்கு சட்டங்களுக்கும் ஜனநாயக உரிமைகளுக்கும், வாழ்க்கை உரிமைகளுக்கும் தாக்குதல் தொடுப்பதற்கும் பங்காளிகளாக நின்று கொண்டுள்ளனர். கருத்துக் கணிப்புக்கு ஆதரவளிப்பதன் மூலம் அவர்கள் செய்வது, ஆளும் வர்க்கத்தின் அதிகாரம் நிறைந்த ஆட்சிக்கு வழி திறக்கும் தாக்குதலைப் பலப்படுத்துவதேயாகும். அவர்கள் அவசரகாலச் சட்டத்தை மீண்டும் விதிக்கும்படி கேட்கின்றனர். சமீபத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தை அவர்கள் நியாயப்படுத்துகின்றனர்.

தம்மை சோசலிஸ்டுகள் எனக் கூறிக் கொண்டு சில காலம் தீவிரவாத முகமூடி அணிந்து கொண்ட சிங்கள இனவாத முன்னணியினர்(4) இப்போது இந்த அரசியல் நெருக்கடியின் மத்தியில் ஆளும் கட்சியுடனும் எதிர்க் கட்சியுடனும் பெரும் வர்த்தகர்கள், பொலிசாருடனும் இரகசியமாகவும் வெளிவெளியாகவும் பேச்சுவார்த்தை நடாத்திக் கொண்டு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த காலத்தில் இந்த அமைப்புக்கு ஆளும் கட்சிகளுடன் கூடி தொழிற்பட்ட, பாசிச தாக்குதல்கள் நடாத்திய இத்தகைய பிற்போக்கு வரலாறு இருந்தது. இக்கட்சி, பெரும் முதலாளி வர்க்கத்துக்கு மீண்டும் சேவையாற்ற தாம் தயாராகி உள்ளதை காட்டிக் கொண்டுள்ளது. இந்த அமைப்பு யுத்தத்தை உக்கிரமாக்குவதற்கு ஆதரவு காட்டியுள்ளனர். இப்போது இந்த அமைப்பு ஏனைய தீவிரவாத சிங்கள அமைப்புக்களுடன் சேர்ந்து கருத்துக் கணிப்பை இனவாதத்தை தூண்டிவிடுவதற்கான ஒரு மேடையாக்கிக் கொண்டுள்ளனர்.

பெரிதும் கடைகெட்ட நடவடிக்கையில் இறங்கியிருப்போர் பப்லோவாத குழுக்கள் உட்பட்ட மாஜி.தீவிரவாதிகள் ஆவர். இவர்களது முக்கிய கட்சி(5) ஆளும் கட்சியுடன் அணிதிரண்டு கருத்துக் கணிப்பை, பொதுமக்களின் அரசியலமைப்பு நிர்ணய சபைக்கு ஊடாக "இடதுசாரி சமாதான அரசாங்கத்துக்கு" வழியமைக்க தருணமாகும் எனக் கூறிக் கொள்கின்றனர். கடந்த காலத்தில் பெரும் வர்த்தகர்களின் கட்சிகள் இரண்டுக்கும் முண்டு கொடுத்த வரலாற்றைக் கொண்ட இக்கட்சி கருத்துக் கணிப்பு யோசனைக்கு 'ஆம்' என வாக்களித்து அரசாங்கத்துடன் பொதுமக்களைப் பிணைத்துப் போட தோள் கொடுத்துக் கொண்டுள்ளனர். இதிலிருந்து பிரிந்த ஏனைய குழு(6) முக்கிய முதலாளித்துவ எதிர்க் கட்சியுடன் சேர்ந்து கொண்டுள்ளது. இந்தக் குழுக்கள் இரண்டும் இரு தரப்பில இருந்து ஆளும் வர்க்கத்துக்கு ஜனநாயக சோடனை போடுவதன் மூலம் தொழிலாளர்களை பொறியில் மாட்டி வைக்க தொழிற்படுகின்றனர். இந்தச் சகல தீவிரவாத அமைப்புகளும் 1994ல் இந்த அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர முண்டு கொடுத்தவை. இவை படுகொடூரமான யுத்தத்துக்கும் பொதுமக்கள் மீது தொடுக்கப்படும் சகல தாக்குதல்களுக்கும் பொறுப்புச் சொல்லியாக வேண்டும். ஆரம்பம் முதலே அரசாங்கத்தின் தாக்குதல்களையிட்டு எச்சரிக்கை செய்ததோடு சுயாதீனமான தொழிலாளர் வர்க்க பதிலீட்டிற்காக போராடுமாறு கூறியது சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே.

இன்றைய கடும் அரசியல் நெருக்கடியினுள் கையாலாகாத்தனமான முறையில் பிற்போக்கு ஆளும் வர்க்கமும், அவர்களின் எடுபிடிகளும் தமது தீர்வுகளைத் திணிக்க இடமளித்து, தொழிலாளர் வர்க்கம் ஒரு புறத்தில் ஒதுங்கிக் கொண்டிருக்க முடியாது. இந்தப் பிற்போக்காளர்களின் தீர்வு தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் உயிராபத்தானது. தொழிலாளர் வர்க்கம் முதலாளித்துவக் கட்சிகளில் இருந்து சுயாதீனமான முறையில் தமது தீர்வுகளைக் காண ஒரு பாதை இருக்க வேண்டும். கருத்துக் கணிப்பு அதிகாரம் குவிந்த ஆட்சிமுறைக்கு மாறிச் செல்லும் ஒரு பம்மாத்து மட்டுமே.

சோசலிச சமத்துவக் கட்சி கருத்துக் கணிப்பில் கேட்கப்பட்டுளள் கேள்விக்கு "இல்லை" என குறிப்பிட வேண்டும் என உழைக்கும் மக்களுக்கு கூறுகின்றது. தொழிலாளர் வர்க்கம் தமிழ், சிங்களம் பேசும் மக்களை அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்றுதிரட்ட தொழிற்பட வேண்டும். இந்த முன்நோக்கின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கம் சகல தீர்க்கப்படாத ஜனநாயக பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டு உழைக்கும் மக்களின் அப்பட்டமானதும் நேரடியானதுமான வாக்கின் மூலம் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் அரசியலமைப்பு நிர்ணய சபையை கூட்ட முன்நிற்க வேண்டும் என நாம் கூறுகின்றோம். இனவாரி, மதவாரி பாகுபாடுகளை ஒழித்தல், அரச மதமாக பௌத்த மதத்தை கொண்டிருப்பதையும் சிங்கள மொழிக்கு வழங்கப்பட்டுளள் அரச சிறப்புரிமை நிலைமைகளையும் ஒழித்தல், அடக்குமுறைச் சட்டங்களை அகற்றுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்வது அத்தகைய ஒரு அரசியலமைப்பு மூலம் இடம்பெறும்.

அரசாங்கம் சைகை காட்டியுள்ள அரசியலமைப்பு நிர்ணய சபை என்பது மீண்டும் ஒரு தடவை மக்களின் முதுகுகளுக்கு புறத்தே ஆளும் வர்க்கத்தின் அடக்குமுறை நிழலை பலப்படுத்துவதாகும்.

யுத்தத்துக்கு ஒரு முற்போக்கு தீர்வு வழங்கி, சமாதானத்தை உதயமாகச் செய்வது என்பது யுத்தத்தை சிருஷ்டித்த ஆளும் வர்க்கத்தினால் அல்லாது ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவை அணிதிரட்டிக் கொண்ட தொழிலாளர் வர்க்கத்தினாலேயே முடியும். வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தை நிபந்தனை இல்லாமல் முழுமனே வாபஸ்பெறவும் யுத்தத்துக்கு ஒரு ஆளோ அல்லது ஒரு சதமோ கொடுக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டின் பேரிலும் சோசலிச சமத்துவக் கட்சி நின்றுவருகின்றது. ஏகாதிபத்தியவாதிகளின் பக்கபலத்துடன் தீர்வுகாண பார்த்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத பிளவுமிக்க வேலைத்திட்டத்தை நாம் எதிர்க்கின்றோம்.

சிங்களம், தமிழ் பேசும் தொழிலாளர் வர்க்கத்தின் இத்தகைய ஒரு ஐக்கியத்தின் மூலம் பிரமாண்டமான பலம் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. இதன் மூலம் இலாபத்தை எதிர்பார்த்து செயற்படும் பெரும் வர்த்தகர்களின் தாக்குதல்களுக்கு எதிராகப் போராடவும் அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் -சிறப்பாக இந்தியத் துணைக்கண்ட தொழிலாளர்களின் ஆதரவுடன் உழைக்கும் மக்களின் அவசியங்களுக்கு ஏற்ற முறையில் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்தும் ஒரு முறையை ஆரம்பிக்கப் போராடவும் சந்தர்ப்பம் கிட்டும். இது உயிர்ப் பிடிப்பான முறையில் சோசலிச சமத்துவக் கட்சியை இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக இலங்கை-ஈழம் சோசலிச குடியரசை ஸ்தாபிக்கும் முன்நோக்கை முன்வைக்கின்றது.

முதலாளித்துவ தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் அவசியங்களுக்காக ட்ரொட்ஸ்கிச தலைமையின்(7) கீழ் போராடுவதற்கு சுயாதீனமாக தலைமை தாங்கும் வரலாறு 1940பதுகளிலும் 1950பதுகளிலும் இலங்கை தொழிலாளர் வர்க்கத்துக்கு இருந்து வந்தது. பின்னர் குழிபறிந்து போன இத்தலைமை 1964ல் முதலாளித்துவ அரசாங்கத்தில் சேர்ந்து, தொழிலாளர் வர்க்க ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தை காட்டிக் கொடுத்தது. ஆளும் வர்க்கம் சுதந்திரமாக தாக்குதல் தொடுக்க வாய்ப்பு கிடைத்தது இந்தத் துரோகத்தினாலேயேயாகும். இந்த துரோகங்களை தாண்டி தொழிலாளர் வர்க்கம் தமது வரலாற்று சம்பிரதாயங்களுக்கு மீளப் புத்துயிரூட்ட வேண்டும்.

சோசலிச சமத்துவ கட்சி நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கைப் பகுதியாகும். அது இந்த சுயாதீனமான தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்தை முன்வைக்கின்றது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஆளுமை நிறைந்த மார்க்சிச குரலான உலக சோசலிச வலைத் தளம் (WSWS) மூலம் சோசலிச சமத்துவக் கட்சி அனைத்துலகவாத விதிமுறைகளுக்கு போராட ஒன்றிணைந்து நிற்கிறது. இப்போராட்டம் மார்க்சிச கலாச்சாரத்துக்கு மீண்டும் புனர்வாழ்வளிக்க செய்வதாகும். இந்த முன்நோக்குடன் இணைந்து கொள்ளும்படி உழைக்கும் மக்கள், இளைஞர்கள், புத்திஜீவிகளை வேண்டுகின்றோம்.

## குறிப்புகள்:

1. இன்றைய முக்கிய எதிர்க்கட்சி ஐக்கிய தேசியக் கட்சி (UNP) 1991ல் ஐ.தே.க. ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாச தமக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டு பிரேரணையை தடுப்பதற்காக பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

2 .ஆளும் கட்சி பொதுஜன முன்னணி கூட்டரசாங்கம். இதனது பெரும் பங்காளி ஜனாதிபதி குமாரதுங்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) இது லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (CPSL) இன்னும் பல தமிழ் கட்சிகள், மக்கள் ஐக்கிய முன்னணி (MEP).

3. லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸட் கட்சி

4. ஜனதா விமுக்தி பெரமுன (JVP) 1960பதுகளில் சிங்கள பேரினவாதத்தினதும் மாஓவாதத்தினதும் கலவையாக அமைக்கப்பட்டது. 1980பதுகளின் கடைப்பகுதியில் இது இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஒரு சமாதானத் தீர்வை திணிக்க முயற்சித்த இந்திய படைகளை -இந்திய-இலங்கை உடன்படிக்கையை எதிர்த்தது. இதனை எதிர்த்த தொழிலாளர், தொழிற்சங்கத் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்களை படுகொலை செய்தது. ஜே.வி.பி. 1994ல் பாராளுமன்றவாத அரசியலினுள் நுழைந்தது.

5. நவசமசமாஜக் கட்சி (NSSP)

6. ஐக்கிய சோசலிசக் கட்சி -மாஜி. ந.ச.ச.க. தலைவர் வாசுதேவ நாணயக்காரவுடன் நவசமசமாஜக் கட்சியில் இருந்து பிளவுபட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் யுத்தத்தால் சின்னாபின்னமான வடக்கில் எஞ்சியுள்ள பக்டரிகளையும் தனியார்மயமாக்குகிறது

எஸ்.இராசேந்திரன்
மே 3, 2001

இலங்கை அரசாங்கம் யுத்தத்தில் சின்னாபின்னமான வட மாகாணத்தில் எஞ்சிக் கிடக்கும் அரசுடமை நிறுவனங்களான இரண்டு சீநோர் பக்டரிகளை நோர்த் சீ (North Sea Ltd) என்ற தனியார் கம்பனிக்கு விற்றுத்தள்ள ஆயத்தமாகி வருவதாக ஏப்ரல் 11ம் திகதி அறிவித்துள்ளது. இந்த தனியார்மயமாக்கம் ஒரு நீண்டகால போக்கின் பெறுபேறாகும். இக்காலப்பகுதியில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தொழிற்சங்கங்களின் உதவியோடு தொழிலாளர்களின் எதிர்ப்புக்களுக்கு குழிபறித்ததோடு, தொழில்களை வெட்டி பக்டரிகளையும் இழுத்து மூடின.

வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (EPDP) தலைவருமான டக்ளஸ் தேவானந்தா இந்த அறிவித்தலை விடுத்து இருந்தார். பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக இன்று இடம்பெறும் யுத்தத்தின் மத்தியில் அவரது ஏனைய "புனர்வாழ்வு" நடவடிக்கைகளுள் பரந்தன் இரசாயன பக்டரி. ஆனையிறவு உப்பளங்களை தனியார் கம்பனிகளிடம் கையளிப்பதும் அடங்கும்.

இந்த நிறுவனங்களுள் எதுவும் மீண்டும் திறக்குமா இல்லையா என்பது இந்த தனியார் கம்பனிகள் இலாபம் சம்பாதிக்குமா என்பதிலேயே தங்கியுள்ளது. அங்கு சந்தேகத்துக்கு இடமற்ற விதத்தில் சில தொழில்களும் மோசமான சேவை நிலைமைகளுமே இருந்து கொண்டுள்ளன. மேலும் இரசாயன பக்டரியும், உப்பு உற்பத்தி வளங்களும் ஆனையிறவுக்குச் சமீபமாகவே உள்ளன. கடந்த ஆண்டில் இராணுவம் இதைப் பறிகொடுத்ததன் பின்னர் இது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வந்தது.

இந்தப் பக்டரிகளின் தனியார்மயம், சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் வலியுறுத்தி வரும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும். பிரமாண்டமான இராணுவச் செலவீனங்கள், எண்ணெய் விலைகளின் அதிகரிப்பின் காரணமாகப் பெரும் வரவு செலவுத்திட்ட, நிதி நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள அரசாங்கம் இப்போது சென்மதி நிலுவை நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு கடன்களை பெருமளவில் பெற முயற்சிக்கின்றது.

இரண்டு சீ-நோர் பக்டரிகளும் இராணுவத்தினால் காரைநகரிலும் (பெரும் கடற்படைத் தளம்) குருநகரிலும் "உயர் பாதுகாப்பு வலயம்" ஆகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பகுதிகளில் அமைந்துள்ளது. யாழ்ப்பாண நகரின் வெளிப்புறத்தில் உள்ள குருநகர் பக்டரி மீன்வலை உற்பத்தியில் ஈடுபட்டு வந்த அதே சமயம் காரைநகர் பக்டரி பைபர் கிளாஸ் (Fibre Glass) மீன்பிடி படகு உற்பத்தியில் ஈடுபட்டு இருந்தது. 1960பதுகளிலும் 1970பதுகளிலும் நோர்வே அமைப்பான 'நொராட்டின்' (NORAD) நிதி உதவியோடு இவை அமைக்கப்பட்டன.

1983ல் யுத்தம் வெடிப்பதற்கு முன்னர் சீ-நோர் பக்டரியில் சுமார் 800 தொழிலாளர் வேலைக்கு அமர்த்தப்பட்டு இருந்தார்கள். ஆனால் இந்த மோதுதல் படிப்படியாக உக்கிரம் கண்டதைத் தொடர்ந்து நிர்வாகம் உற்பத்தியை வெட்டியதோடு, ஊழியர்களில் பெரும்பாலானோரை வேலை நீக்கமும் செய்தது. இதில் கணிசமானவர்கள் அமைய ஊழியர்களாக விளங்கினர். 1991ல் யூ.என்.பி. அரசாங்கம் இப்பக்டரிகளை இழுத்து மூடும் தனது திட்டத்தை அறிவித்த போது ஊழியப் படையின் எண்ணிக்கை சுமார் 100 ஆக வெட்டிக் குறைக்கப்பட்டது.

பக்டரி நிர்வாகம் ஒரு சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டத்தின் அடிப்படையில் ஒரு சிறிய தொகையை -ரூபா 20,000- நஷ்ட ஈடாக வழங்கி, எஞ்சிய தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ய ஆயத்தமாகியது. இதற்கு பாலா தம்பு தலைமையிலான இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமும் (CMU) கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான இலங்கை பொறியியல் தொழிலாளர் சங்கமும் ஆதரவு வழங்கின.

யுத்தத்தின் காரணமாக பக்டரி இழுத்து மூடப்பட்ட போது தொழிலாளர்களில் பலரும் நஷ்ட ஈட்டுப் பணத்தை ஏற்றுக் கொண்டனர். ஆனால் சீ.எம்.யூ. வின் 26 அங்கத்தவர்கள் தலைமையின் ஆலோசனையை நிராகரித்து, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் (இன்றைய சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடி) பக்கம் திரும்பினர். தொழில் உரிமையைக் காக்கும் போராட்டத்தைத் தொடுக்க உதவி கோரினர். யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வந்த ஒரு தொழிற்சங்கத் தூதுக் குழு சீ.எம்.யூ. தலைமைப் பீடத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. தொழில் உரிமை மீதான தாக்குதல், யுத்தம், சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பொருளாதார மறுசீரமைப்பு போன்ற பரந்த அளவிலான பிரச்சினைகளுடன் பிணைந்த விடயம் என அவர்கள் சுட்டிக் காட்டினர்.

பாலா தம்புவும் சீ.எம்.யூ. தலைமைப் பீடமும் தொழில்களைக் காக்கும் எந்த ஒரு போராட்டத்திலும் ஈடுபடுவதை எதிர்க்கின்றது. ஏனெனில் அப்போராட்டம் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளையும் தமிழ் சிறுபான்மையினரின் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் காட்டுமிராண்டி யுத்தத்திற்கும் எதிராக அதைச் சவால் செய்வதாகவும் அது அமைந்து விடலாம் என்பதே. யுத்தம் காரணமாக தொழிலாளர்கள் அப்பிராந்தியத்தில் இருந்து வெளியேறத் தள்ளப்பட்டனர்.

இறுதியாக 1998ல் சீ.எம்.யூ. 26 தொழிலாளர்களுக்கும் 1991ல் இருந்து 1998வரைக்கான காலப் பகுதிக்கு அரைமாதச் சம்பளப் பாக்கியும் மீள சேவையில் அமர்த்தப்படும் வரை அரைச்சம்பளமும் செலுத்தும் ஒரு உடன்படிக்கையை நிர்வாகத்துடன் முடைந்து கொண்டது. இந்த 26 பேரில் 8 பேர் முழுச் சம்பளத்தில் மீளச் சேவைக்கு அமர்த்தப் பட்டுள்ளனர்.

இரண்டு வருடங்களின் பின்னர் அரசாங்கம் 'வடக்கை புனர்நிர்மாணம் செய்யும்" பேரில் பக்டரியை மீளத் திறக்காமல் அதை விற்றுத் தள்ளியுள்ளது. அமைச்சர் தேவானந்தா இந்த 26 ஊழியர்களது தலைவிதியைப் பற்றி எதுவும் கூறவில்லை. இவர்கள் சகலரும் அவர்களது தொழில்களை இழக்கும் பெரும் சாத்தியம் இருந்து கொண்டுள்ளது.

சீ.எம்.யூ. அதனது மூல மனப்பாங்குக்கு இணங்க அரசாங்கத் தீர்மானத்தையும் தொழில் இழப்பையும் ஏற்கனவே ஏற்றுக் கொண்டுள்ளது. ஒரு சீ-நோர் சீ.எம்.யூ. அங்கத்தவர் சங்கச் செயலாளர் ஜெகநாதனிடம் இதைப் பற்றிக் கேட்டபோது: "சீ.எம்.யூ. தனியார்மயத்தை நிறுத்த எதுவும் செய்ய முடியாது. இது அரசாங்கத்தின் ஒரு அரசியல் தீர்மானம். அத்தோடு ஒரு அரசியல் விடயமாகும்." அவர் நஷ்ட ஈட்டுக்காகப் பேரம் பேசத் தயாராக இருப்பதாக கூறிக் கொண்டார்.

எந்த ஒரு தொழிற்சங்க நடவடிக்கையும் பல தொழிலாளர்களையும் சிறப்பாக வழக்கத்துக்கு மாறாகப் பாதிக்கப் போவதில்லை. கடந்த இரண்டு தசாப்த காலங்களாக தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை கட்டிக் காக்க மறுத்தமையின் பேரில் பிரபல்யம் அடைந்து விட்டன. அவை பூகோள ரீதியில் அலையும் மூலதனத்தின் கட்டளைகளை தொழிலாளர் வர்க்கத்தின் மீது திணிப்பதில் அரசாங்கங்களுடனும் கூட்டுத்தாபனங்களுடனும் கலந்துரையாடுகின்றன.

இந்த விடயம் சீரழிவின் பரிமாணத்தை எடுத்துக் காட்டிக் கொண்டுள்ளது. சீ.எம்.யூ. 1928ல் வர்த்தகத் துறையில் ஒரு வெண்ணிற ஆடை தரித்த ஊழியர் தொழிற்சங்கமாக ஸ்தாபிக்கப்பட்டது. 1948ல் பெப்பிரவரியில் பாலா தம்பு இதனது பொதுச் செயலாளரான பின்பு இது லங்கா சமசமாஜக் கட்சியின் (LSSP) செல்வாக்கின் கீழ் வந்தது. அப்போது அக்கட்சி ட்ரொட்ஸ்கிசக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. 1950பதுகளிலும் 1960பதுகளிலும் தம்பு அன்று ஆட்சியில் இருந்த அரசாங்கங்களின் அரசியல் தீர்மானங்களை போர்க்குணம் மிக்க முறையில் சவால் செய்தமைக்கு புகழ் பெற்று விளங்கினார். 1963ல் அவர் கொழும்புத் துறைமுக வேலைநிறுத்தத்துக்கு தலைமை தாங்கியதோடு அது ஒரு நாடளாவிய ரீதியிலான பொது வேலை நிறுத்தமாக பரந்துபட்டது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் அவசரகால சட்ட அதிகாரங்களை பிறப்பித்த போது அதை மீறிச் செயற்பட்டது.

1964ல் லங்கா சமசமாஜக் கட்சி தனது சோசலிசக் கொள்கைகளைக் கைவிட்டுவிட்டு பண்டாரநாயக்க அரசாங்கத்தில் சேர்ந்த போது, தம்பு சமசமாஜக் கட்சியில் இருந்து விலகினார். ஆனால் அவர் லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக் கொடுப்பில் இருந்து அவசியமான படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளத் தவறினார். இதனால் ஒரு தேசியவாத பார்வையையே அரவணைத்துக் கொண்டார். தம்பு இலங்கையின் உள்ளும் அனைத்துலகிலும் பல்வேறு தீவிரவாதக் குழுக்களாலும் ஒரு போராளியாகவும் ஒரு சோசலிஸ்ட் ஆகவும் அது மட்டுமன்றி ஒரு ட்ரொட்ஸ்கிஸ்ட் ஆகவும் கூட பொறுக்கி எடுக்கப்பட்டு வந்துள்ளார்.

இன்று தனது 79 வயதிலும் கூட தம்பு சீ.எம்.யூ.வின் பொதுச் செயலாளராக விளங்குவதோடு அரசாங்கத்துடனும், முதலாளிமார்களுடனுமான பெரும் பேரம் பேசல்களிலும் உஜாராகவும் பங்கு கொள்கின்றார். ஆனால் சீ-நோர் தனியார்மயமாக்கம் தொடர்பான அதன் மனப்பாங்கு காட்டிக் கொண்டுள்ளது போல் சீ.எம்.யூ. தலைமையில் ஒரு துளி புரட்சிகர சோசலிசமும் எஞ்சியில்லை. அது இலங்கை முதலாளித்துவத்தினதும் அரசாங்கத்தினதும் நலன்களுக்கு முற்றிலும் அடிபணிந்து போயுள்ளது.

இதனது நேரடி விளைவுகளை தாங்கிக் கொள்ளப் போகிறவர்கள் சீ-நோரின் 26 தொழிலாளர்கள் மட்டுமல்ல. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் வலியுறுத்தலின் பேரில் பாரதூரமான விளைவுகளைக் கொண்ட மறுசீரமைப்பு திட்டத்தை திணிக்கத் தயாராகி வருகின்றது. இதனால் சீ.எம்.யூ. வின் முக்கிய தளங்களில் ஒன்றான கொழும்புத் துறைமுகத்தில் இருந்து சுமார் 14000 தொழில்கள் ஒழிக்கப்படும். காலம் செல்லச் செல்ல சினம் கொண்ட அங்கத்தவர்களைச் சமாளிக்க சீ.எம்.யூ. தலைமை போர்க்குணம் கொண்ட வாய்வீச்சுக்களில் ஈடுபட வாய்ப்பு உண்டு என ஒருவர் அனுமானிக்க முடியும். ஆனால் அதை வழிப்படுத்தும் கொள்கைகள் ஒன்றாகவே விளங்கும்: "இது அரசாங்கத்தின் ஒரு அரசியல் தீர்மானம். இதைத் தடுக்க நாம் எதுவும் செய்ய முடியாது."

சீ.நோரில் சோசலிச சமத்துவக் கட்சியின் உதவியுடன் 26 தொழிலாளர்களும் தமது தொழில் உரிமை காக்கும் போராட்டத்தில் ஈடுபடுவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டுள்ளனர்.

## ஜனாதிபதி நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பைத்...

4ம் பக்கத் தொடர்ச்சி

கிடையாது என்பது பளிச்சிட்டு தெரிகிறது. நரக ஆட்சியும் நரக பொருளாதாரமும் யுத்தமும் சட்ட சபையின் தொடர்ச்சியான அரசியல் வாழ்வுமே விடயமாகும்."

கொழும்பு பங்குமுதல் சந்தை கடந்த புதன்கிழமை குமாரதுங்கவின் பிரகடனத்துக்கு பாதகமான முறையில் பிரதிபலித்தது. அரசியல் ஸ்திரமற்ற நிலையின் மேலாய சாத்தியத்தை எடுத்துக் காட்டியது. சகல பங்கு விலைச் சுட்டெண்களும் 430ல் இருந்து 421 ஆக வீழ்ச்சி கண்டது. மிலங்கா (Milanka) விலைச் சுட்டெண் 646ல் இருந்து 627 ஆக வீழ்ச்சி கண்டது. இந்த வீழ்ச்சியானது ஏற்கனவே மோசமடைந்து செல்லும் பொருளதாராத்திற்கு எதிராக இடம்பெற்றுள்ளது. மத்திய வங்கி முதலாவது காலாண்டுக்கான வளர்ச்சி வீதம் 1.3 சதவீதம் என அறிவித்துள்ளது. இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் 6 சதவீதமாக இருந்துள்ளது.

பெரும் வர்த்தக நிறுவனங்களின் தலைவர்கள் கடந்த வாரம் கூடி, இரு பெரும் அரசியல் கட்சிகளையும் இணையும்படி அழைப்பு விடுத்தனர். இலங்கையின் பெரும் வர்த்தக கூட்டுக்களில் ஒன்றான ஹேற லீசின் மாஜி.பிரதி தலைவர் மகேந்திர அமரசூரிய ஸ்ரீ.ல.சு.க. யூ.என்.பி. (SLFP,UNP) மீது அதிகரித்த அளவிலான நெருக்குவாரத்தை பிரயோகிக்க வேண்டும் என வேண்டினார். அவர் கூறியதாவது: நிலைமை பெரிதும் பாரதூரமானது. எனது கருத்தின்படி தனியார் துறை அரசாங்கத்தின் மீதும் அரசியல் கட்சிகள் மீதும் செல்வாக்கு செலுத்துவதில் காத்திரமானதாக இல்லை." மற்றொரு வர்த்தகத் துறை தலைவர் கூறியதாவது: "நாம் பதாகைகளைக் காவிக் கொண்டு தெருக்களில் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும்" என்றுள்ளார்.

இந்த இரு பெரும் அரசியல் கட்சிகளிடையே ஒரு உடன்பாடு ஏற்படுத்தப்படாது விட்டால் அதனது நிகழ்ச்சி நிரலில் எதுவுமே அமுல் செய்யப்படமாட்டாது என்பதை ஆளும் வர்க்கம் நன்கு அறியும். யுத்தம் சம்பந்தமான பிரச்சினைகள் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தவை. யூ.என்.பி.யும் சரி ஸ்ரீ.ல.சு.க.வும் சரி எந்த ஒரு உறுதியான நிலைப்பாட்டையும் எடுப்பதாக இல்லை. ஒரு புறத்தில் பேச்சுவார்த்தை மூலமான தீர்வை நோக்கிய நடவடிக்கைகள் ஜே.வி.பி. போன்ற சிங்கள பேரினவாத அமைப்புக்களால் கண்டனம் செய்யப்பட்டுள்ளன. மறுபுறத்தில் யுத்தத்தின் தொடர்ச்சி பெரிதும் செலவுக்கிடமாகி உள்ளதோடு தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதும் தோல்வி கண்டு போயுள்ளது. இது தமிழ் கட்சிகளை பைத்தியம் பிடிக்கச் செய்துள்ளது.

யூ.என்.பி.-ஸ்ரீ.ல.சு.க. கட்சிகளிடையேயான வசைபாடும் போட்டி பகிரங்கமாகத் தொடர்ந்து இடம் பெற்றாலும் இரண்டு கட்சிகளும் விடயங்களை அந்தரங்கமாகக் கலந்துரையாடுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. அனுர பண்டாரநாயக்க திங்கட்கிழமை எதிர்க் கட்சித் தலைவர் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ள அதே வேளை குமாரதுங்கவை செவ்வாய்க்கிழமை சந்தித்துள்ளார். பத்திரிகை செய்திகளின் படி ஒரு தேசிய ஐக்கிய அரசாங்கத்தை அமைக்கும் விடயம் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை இரு தரப்பார் மீதுமான நெருக்குவாரம் அதிகரித்தது. பெரும் முதலாளிகள் சம்மேளனங்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் "ஜொயின்ட் பிசினஸ் போரம்' (Joint Business Forum) அவசரமாக கூடியதோடு ஒரு தேசிய நல்லிணக்க அரசாங்கத்தை அமைப்பதை இலக்காகக் கொண்டு பாராளுமன்றத்தை மீளக் கூட்டும்படி அழைப்பு வகுத்தது. இக்கூட்டம் ஒரு கருத்துக்கணிப்பு நடாத்தும் தீர்மானத்தையிட்டு "அதிருப்தி" தெரிவித்ததோடு இதன் விளைவுகளை சுட்டிக் காட்டி ஜனாதிபதியுடன் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்து தரும்படி வேண்டியுள்ளது.

சண்டே டைம்ஸ் ஆசிரியத் தலையங்கம் சுட்டிக் காட்டுவது போல் ஆளும் வர்க்கம் இன்னும் பல தெரிவுகளையும் கொண்டுள்ளது. யூ.என்.பி.யையும் ஸ்ரீ.ல.சு.க.வையும் ஒரு கூட்டரசாங்கம் அமைக்க நெருக்க முடியாது போனால் பதிலீடு ஒன்றில் உடைந்த கூட்டரசாங்கத்தை தொடர்தல் அல்லது இராணுவத்தின் ஒரு பிரிவினருடனும் அரச சாதனங்களுடனும் அவளை ஆதரிக்கும் எந்த ஒரு அரசியல் கட்சியுடனும் சேர்ந்து பெரிதும் எதேச்சதிகார வடிவிலான ஆட்சியை அமைப்பதாக இருந்து கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அரசியல் சேற்றுநிலம்...

*2ம் பக்கத் தொடர்ச்சி*

ஜூலை திட்டங்களை ஆராய்வதற்கென, தென் ஆபிரிக்க பாணியிலான ஒரு உண்மை ஆணைக்குழுவை அமைத்துள்ளதாக ஜூன் 13ம் திகதி அறிவித்துள்ளது. உத்தியோகபூர்வ அறிக்கைகளின் படி 350 தமிழர்கள் வன்முறைகளில் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததுடன் 18,000 வீடுகளும் கடைகளும் நாசமாக்கப்பட்டுள்ளன. இந்தத் தீர்மானம் ஆளும் கூட்டணியில் தமிழ்க் கட்சிகளின் ஆதரவை தொடர்ந்தும் பாதுகாப்பதையும் எதிர்க் கட்சியிலிருந்து வெற்றிகொள்வதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

எவ்வாறெனினும், அரசாங்கத்துக்கும் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் (LTTE) இடையிலான பேச்சுவார்த்தைக்கு களம் அமைப்பதில் தமிழ்க் கட்சிகள் செல்வாக்கு செலுத்துவது மிகவும் குறிப்பிடத்தக்க விடயமாகும். தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்த மாதம் பேச்சுவார்த்தைகள் இடம்பெற இருந்த வேளையில், கலந்துரையாடல்களுக்கு தடங்களை ஏற்படுத்தும் எனக் கூறி எந்த ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் எதிர்த்தது. அதன் பிறகு, எவ்வாறெனினும், த.வி.கூ. தமிழீழ விடுதலை இயக்கத்துடனும் (TELO) அகில இலங்கை தமிழ் காங்கிரசுடனும் (ACT) சேர்ந்து விடுதலைப் புலிகளை சட்டரீதியாக்குவது தொடர்பான அதன் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் தவறியதாகவும், எதிரணியுடன் இணைந்து வாக்களிக்கலாம் எனவும் விமர்சித்தது.

இந்த அனைத்து நடவடிக்கைகளினதும் மிகவும் இம்சையான நிலைமைகள் கூட்டணியின் ஸ்திரமற்ற நிலைமையை வெளிக்காட்டுகின்றன. தமிழ், முஸ்லீம் சிறுபான்மையினரின் கட்சிகளை ஆகர்சிக்க மேற்கொள்ளும் எந்த ஒரு முயற்சியும், நிச்சயமாக, அப்பட்டமான சிங்கள சோவினிச மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) போன்ற அரசாங்கத்தின் ஏனைய பகுதிகளின் அனுதாபத்தை இழக்க வழிவகுக்கும். துண்டித்துக் கொள்வதற்கான எந்த ஒரு நடவடிக்கையும், அல்லது ஆதரவை வெற்றிகொள்வதற்காக சிங்கள அடிப்படைவாதத்துக்கு அழைப்பு விடுப்பது, இரண்டுமே ஸ்ரீ.ல.மு.கா.வினதும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(EPDP), இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்(CWC) போன்ற தமிழ் கட்சிகளதும் ஆதரவை இழப்பதாகும்.

கடந்த வாரம் ஒரு பகிரங்கக் கூட்டத்தில், ஸ்ரீ.ல.சு.க.வின் பொதுச் செயலாளர் எஸ்.பி.திசாநாயக்க ஒரு தேசிய ஐக்கியத்துக்கான அரசாங்கத்துக்காக ஸ்ரீ.ல.சு.க.வுடன் இணையுமாறு யூ.என்.பி.க்கு அழைப்பு விடுத்தார். இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் "சிறுபான்மைக் கட்சிகளது நியாயமற்ற, அயோக்கியமான கோரிக்கைகளை" தடுக்க இணையவேண்டும் என அவர் விவாதித்தார். ஸ்ரீ.ல.மு.கா.வினதும் த.வி.கூ.வினதும் வெறுப்பை உடனடியாகத் தூண்டிய திசாநாயக்கவின் அறிக்கை, அந்தப் பிரேரணையை உடனடியாக விலக்கிக் கொள்ளுமாறு குமாரதுங்கவுக்கு அழுத்தம் கொடுக்கச் செய்தது. அது தனிப்பட்டவர்களின் கருத்து என அந்த முன்மொழிவை வர்ணித்த குமாரதுங்க ஸ்ரீ.ல.சு.க.வோ அல்லது அரசாங்கமோ யூ.என்.பி.யுடன் கூட்டு சேர்வது தொடர்பான எந்த ஒரு தீர்மானத்தையும் மறுதளித்தார்.

பொதுஜன முன்னணியிலான பதட்டநிலை நாட்டின் அழிவுகரமான பொருளாதார நிலைமையால் பிணைக்கப்பட்டுள்ளது - அரசாங்கத்தின் பெருந்தொகையான இராணுவ செலவு, உயர்ந்த எண்ணெய் விலை, வெளிநாட்டு முதலீட்டின் பற்றாக்குறை மற்றும் பூகோளப் பொருளாதாரத்தால் தூண்டப்பட்ட ஏற்றுமதி வீழ்ச்சி. 253 மில்லியன் டாலர் கடனை திருப்பிச் செலுத்த -கடந்த மாதம் முதல் முறையாக வெளியரங்குக்கு வந்தோடு பல ஆர்ப்பாட்டங்களையும் துண்டிவிட்ட- பொருளாதார மறுசீரமைப்பு கோரிக்கைளை ஏற்றுக்கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியம் (IMF) அரசாங்கத்தை நெருக்கி வருகின்றது.

குமாரதுங்க அரசாங்கம் ச.நா.நி.யின் திட்டங்களை ஏற்கனவே அமுல்படுத்த ஆரம்பித்து விட்டது. இந்தக் கோரிக்கைளில் பல கடந்த மார்ச் மாதம் கொண்டுவரப்பட்ட தேசிய வரவு செலவுத் திட்டத்துள் அடங்கியிருந்த அதே வேளை தொழிலாளர்களதும் மாணவர்கள் மற்றும் ஏனையவர்களதும் கண்டனங்களையும் தூண்டியது. கடந்த பல வருடங்களுக்கு மேலாக தனியார் மயத்துக்கும் வேலை இழப்புகளுக்கும் முகம் கொடுத்துவரும் துறைமுக மற்றும் காப்புறுதி ஊழியர்களின் வேலை நிறுத்தங்களும் மறியல் போராட்டங்களும் இடம்பெற்றன. சம்பளப் பிரச்சினைகளால் தனியார் துறை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். மூன்றாம் நிலைக் கல்வியை வெட்டித் தள்ளுவதற்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களை நடாத்தினர். தண்ணீர் கட்டணங்களைத் திணிக்கும் அரசாங்கத்தின் திட்டம் தொடர்பாக சிறு விவசாயிகள் மத்தியில் பரந்த அதிருப்தி காணப்படுகின்றது.

இருந்த போதிலும் அரசாங்கத்துக்கு ச.நா.நி. திட்டத்துடன் முன்செல்வதைத் தவிர வேறு தேர்வுகள் கிடையாது. ச.நா.நி. உத்தியோகபூர்வ பிரதிநிதி, நடீம் உல் ஹக், ஜூன் 10ம் திகதி *சன்டே லீடர்* பத்திரிகைக்கு தெரிவித்ததைப் போல்: "திட்டத்தை அது ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் வகையில் அரசாங்கம் முழு பலத்துடனும் திணிக்க வேண்டும்... திட்டத்தில் ஏதாவது தீவிரமான மாற்றங்கள் இருக்குமானால், அது (கடன் திட்டங்கள்) காலாவதியாகிவிடும்."

## ஒரு சிதறுண்ட எதிர்க் கட்சி

யூ.என்.பி. ஐக்கியமின்றி பிளவுண்டுள்ளது. உண்மையில், கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் பலவீனத்தை விமர்சித்து வந்த யூ.என்.பி. கன்னைகளே முதலில் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை திட்டமிட்டனர். இந்தக் கருத்து வேறுபாடு கொண்டவர்களில் கட்சியின் உப தலைவர் கரு ஜயசூரிய, எதிர்க் கன்னையின் பிரதானியான டபிள்யூ.ஜே.எம்.லொகுபண்டார மற்றும் கட்சியின் துணைச் செயலாளர் ஜி.அதுகோரல ஆகியோர் முக்கியமானவர்களாகும். ஆரம்பத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்த, பின்னர் அதைக் கைவிட்டவர்களான, சிங்கள வார இதழான *றாவய* ஆசிரியர் விக்டர் ஐவன் மற்றும் இலங்கைக்கான ராய்டர் நிருபரான வருன கருணாதிலக ஆகியோரின் போக்கை இவர்கள் ஆதரித்தனர்.

யூ.என்.பி. கருத்து வேறுபாட்டாளர்கள் வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போதே அரசாங்கத்தை கவிழ்க்க திட்டமிட்ட போதும், உயர் நீதிமன்ற நீதிபதியை குற்றஞ்சாட்ட மேற்கொண்ட முயற்சியைத் தடுத்த விக்கிரமசிங்க இதையும் எதிர்த்தார். இன்னமும் தம்மை ஒரு மீளமைப்புக் குழுவாக அழைத்துக் கொள்ளும் இந்தக் குழு, ஏப்பிரல் நடுப்பகுதியில் விக்கிரமசிங்க வெளிநாட்டில் இருந்த போது அவரை நீக்குவதற்கு திட்டமிட்டிருந்தது. நேரத்துக்கு இலங்கை திரும்பியிருந்த சபாநாயகர் அனுர பண்டாரநாயக்க மூலம் யூ.என்.பி. தலைவருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து திட்டம் முழுமையாக கவிழ்ந்தது. அரசாங்கத்துக்கு எதிரான புதிய நகர்வுகள் விக்கிரமசிங்கவுக்கும் அவரது உட்கட்சி எதிரிகளுக்கும் இடையிலான உறுதியற்ற தற்காலிக உடன்பாட்டின் பெறுபேறுகளாகும்.

தேசிய ஐக்கியத்தின் பேரிலான அரசாங்கத்துக்கு ஸ்ரீ.ல.சு.க. பொதுச் செயலாளர் எஸ்.பி.திசாநாயக்க அழைப்பை அடுத்து யூ.என்.பி.யின் உள்ளேயான வேறுபாடுகள் மீண்டும் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்துள்ளன. விக்கிரமசிங்கவின் விசுவாசியான டிரோன் பெர்னான்டோ ஒரு யூ.என்.பி-ஸ்ரீ.ல.சு.க. கூட்டணி தொடர்பான ஒரு சமரசத்தை ஏற்றுக் கொள்ளும் வகையில் குறிப்பிட்டதாவது: "ஒரு இடம் எரிந்து கொண்டிருக்கும் போது நீங்கள் அரசியல் சூதாட்டம் விளையாடமாட்டீர்கள். முதலில் நீங்கள் அனைவரும் சேர்ந்து நெருப்பை வெளியில் தள்ளவேண்டும்."

எவ்வாறெனினும் "பொதுஜன முன்னணிக்கு நாள் குறிக்கப்பட்டுவிட்டது." அரசியல் அதிகாரத்தை கையில் எடுப்பதற்காக "நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவருவதே சிறந்த நடவடிக்கையாகும்" என யூ.என்.பி. அதிருப்தியாளர் காமினி அதுகோரல குறிப்பிட்டுள்ளார். விடயத்தை மேலும் சிக்கலாக்குவதற்காக, யூ.என்.பி.யின் இன்னுமொரு குழுவின் தலைவர் மிலிந்த மொரகொட, ஒரு மூன்றாவது மார்க்கத்தை உருவாக்க முயற்சித்தார். யூ.என்.பி. நம்பிக்கையில்லாப் பிரேரணையுடன் முன் செல்லவேண்டும், என அவர் முன்மொழிந்தார், ஆனால் தேசிய ஐக்கியத்துக்கான எந்த ஒரு அரசிலும் பொதுஜன முன்னணியுடன் பேரம் பேசுவதற்கான சக்தியைப் பலப்படுத்திக் கொள்வதற்கு மாத்திரமே.

அதோடு இணைந்தவாரு, அரசாங்கமும் எதிர்க் கட்சியும் ஒரு நெருக்கடியில் இருந்து இன்னொன்றுக்குள் விழும் ஒரு அரசியல் சீர்குலைவு சித்திரத்தையும் முன்வைத்தனர். அரசியல் ஸ்தம்பித நிலை தொடர்பாகவும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவோ அல்லது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கவோ இலாயக்கற்ற அதன் கட்சிகள் தொடர்பாகவும் பெரும் வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். அவ்வாறே, சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் பெரும் சக்திகள் நம்பிக்கையிழந்துள்ளன. மேற்பார்வையிடும் ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகள் குழுவின் தலைவி லிக்கா ஊசிட்டாலோ, "துரதிஸ்டவசமாக இந்த விடயம் தொடர்பாக பெருமளவிலான சலுகைகளும் கண்காணிப்புகளும் உள்ளன" ஏன கடந்தவாரம் குறிப்பிட்டார்.

ஒரு குறுகிய காலத்தில், அரசியல் ஸ்திரமற்ற நிலை நிச்சயமாகத் தொடரவுள்ளது. அது நம்பிக்கையில்லாப் பிரேரணைகளிலிருந்து தப்பிக்கொண்டாலும் கூட, இந்தப் பலவீனமான ஆளும் கூட்டணி இலகுவாக பிளவுபட்டு சிதறிப்போகக் கூடும். யூ.என்.பி. பாராளுமன்றப் பெரும்பான்மயை வெற்றி கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையில் சித்தியடையுமானால், அது பாராளுமன்றத்துக்கும், ஜனாதிபதி குமாரதுங்கவுக்கும் -தனியாகத் தேர்வுசெய்யப்பட்டு நிறைவேற்று அதிகாரங்களை விரிவுபடுத்திக் கொண்ட- இடையிலான எதிர்த் தாக்குதல்களுக்குக் களம் அமைக்கும்.

# சட்ட மா அதிபர் தமிழ்கைதிகளுக்கான...

*3ம் பக்கத் தொடர்ச்சி*

விஜேசிங்க அறுவரின் பொய் சோடனை வழக்கையும் சவால் செய்து குறிப்பிட்டதாவது: "கொடூரமான சித்திரவதைகளின் கீழ் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களைத் (சிங்களத்தில் எழுதப்பட்ட) தவிர எந்தவொரு சாட்சியையும் அவர்களுக்கு எதிராக முன் வைப்பதில் நீங்கள் தோல்வி கண்டுள்ளீர்கள். ஆனால் அவர்களில் எவருக்கும் சிங்களம் வாசிக்கவோ எழுதவோ தெரியாது. ஆகவே இந்த சட்டவிரோத ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒரு சொல்லும் செல்லுபடியானதல்ல."

இலங்கை துறைமுக அதிகார சபையின் (SLPA) கடற்துறை அதிகாரிகள் தொழிற் சங்கத்தின் உறுப்பினரான டி.ஏ.ஜோதிபால, குறிப்பிட்டதாவது: "பொதுவில் இந்த இளைஞர்களை விடுதலை செய்வதற்காக *உலக சோசலிச வலைத் தளம்* முன்னெடுத்துள்ள உலக ரீதியிலான பிரச்சாரத்திற்கு எனது ஆதரவை விரிவுபடுத்தும் வகையில் இ.து.அ.ச.வின் மெரிடைம் ஊழியர் தொழிற் சங்கத்தின் உறுப்பினர் என்ற வகையிலும் ஒரு தொழிலாளி என்ற முறையிலும் நான் இதை என் கடமையாக்கிக் கொள்கின்றேன். நீதிபதி இல்லாமை, விசாரணைக்கு நேரம் இல்லாமை, விசாரித்த பொலிஸ் அதிகாரிகள் இல்லாமை போன்ற பல காரணங்களின் பேரில் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டு வருகிறது."

மாத இதழான *தியச* சிங்கள சஞ்சிகையை வெளியிடும் தியச கல்வி வட்டம், அஞ்சல் செய்த கடிதத்தில் சுட்டிக் காட்டியதாவது: "குறைந்த பட்சம் அவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஷெனன் குண்டு வெடிப்பு சம்பவத்தில் கூட குற்றவாளிகளாகக் குற்றம் சாட்டப்படவில்லை என்பது எமக்கு அதிர்ச்சியைத் தருகின்றது. கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின்படி இந்த வழக்கும் கூட தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக அரசாங்கத்தால் திட்டமிட்டு நடாத்தப்படும் தொடர்ச்சியான தாக்குதல்களில் ஒன்றாகவே தோன்றுகின்றது."

வெலிசரயில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை அபிவிருத்தி சந்தைப்படுத்தல் நிலையத்தின் ஊழியரான ஏ.ஏ.சிரில் அன்டனி, பண்டாரவளை கொல்மன் தோட்டத்தைச் சேர்ந்த பி.வடிவேல், பண்டாரவளை ஐஸ்லபி தோட்டத்தில் இருந்து கே.சுப்பிரமணியம் மற்றும் பண்டாரவளை ஊவா ஹைலன்ட் தோட்டத்தில் இருந்து க.கமலம் ஆகியோரும் சட்ட மா அதிபருக்கு ஆட்சேபனைக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

ரூமேனியாவில் இருந்து கொன்டன்டின் மிஹாய் கிரிகோர்சு எழுதியதாவது: "பொதுவில் உள்நாட்டு யுத்தத்தின் இயல்பு மற்றும் விசேஷமாக இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இனவாத இயல்பு, விசேஷமாக தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களினதும், மனித உரிமைகள் பெரிதும் மீறப்படும் பிரச்சினையை எழுப்பும். இலங்கை தொழிலாளர் உரிமைகள் மீதான அடி, உலக ரீதியில் தொழிலாளர்களின் நிலைமைகளையும் உரிமைகளையும் மூழ்கடிக்க உதவும். இந்த அறுவரது கைதும் தொடர்ச்சியான தடுத்து வைப்பும் உலகெங்கிலும் உள்ள தொழிலாளர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்த ஜனநாயக உரிமைக்கு எதிரான தாக்குதலையும் இனவாத யுத்தத்தையும் நிறுத்துவதற்கு நான் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் தலைமையிலான பிரச்சாரத்துடன் இணைந்து கொள்கின்றேன். இந்த அப்பாவி ஆறு தொழிலாளர்களையும் விடுதலை செய்வதற்காக சரியான எதையும் உடனடியாக மேற்கொள்ளவும். தகுதி பாராது செய்யவும்."

இலங்கையிலும் அனைத்துலகிலும் உள்ள தொழிலாளர்கள், இளைஞர்கள் மற்றும் புத்திஜீவிகளை இந்தப் பிரச்சாரத்துடன் இணைவதோடு எல்லா குற்றச்சாட்டுக்களையும் விலக்கிக் கொண்டு இந்த ஆறு கைதிகளையும் நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்யக் கோரி இலங்கை அதிகாரிகளுக்கு வேண்டுமாறு சோ.ச.க. அழைப்பு விடுக்கின்றது. இந்த ஹட்டன் ஆறு இளைஞர்களை விடுதலை செய்யும் சட்ட நடவடிக்கைகளுக்காக 100,000 ரூபாய் அவசர நிதி சேகரிப்பை ஜூன் முதலாம் திகதி முதல் ஆரம்பித்துள்ளோம்.

உங்களது உதவி நிதிகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

பொருளாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி,
தபால் பெட்டி இல: 1270,
கொழும்பு.

ஆட்சேபனைக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி:

சட்ட மா அதிபர்,
சட்ட மா அதிபர் திணைக்களம்,
கொழும்பு 12,
பக்ஸ்: 0094-1-436421

உங்கள் ஆட்சேப கடிதங்களில் பின்வரும் வழக்கு இலக்கங்களையும் குறிப்பிடவும்.

கண்டி உயர் நீதிமன்றம்: **NJ -1290/99, NJ 1291/99, 1292/99 and NJ 1295/99**

தயவுசெய்து உங்களது ஆட்சேபனைக் கடிதங்களின் பிரதிகளை அனுப்பி வையுங்கள்:

சோசலிச சமத்துவக் கட்சி,
த.பெ.இல: 1270
கொழும்பு.

உலக சோசலிச வலைத் தளம்
மின்னஞ்சல்: editor@wsws.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தல்பிரித்தானிய அரசியலில்பிரமாண்டமான மாற்றத்துக்கு...

1ம் பக்கத் தொடர்ச்சி

10.74 மில்லியன் வாக்குகளை வெற்றி கண்டது. இது 1997ல் பெற்றதை விட 30 இலட்சம் குறைவானதாகும். 1992ல் கட்சி தோல்வி கண்ட போது நீல் கினொக் பெற்ற 11.56 மில்லியன் வாக்கை விட இது குறைவானதாகும். தொழிலாளர் வர்க்க மேலாதிக்கம் கொண்ட பகுதிகளில் தொழிற் கட்சி பெற்ற வாக்குகளின் பங்கு வீழ்ச்சி கண்டு போயிற்று. பெரும் நகர்ப்புறங்களில் பல மில்லியன் கணக்கானோர் வாக்களிக்கச் செல்லவில்லை. வாக்காளர்களின் எண்ணிக்கையில் 25 சதவீத ஆதரவை வெற்றி கொண்டது என்பதன் அர்த்தம், புதிய தொழிற் கட்சிக்கு (New Labour) வாக்களித்தவர்களைக் காட்டிலும் அதிகமானோர் வாக்களிக்காமல் இருந்து விட்டனர் என்பதேயாகும்.

• மொத்த வாக்குகள் சமூக வர்ணப் பட்டிக்கு குறுக்காக வீழ்ச்சி கண்டது. வறிய தொழிலாளர் வர்க்க பகுதிகளில் வாக்குகள் சராசரியாக 12.8 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டது. ஆனால் செல்வந்த பகுதிகளில் கூட இது 12.1 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டது. எல்லை தொகுதிகளில் 11 சதவீத வாக்குகள் வீழ்ச்சி கண்டன.

1918ன் பின்னர் படுமோசமான வாக்களிப்பாக இடைக்கிடையே ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும் இந்த வரலாற்று ரீதியான ஒப்பீடும் கூட நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. பேராசிரியர்கள் பட்ரிக் டன்லெவி, ஹெலன் மார்கிரெட், ஸ்ரூவாட் வையர் ஆகியோர் ஜூன் 12ம் திகதிய கார்டியன் (Guardian) பத்திரிகையின் கடிதங்களுக்கான பக்கத்தில் எழுதுகையில் "இது அதைவிட மோசமானது. இது ஐக்கிய இராஜ்யத்தில் (UK) ஆகக் குறைந்த வாக்களிப்பு இதுவேதான். ஏனெனில் 1918ல் ஆண்களில் 40 சதவீதமானவர்கள் முதற்தடவையாக வாக்குரிமையைப் பெற்றார்கள். அவ்வாறே சில பெண்களும். யுத்தம் காரணமாக மக்கள் சுற்றிலும் பெயர்ந்து சென்று விட்டார்கள். ஆதலால் புதிய மொத்த வாக்காளர்களில் சுமார் 60 சதவீதத்தினர் வாக்களிப்புக்கு அடியோடு பழக்கப்படாதவர்கள்."

"1918ம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பேசுவது ஆதலால் போலியானது. எமது வரலாற்றில் நாம் லிபரல் ஜனநாயகமாக பார்வையாளருக்கு நேரே கீழாக சுவர்க்கத்தில் இருந்து கொண்டுள்ளோம்."

குறைந்த அளவிலான வாக்களிப்பு ஆட்சிப்பீடம் ஏறும் அரசாங்கத்தை சமரசம் காண செய்யும் என்பதை இனங்காண்பதுடன் மட்டுமன்றி அனைத்து பெரிய அரசியல் கட்சிகளும் மக்களை தமக்கு வாக்களிக்குமாறு விடுத்த வேண்டுகோள்களின் இறுதிநாள் தேர்தல் பிரச்சாரத்தின் முழு அரசியல் போக்கையும் கணக்கில் கொண்டாக வேண்டும். பிளேயர் வாக்காளர்களை வாக்களிக்கச் செல்லுமாறு தூண்டினார். மக்கள் எவ்வாறு வாக்களிக்கிறார்கள் என்பதையிட்டு பிரச்சினை இல்லை என பிளேயர் கூறிக் கொண்டார். அவர்கள் செய்ய வேண்டியது அதுவே என்றார். கடந்த காலத்தில் மக்கள் "வாக்களிக்கும் உரிமைக்காக உயிரைப் பலிகொடுத்தனர்" என அவர் கூறினார். இன்றைய தலைமுறையினர் இந்த அரும்பெரும் உரிமையைக் கட்டிக் காக்க தமது முன்னோடிகளுக்கு கடமைப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் வாக்குரிமைக்காகப் போராடியது யார்? அல்லது நெல்சன் மண்டேலா இன ஒதுக்கலாளர்களுக்கு எதிராக கறுப்பு ஆபிரிக்கர்களின் போராட்டத்தை விளக்கத் தள்ளப்பட்டிருக்கையில் பிரித்தானிய தொழிலாளர் வர்க்கத்தின் வரலாறும் ஜனநாயகத்துக்கும் சமத்துவத்துக்குமான அதன் போராட்டமும் ஒரு மூடிய புத்தகமாக விளங்கியது ஏன்?

1830 பதுகளில் பட்டய இயக்கத்தின் (Chartism) தோற்றத்தோடு சொத்துடமை வர்க்கங்களுக்கு எதிராக உழைக்கும் மக்களின் சமூக, அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டமாக விளங்கியது. ஆரம்பத்தில் அதுவே வாக்குரிமையை விஸ்தரிக்கும் போராட்டத்தினால் உந்தப்பட்டது. பட்டய இயக்கம் ஒரு பரந்த அரசியல் இயக்கமாக விளங்கியது. ஒரு புரட்சிகர கன்னையையும் ஒரு லிபரல் ஜனநாயக கன்னையையும் உள்ளடக்கியதோடு குட்டி முதலாளித்துவ பாட்டாளி வர்க்க சக்திகளையும் சேர்த்துக் கொண்டது. இதனது பெரிதும் தீவிரமான மூலகங்கள் வாக்குரிமையை வெற்றி கொள்வதன் மூலம் தொழிலாளர் வர்க்கம் உலகில் ஒரு அரசியல் சக்தியாக விளங்கும் வாய்ப்பு உள்ளதைக் கண்டன. பட்டய இயக்கத்தினர் (Chartish) அரசின் கடும் அடக்குமுறைகளுக்கு உள்ளாகினர். மத்தியதர வர்க்கத்தின் சில பிரிவினர்களுக்கு வரையறுக்கப்பட்ட வாக்குரிமை விஸ்தரிக்கப்பட்டதோடு இறுதியில் இயக்கம் இனப்பெருக்கமின்றிச் செய்யப்பட்டது.

பாராளுமன்றத்தில் அரசியல் பிரதிநிதித்துவத்துக்கான உழைக்கும் மக்களின் போராட்டம் 60 ஆண்டுகளின் பின்னர் தொழிற் கட்சியின் சிருஷ்டிப்பில் ஒரு பெரும் காரணியாகத் தோன்றியது. மீண்டும் ஒரு முறை அரசியல் நடவடிக்கை முதலாளிகளுக்கு எதிராக தனது நலன்களை அடைந்து கொள்ள தொழிலாளர் வர்க்கத்தின் ஆரம்ப நடவடிக்கைகளால் தீர்மானம் செய்யப்பட்டது. தொழிற் சங்கங்கள் தமது அங்கத்தவர்களின் நெருக்குவாரம் காரணமாக அவை முன்னர் லிபரல்களுக்கு வழங்கி வந்த ஆதரவைத் துண்டித்துக் கொள்ளத் தள்ளப்பட்டன. தொழிற் சங்க எதிர்ப்பு, வேலை நிறுத்த எதிர்ப்பு சட்டங்களை கொண்ட கட்டுமரத் தெப்பங்களை எதிர்ப்பதாக அவர்கள் கோரி வருகின்றனர். தொழிற்கட்சி அமைக்கப்பட்டது தொழிற்சங்கவாதிகளின் அரசியல் கன்னையாகவாகும். ஆனால் இதனது வேலைத் திட்டம் ஒரு வசதிவாய்ப்புக்கள் படைத்த தொழிலாளர் பிரபுக்களின் (Labour Aristocracy) நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது.

ஆளும் வர்க்கத்துக்கான தொழிலாளர் அத்தியாவசிய சேவையானது (Labour essential service) தொழிலாளர் வர்க்கத்துக்கான சமூக, அரசியல் விடுதலை படிப்படியான பாராளுமன்ற சீர்திருத்த வழிமுறை மூலமே வந்தடையும் என வலியுறுத்துவதாக விளங்கியது. தொழிற்கட்சியின் முன்நோக்கு, வர்க்கப் போராட்டத்தை பாராளுமன்ற நடவடிக்கைகளுடன் கூட்டாக இணைந்த போர்க்குணம் கொண்ட கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்திக் கொள்வதன் மூலம் முதலாளிகளுடன் (தொழில் கொள்வோர்-Employers) ஒரு பெரிதும் சாதகமான முறையில் இணைந்து கொள்வதாக விளங்கியது. சோசலிசத்தை ஸ்தாபிதம் செய்வது என்பது பரிணாம வார்த்தைகளின் அர்த்தத்தில் நோக்கப்பட்டது. ஒரு நீண்ட நெடும் காலப்பகுதிக்கு உரியதாக கணிக்கப்பட்டது.

இந்த வரையறைகளுக்கு இடையேயும் தொழிலாளர் வர்க்கம் வாக்களிப்பை ஒரு தனித்துப் பிரித்த ஒரு உரிமையாகக் கொண்டது இல்லை. ஆனால் தமது நலன்களை காப்பதற்கான ஒரு கருவியாகக் கொள்ளப்பட்டது. தமது கட்சி என அவர்கள் கணித்துக் கொண்டுள்ளதை ஆட்சியில் வைத்திருப்பதன் மூலம் இதைச் சாதிக்க முடியும் என கணித்தனர்.

தொழிற் கட்சி அடியோடு ஒரு பெரும் வர்த்தகர் கட்சியாக பரிணாமம் கண்டதும் அரசியல் போக்கில் இருந்து பரந்த உழைக்கும் மக்களில் இருந்தும் அன்னியப்பட்டுப் போனதும் இதனுடன் நெருக்கமாக உறவு கொண்டுள்ளன. சமூக சமத்துவமின்மை முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. அதிகரித்த எண்ணிக்கையிலானோர் கஷ்டங்களையும் நிதி பாதுகாப்பின்மைக்கும் முகம் கொடுக்கின்றனர். பெரும் பணக்காரர்களிடையே முக்கிய கட்சிகள் ஆதரவுக்கு கண் வைத்துக் கொண்டுள்ள வேளையில் தொழிலாளர் வர்க்கம் அரசியல் ரீதியில் வாக்குரிமை இன்றிச் செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் வர்க்கம் அதனது சுயாதீனமான நலன்களைக் காக்க எந்த வழியும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

தொகுதிகளின் எண்ணிக்கை அர்த்தத்தில் தேசிய ரீதியில் கணிசமான அளவு வெற்றி கண்டு கொள்ள முடிந்த ஒரே கட்சி லிபரல் ஜனநாயகவாதிகள். ஆனால் அதன் வாக்குகளிலான இரண்டு சதவீத அதிகரிப்பு பெருமளவு சனத்தொகையினை நோக்கிச் செல்லும் அரசியலின் எந்த ஒரு பெயர்ச்சியையும் கொண்டிருக்கவில்லை. தேசிய சுகாதார சேவையை ஒழிப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்து போட்டியிட்ட இரண்டு சுயேட்சை வேட்பாளர்களுக்கு கிடைத்த பெருமளவு வாக்கானது, ஒரு பதிலீட்டு முன்நோக்கை கடைப்பிடிப்பதற்கு மாறாக அரசியல் விரக்தியாக வெளிப்பட்டது.

பொதுவில் சோசலிசக் கூட்டு (Socialist Alliance) ஸ்கொட்லாந்து சோசலிச கட்சி (Scotland Socialist Party) சோசலிச தொழிற் கட்சி (Socialist Labour Party) போன்ற தீவிரவாதக் குழுக்கள் சிறிய எண்ணிக்கையிலான வாக்குகளையே பெற்றன. தொழிற் கட்சியை (Mark 2) உருவாக்கி "பழைய தொழிற் கட்சி" பெறுமானங்களுக்கு திரும்புவோம் என்ற அவர்களின் அழைப்பினால் நம்பிக்கை கொண்டுள்ளோர் சிலரே. இந்த அடிப்படையில் ஒரு புதிய தொழிலாளர் வர்க்கக் கட்சியை கட்டியெழுப்புவது என்பது சாத்தியம் அல்ல.

தொழிற் கட்சி ஒரு சீர்திருத்தவாத கட்சி என்ற கருத்து, தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு கணிசமான பகுதியினருக்கு ஒன்றில் ஒரு நீண்டகால நினைவு அல்லது அவர்களின் பெற்றோர் அல்லது மூதாதைகள் அதைப் பற்றிச் சொல்லும் ஏதோ ஒன்றாக உள்ளது. பிளேயரும் புதிய தொழிற் கட்சியும் (New Labour Party) 1970பதுகளுக்கு நீண்டு செல்லும் ஒரு அரசியல் போக்கினை பூர்த்தி செய்வதைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. அன்றில் இருந்து தொழிற் கட்சி அதிகாரத்துவத்தின் உள்ளேயான சக்திகள் தொழிலாளர் வர்க்கத்துடனான கட்சியின் வரலாற்றுத் தொடர்பை உடைத்து எறிவதில் ஈடுபட்டுள்ளன. தொழிற் கட்சியை அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் ஒரு பிரித்தானிய பாணியில் கண்டுபிடிக்க அல்லது ஐரோப்பிய பாணியிலான 'மக்கள் கட்சியை" (Peoples Party). கண்டுபிடிக்க முயற்சிக்கின்றன.

அரசியல் ரீதியில் படிப்பறிவு மிக்க தொழிலாளர்கள் இது இடம்பெற்று விட்டுள்ளதைக் காணலாம். ஆனால் அவர்களது பழைய கட்சிக்கு ஏற்பட்ட பிழை என்ன? இல்லையேல் ஏன் அவர்கள் புதிய ஒன்றை அமைக்க முயற்சிக்கிறார்கள் என்பதை புரிந்து கொண்டாக வேண்டும். பல்வேறு தீவிரவாதக் குழுக்களும் பாரதூரமானதாகக் கொள்ளாத சுருக்கமான விடயம் இதுவேயாகும்.

உத்தியோகபூர்வமான அரசியலில் இருந்து விலகி நிற்பது ஒரு முற்போக்கான அபிவிருத்தியை பிரிதிநிதித்துவம் செய்வதாக நம்புவது ஒரு பெரும் தவறாகும். அந்த அளவுக்கு இந்த அரசியல் மாற்றங்களின் பேரிலான தொழிலாளர் வர்க்கத்தின் அக்கறை பெரிதும் சாதகமானதாக விளங்கும். சகல கட்சிகளையும் ஒரே கட்சியாக அவர்கள் கணிப்பதால் பலர் வாக்களிப்பதற்கு நியாயம் இருப்பதாக காணவில்லை. தொழிற் கட்சிக்கு வாக்களித்தவர்களிடையேயான மனோநிலையானது 18 வருட ஆட்சிக் காலத்தில் டோரிகள் இழைத்த சமூக அநீதிகளை ஒழிப்பதற்கு பிளேயருக்கு தயக்கத்துடன் ஒரு கடைசி சந்தர்ப்பம் வழங்குவதாக உள்ளது.

மேலும் இரண்டு தேர்தல் தொகுதிகளில் 11000 வாக்குகளை வென்ற பிரித்தானிய தேசியக் கட்சிக்கு ஒல்ட்ஹாமில் கிடைத்த வாக்குகள் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு நனவான அரசியல் அக்கறை இல்லாது போகுமிடத்து பாசிசக் குழுக்கள் சமூகப் பதட்டங்களை தமது சொந்த நோக்கங்களுக்காக சுரண்டிக் கொள்ளலாம்.

ஆனால் அத்தகைய தீவிர வலதுசாரி சக்திகளின் வளர்ச்சி தவிர்க்க முடியாதது என்ற முடிவுக்கு எவரும் வரமுடியாது. மாறாக பொது அரசியல் மனோநிலையானது பெருமளவிலான நிய்யாயத்துக்கும் சமூக நீதிக்குமான ஒரு விருப்பின் ஆரம்பத்தினால் பண்பாக்கம் செய்யப்படுகின்றது. இடதுசாரி புறத்திலான இடைவெளி தொடர்ந்தும் நிரப்பப்படாததாக திறந்து இருந்து வரும் வரையுமே வலதுசாரிகள் மேலாதிக்கம் செலுத்த முடியும்.

உலகப் பொருளாதாரத்திலான வீழ்ச்சியும் பிரித்தானியா ஐரோப்பிய தனி நாணயத்துக்கும் பிளேயரின் அரசாங்கத் துறை தனியார்மயத்துக்கும் இயைந்து போக வேண்டுமா என்பதன் பேரிலான பிளவும் ஒரு பெரும் அரசியல் கிளர்ச்சிக்கான கூட்டு பரிகாரமாக இருந்து கொண்டுள்ளன.

இந்தச் சூழ்நிலையின் கீழ் உத்தியோகபூர்வ அரசியல் மாளிகை, சனத்தொகையின் பெரும்பான்மையினரிடம் இருந்து பிளவுபட்ட நிலையில் வர்க்கப் போராட்டத்தை பழைய வடிவங்களுள் உள்ளடக்கி வைக்க இலாயக்கற்றதாக விளங்கும் என்பதை நிரூபிக்கும். தொழிற் கட்சியை மீளப் புதுப்பாணியாக்கிக் கொள்ளும் முதலாளி வர்க்கத்தின் முயற்சிகள் அதனது அழிவுகளை நிரூபிக்கும். பிரித்தானிய அரசியலில் ஒரு புதிய சகாப்தம் உதயமாகிக் கொண்டுள்ளது. அதில் வாழ்க்கைத் தரங்களையும் ஜனநாயக உரிமைகளையும் காக்க முயற்சிக்கும் தொழிலாளர்கள் சோசலிச சமத்துவக் கட்சியினால் (Socialist Equality Party) முன்வைக்கப்பட்டுள்ள சோசலிச, அனைத்துலக முன்நோக்கைச் சூழ அணிதிரள வேண்டும்.

# யாழ்ப்பான நூலகம் தீமூட்டப்பட்டு இரண்டு தசாப்தங்கள்...

14ம் பக்கத் தொடர்ச்சி

குறிப்பிட்டது. மற்றொரு பிரசுரம் தமிழ் தோட்டத் தொழிலாளர்களை எச்சரித்து கண்டனம் செய்தது. "சிங்கள கலாச்சாரமும் பௌத்தமும் மலைநாட்டு கிராமத்தவர்களும் மறைந்து போய்விடுவதை நாம் காண்கிறோம்" என்றது. தமிழ் வர்த்தகர்களை தொடர்ந்து தாக்குகையில் இது "மொத்த, சில்லறை வியாபாரம் எல்லாம் இப்போது அடியோடு இந்திய நாட்டவர்களின் கைகளிலேயே இருந்து கொண்டுள்ளது" எனவும் பிரகடனம் செய்தது.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே யூ.என்.பி. பௌத்த பிக்குகளின் ஒரு பகுதியினரின் ஆதரவுடன் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்களுக்கும் அவர்களின் வீடுகள் கடைகள் மட்டுமன்றி மத்திய மலைநாட்டிலும் இத்தாக்குதல்களை கட்டவிழ்த்து விட சிங்கள காடையர்களை கட்டவிழ்த்து விட்டது. யாழ்ப்பாண நூலகம் தீயிட்டுக் கொழுத்தப்பட்டமை யுத்தத்துக்கு இட்டுச் சென்ற ஒரு போக்கின் ஒரு திருப்பு முனையை குறித்து நின்றது.

இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கம் காலங்கடந்த விதத்தில் 1998ல் நூலகத்தை மீளக் கட்டியெழுப்பும் தீர்மானத்தை அறிவித்தது. பெரும் வல்லரசுகளும் இலங்கையின் பெரும் வர்த்தக நிறுவனங்களில் சில பகுதியினரும் யுத்தத்துக்கு பேச்சுவார்த்தை மூலம் முடிவு காணும்படி கோரியதைத் தொடர்ந்தே இம்முடிவு எடுக்கப்பட்டது. ஒரு தற்காலிக நூலகத்தை ஸ்தாபிக்க அன்றைய பொதுஜன முன்னணி தகவல் அமைச்சர் மங்கள சமரவீரவினால் கூட்டப்பட்ட ஒரு கூட்டத்தில் அவர்: "முன்னைய நூலகம் பேரினவாதத்தினதும் தவறான அரசியலின் வழிகாட்டலினதும் சக்திகளால் நாசமாக்கப்பட்டதை இன்றைய அரசாங்கம் ஒரு கெடுதியான செயலாகக் கருதுகின்றது" என்றார்.

எவ்வாறெனினும் அன்றும் சரி இன்றும் சரி பொதுஜன முன்னணி அரசாங்கம் ஒன்றில் "பேரினவாத சக்திகளையோ" அல்லது "தவறான அரசியலின்" தன்மையையோ இனங்காண முடியவில்லை. அவ்வாறு செய்வதானது யாழ்ப்பாண நூலகத்தின் தீவைப்புக்கும் யுத்தத்தை வெடிக்கச் செய்த தமிழ் சிறுபான்மையினருக்கு எதிரான ஏனைய அட்டூழியங்களுக்கும் பின்னணியாக இருந்து கொண்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் பேரினவாத அரசியலை ஊக்குவிக்கும் பொதுஜன முன்னணியின் ஏனைய சகாக்களதும் பாத்திரத்தை பற்றி பல கேள்விகளை எழுப்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கும் சித்திரவதைக்கும் எதிராக ஆர்ப்பாட்டங்கள்

விஜித சில்வா
10 ஜூலை 2001

கடந்த வெள்ளிக்கிழமை நாட்டின் பாதுகாப்புப் படையினரால் தமிழ் பெண்கள் கொடூரமாக சித்திரவதை செய்யப்படுவதை எதிர்த்து இலங்கை முழுவதும் இடம்பெற்ற கண்டனப் பிரச்சாரங்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்குபற்றினார்கள். இந்த ஆர்ப்பாட்டங்கள் கொழும்பு மத்தியில் உள்ள ஒரு பாதுகாப்பு சோதனைச் சாவடியில் ஒரு இளம் தாய் சமீபத்தில் பாலியல் வன்முறைக்கு உள்ளானதைச் சுட்டிக் காட்டுவதாக விளங்கியதோடு தமிழ் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களின் அதிகரிப்பினை வெளிச்சம் போட்டு காட்டுவதாகவும் இருந்தது.

யுத்தப் பிராந்தியமான வடக்கிலும் கிழக்கின் சில பகுதிகளிலும் கடைகள், காரியாலங்கள், பாடசாலைகள் மூடப்பட்டதோடு போக்குவரத்தும் ஸ்தம்பிதம் அடைந்தது. வெள்ளிக்கிழமை காலை மத்திய கொழும்பில் தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் அடைக்கப்பட்டன. மாலை நூற்றுக்கணக்கான மக்கள் "தமிழ் பெண்களைத் துன்புறுத்துவதை நிறுத்து!" "குற்றவாளிகளுக்கு தண்டனை கொடு." "எமக்கு நீதி வேண்டும்" என கோஷித்து கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரச்சாரத்துக்கு ஆதரவளிப்பதற்காக நாட்டின் மத்திய மலையக மாவட்டங்களின் தோட்டங்களில் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். சில தோட்டங்களில் வேலைக்குச் சமூகமளிக்காதவர்களின் எண்ணிக்கை 60 வீதமாக உயர்ந்திருந்தது.

ஆர்ப்பாட்டங்களைத் தூண்டிய சம்பவம் நடைபெற்றது ஜூன் 24ம் திகதியாகும். முதல் நாள் இரவு ஒரு இளம் தமிழ் பெண் வேலைமுடிந்து தன் கணவனுடன் வீடு திரும்பிகொண்டிருந்த போது மத்திய கொழும்பு மருதானை பாதுகாப்புச் சோதனைச் சாவடியில் பொலிசாரும் இராணுவத்தினரும் அவர்களை தடுத்து நிறுத்தியுள்ளனர். பொலிசார் அவளது விலாசத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் மறுநாள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் (LTTE) ஏதும் தொடர்புகள் உள்ளதா என விசாரணை செய்யும் சாட்டில் அவளிடம் சென்றுள்ளனர். அவள் சோதனைச் சாவடிக்கு அருகாமையில் உள்ள தனிமையான ஒரு இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு ஆறு பொலிசாராலும் இராணுவத்தாலும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டாள். அவர்கள் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வார பிரச்சாரம் இந்த வருடத்தில் இடம்பெற்றிருந்த ஒரு தொகை வன்முறை சம்பவங்களுக்கும் கண்டனம் தெரிவித்தது.

*மார்ச் 28ம் திகதி, நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பாக ஒரு அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்ய யோகலிங்கம் விஜிதாவுக்கு உயர் நீதி மன்றம் அனுமதி வழங்கியது. கடந்த வருடம் ஜூன் 21ம் திகதி திருகோணமலையில் கைதுசெய்யப்பட்ட 27 வயதான விஜிதா, விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையாளி என குற்றம் சாட்டப்பட்டு நீர்கொழும்புக்கு கொண்டுவரப்பட்டார். செப்டம்பர் 20ம் திகதி நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்படுவதற்கு முன்னதாக அவர் ஜூன் 26ம் திகதி கொழும்பு பயங்கரவாத புலனாய்வுத் துறையிடம் கையளிக்கப்பட்டார் (TID).

பொலிசாரும் டீஐடி நபர்களும் கையாண்ட சித்திரவதைகள் தொடர்பான தெளிவான விபரங்களை விஜிதா வழங்கியுள்ளார். பெற்றோலில் கலக்கப்பட்ட மிளகாய் தூள் நிரப்பிய பொலிதீன் பாக்கினால் அவளின் முகத்தை மூடிக் கட்டினர். வயராலும் தடியாலும் அவளைத் தாக்கினர். விரல்களிலும் நகங்களிலும் குண்டூசிகளை ஏற்றினர். மிளகாய்த் தூளில் தோய்த்தெடுக்கப்பட்ட வாழைப் பொத்தியை அவளது மர்ம உறுப்புக்குள் திணித்தனர். ஒரு விடுதலைப் புலி அங்கத்தவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதி அதில் கையெழுத்திடுமாறு பொலிசார் தன்னை பலவந்தப்படுத்தியதாக அவர் குறிப்பிடுகின்றார்.

கடந்த செப்டம்பர் மாதம் இந்த இளம் பெண் வைத்திய சிகிச்சைக்காக கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோது ஒரு துணை சட்ட வைத்திய அதிகாரியிடம் தனது கதையைக் கூறியுள்ளாள். நீர்கொழும்பு பொலிசாரின் தனிப்பட்ட நண்பர் ஒருவர் செய்து கொண்ட பொய் முறைப்பாட்டின் பேரில் பொலிசார் செயற்பட்டதாக அவள் குற்றம்சாட்டினாள். அவளது மனு நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தையும் டீ.ஐ.டி.யையும் சேர்ந்த முக்கிய உத்தியோகத்தர்கள் உட்பட எட்டுபேரை பேர் குறிப்பிட்டுள்ளது. அவளது முறைப்பாடுகள் சம்பந்தமாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட மனித உரிமை அமைப்புகள் எதுவித கவனமும் செலுத்தவில்லை எனவும் அவள் குறிப்பிட்டுள்ளாள்.

அவளது வழக்கு பரந்தளவில் பகிரங்கப்படுத்தப்பட்டதை அடுத்தும், அவளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்ள உத்தரவிடுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நெருக்கியதன் பின்னரே அவள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டாள்.

* ஏப்பிரலில். மன்னாரிலும் மட்டக்களப்பிலும் இரண்டு தமிழ் பெண்களை பாலியல் வல்லுறவு கொண்டு சித்திரவதை செய்யப்பட்டது சம்பந்தமாக -சிவமணி வீரகோன்(24 வயது), நந்தகுமார் விஜிகலா (22 வயது)- ஆயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றனர். மன்னாரில் உள்ள தனியார் விடுதிகளில் மேற்கொண்ட சோதனைகளை அடுத்து அவர்கள் விஜிகலாவின் கணவனோடும் சிவமணியின் ஆறுவயது மகனுடனும் மார்ச் 10ம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இந்த இருவரும் மன்னாரில் உள்ள நாசகார செயல்கள் தடுப்புப் பிரிவிற்கு(CSU) வான் மூலம் கொணரப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டதோடு பாலியல் ரீதியாகவும் துன்புறுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனவும் குண்டுகளை வைத்திருந்ததாகவும் சிங்களத்தில் எழுதப்பட்ட "ஒப்புதல் வாக்குமூலத்தில்" கையொப்பமிடுமாறு நெருக்கப்பட்டுள்ளனர். சிவமணியும் விஜிகலாவும் ஏப்பிரல் 9ம் திகதி மன்னார் மாவட்ட நீதிபதியினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும் அவர்களின் நடமாட்டங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

சர்வதேச மனித உரிமை அமைப்பினதும் சர்வதேச மன்னிப்புச் சபையினதும் விசாரணைகளைத் தொடர்ந்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு விசேட விசாரணைக் குழுவை நியமிக்கத் தள்ளப்பட்டார். ஏப்பிரல் 9ம் திகதி, சந்தேக நபர்களை கைதுசெய்ய ஒரு அடையாள அணிவகுப்பை நடாத்துமாறு நீதிபதி பொலிசாருக்கு உத்தரவிட்டார். பாலியல் வன்முறையிலும் சித்திரவதைகளிலும் சம்பந்தப்பட்டவர்கள் என 12 பொலிசாரையும் இரண்டு கடற்படை அதிகாரிகளையும் இந்த இரு பெண்களும் அடையாளம் காட்டினர்.

சிங்கள அடிப்படைவாதிகள் இந்த வழக்கின் மூலம் தமிழர் விரோத உணர்வுகளை தூண்டிவிடும் நோக்கம் கொண்டிருந்தனர் என்பதற்கு பல சாட்சியங்கள் உள. சோவினிசக் கட்சியான சிங்கள உறுமயவில் இருந்து பிரிந்த, சிங்கள ஜாதிக சங்கத்தின் தலைவரான, எஸ்.எல்.குணசேகர கடற்படை அதிகாரிகளையும் பொலிசாரையும் பாதுகாக்கும் சட்டத்தரணியாக ஆஜரானார்.

பெண்களை அவமானப்படுத்தும் அநாகரிகமான முயற்சி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டது. முன்னாள் சீ.எஸ்.யூ. உத்தியோகத்தர் என்.பீ.என்.சுரவீர, மன்னார் ரோமன் கத்தோலிக்க ஆயரான, ராயப்பு ஜோசப், இந்த இரண்டு பெண்களையும் அவர்களது குற்றச்சாட்டுக்களை பகிரங்கப்படுத்துமாறு தூண்டியதாக கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் ஒரு எதிர்ப்பு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். ஆயர் "விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான உறவு வைத்திருப்பதாக" இந்த உத்தியோகத்தர் குற்றம் சாட்டியுள்ளார். எவ்வாறெனினும் இந்த இருவரும் பாலியல் ரீதியில் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதை பரிசோதித்து உறுதிப்படுத்திய மாவட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை, இந்தப் பெண்களின் குற்றச்சாட்டுகளுக்கு சாதகமாக உள்ளதாக பாதிக்கப்பட்டவர்களின் சட்டத்தரணி சுட்டிக் காட்டியுள்ளார்.

*மே மாதத்தில் இரண்டு தமிழ் யுவதிகள் பொலிசாரால் பாலியல் வன்முறைக்கு உள்ளானது பற்றிய மேலும் ஒரு வழக்கு அம்பலத்துக்கு வந்துள்ளது. கொழும்பு-பம்பலப்பிட்டி விடுதியொன்றில் தங்கியிருந்த இந்த இரண்டு பெண்களும் இன்னமும் பொலிஸ் தடுப்புக் காவலில் உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் தன்னைப் பொலிசார் பாலியல் ரீதியில் தாக்கியதாக குற்றம் சாட்டி அடிப்படை உரிமைகள் வழக்கு ஒன்றினை தாக்கல் செய்துள்ளார். தன்னால் வாசிக்க முடியாத சிங்களத்தில் எழுதப்பட்ட ஒரு ஆவணத்தில் தன்னைக் கையொப்பமிடுமாறு பொலிசார் பலவந்தப்படுத்தியதாக குற்றம் சாட்டும் அவர் தான் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து மாற்றப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

முதலில் பொதுஜன முன்னணி (PA) அரசாங்கம் பாலியல் வல்லுறவுகள், சித்திரவதைகள் சம்பந்தமான குற்றச்சாட்டுக்களை பாதுகாப்புப் படையில் உள்ள விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிறிய "கெட்ட கும்பல்" "புத்தி மாறாட்டத்தால்" செய்தவை போல ஒதுக்கித் தள்ளியது. ஆனால் அண்மைய குற்றச்சாட்டுக்கள் ஒப்பீட்டளவில் விரிவடைந்துள்ளதையும் தொடர்பு சாதனங்களின் அனுதாபத்தைப் பெற்றுள்ளதையும் வழக்குகள் பிரசித்தி அடைந்ததைத் தொடர்ந்து சர்வதேச ரீதியில் எழுந்துள்ள அழுத்தங்களும் ஆளும் கும்பலின் அவதானத்தைத் தூண்டியுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் *டெயிலி மிரர்* பத்திரிகை "ஆட்டுத் தோல் போர்த்திய ஓநாய்" எனும் தலைப்பிலான கட்டுரையில் குறிப்பிட்டதாவது: "கடந்த மூன்று வருட காலத்துக்குள், 200க்கும் அதிகமான பெண்கள், அதிகளவில் சிறுபான்மை தமிழர்கள், பொலிசாராலும் ஆயுதப் படை அதிகாரிகளாலும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்பு ஒன்று விடுத்த பயங்கரமான குற்றச்சாட்டு, கவலையை இரட்டிப்பாக்குகிறது." அந்தக் கட்டுரை சிறப்பியல்பற்றவகையில் சுட்டிக்காட்டியதாவது: "தமிழர்கள் ஏனைய பிரஜைகளுடன் ஒற்றுமையானவர்கள், சம உரிமை கொண்டவர்கள். சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக ஒரு சாதாரணத் தமிழராக இருப்பது குற்றமாகவே தெரிகிறது."

மேலும் முதலில் கண்டன அறிக்கைகளை வெளியிடுவதை தாமாகவே மட்டுப்படுத்திக் கொண்டிருந்த சில தமிழ் கட்சிகள், தமிழர்கள் நடாத்தப்படும் விதம் சம்பந்தமாக வளர்ச்சி கண்டுவரும் எதிர்ப்புக்கு பிரதிபலிக்கத் தள்ளப்பட்டுள்ளன. அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ளதோடு ஆழமான ஒரு அரசியல் நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் ஒரு நிலைமையின் கீழ், தமிழர் விடுதலைக் கூட்டணி(TULF) மற்றும் தமிழீழ விடுதலை இயக்கம்(TELO) போன்ற எதிர்க் கட்சிகள் மட்டுமல்ல ஆளும் கூட்டரசாங்கத்தின் ஒரு பகுதியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும்(CWC) அண்மைய ஆர்ப்பாட்டங்களுக்கு தமது ஆதரவை வழங்கின.

இந்த மாதத்தின் கடைப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட உள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பாக தற்போது இந்த சகல கட்சிகளும் பொதுஜன முன்னணியுடனோ அல்லது எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடனோ (UNP) கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு வருகின்றன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான மோசமான நீண்ட யுத்தம் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கும், பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் மேலதிக அதிகாரங்களை வழங்கும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை திணிப்பதற்கும், மற்றும் தமிழர் எதிர்ப்பு நிலைமையை தூண்டிவிடுவதற்கும் பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யுமே பொறுப்பாளிகளாகும். ஆகவே தமிழ் பெண்கள் சித்திரவதை செய்யப்படவும் பாலியல் வல்லுறவுகளுக்கு உட்படவும் ஒரு நிலைமையை சிருஷ்டித்தமைக்கு அவர்களே பொறுப்புச் சொல்லியாக வேண்டும்.




சந்தா தபால்கட்டணம்உட்பட
இதழ்3 ரூ36
இதழ்6 ரூ68
இதழ்12 ரூ128
இதழ்24 ரூ248

விபரங்களுக்கு :
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
தபால்பெட்டி இலக்கம்: 1270
கொழும்பு.
தொலைபேசி: 553831

**சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்**

பெயர்: ...................................................................

முகவரி: ...................................................................

கையொப்பம்: ........................................திகதி: ........................................

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:

பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
தபால் பெட்டி இலக்கம்: 1270, கொழும்பு.
தொலைபேசி: 553831

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90,1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு–10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் இல6, போதிராஜாராம மாவத, கொழும்பு10ல் உள்ள பிரின்ட் அன்ட் பிரின்ட் கிரபிக் லிமிடட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.